
கல்கி
KALKI 11.7.65
35



TIARA IS THE PERFECT ENDING TO A BATH

Want to feel utterly, wickedly feminine after a bath? Sprinkle Tiara Lanolin Talc lavishly over yourself. Tiara will give you an aura of misty loveliness...caress you... cover you in a mass of whisper-soft fragrance. □ It contains lanolin, nature's own conditioning agent, which protects your skin, prevents chafing. It acts as a deodorant too. Use Tiara regularly. It is the perfect ending to a bath, the perfect beginning to an evening.



AVAILABLE IN TWO SIZES

J.K. Helene Curtis

SOLE DISTRIBUTORS IN INDIA: **SPENCER & CO. LTD.**
Spencers Building, Forjett Street, Bombay 26 □ 153 Mount Road, Madras 2 □ 70 Diamond Harbour Road, Kidderpore, Calcutta 23 □ 19 A Alipore Road, Delhi 6

கல்கி
பொருளடக்கம்

விசுவாவசு ஆனி 27 ○ ஜூலை 11

3 — போர் நிறுத்தம்
5 — இசையுலகில் இன்னொருபடி
6 — ராஜாஜியின் கருத்துக்கள்
9 — காலச் சக்கரம்
18 — ஸ்ரீ வியாஸ பூர்ணிமை
23 — கந்தன் கருணை
30 — இன்றைய நாகரிகம்
32 — வெள்ளித்திரை விமரிசனங்கள்
34 — அவன் எங்கே?
38 — ஜீவகீதம்
48 — சித்திரக் களஞ்சியம்
52 — ஆண்டாள் கல்யாணம்
58 — சங்கரி பேசுகிறாள்!
65 — சங்காரம்
77 — மட சாம்பிராணி!

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




PK
இதை நான்
என் விருப்பப்படி
உபயோகிப்பேன்
அமெரிக்க ராணுவ
உதவி
இதை நான்
என் விருப்பப்படி
உபயோகிப்பேன்
பாதுகாப்புச்
சட்டம்
பஞ்சாபி
குழப்பம்
நீர்தான் சமாதானப்
படுத்த வேண்டும்
கடனைத்
திருப்பித்
தர கடன்
தேவை
குறைந்த
வட்டியில்
கடன்
தேவை
15 ஆண்டு சுதந்திர ஆட்சியில்!
அல்ஜியர்ஸ்
அயூப்
சுகர்னோ
அல்ஜியர்ஸிலிருந்து திரும்புகிறார்கள்!



மலர் 24 ● இதழ் 50

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

போர் நிறுத்தம்

ரணகளமாக இருந்த கட்ச் - ரண் பகுதியில் அமைதி பிறந்து, இந்தியா — பாகிஸ்தான் ஆகிய இரு நாட்டுப் படைகளும் பழைய நிலைக்கே திரும்பியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு நிகழ்ச்சி. சமீப காலத்தில் நம் நாட்டில் துர்லபமாக நடைபெறும் ஒருசில சுபநிகழ்ச்சிகளில் இந்தப் போர் நிறுத்தமும் ஒன்று.

நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமோ, அது பலனளிக்காவிடில் மற்றவர் மத்தியஸ்தத்துடனோ இந்தியாவும் பாகிஸ்தானும் எல்லைச் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென 1959ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும், 1960ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் இவ்விரு நாடுகள் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறிச் சமீப காலத்தில் பரஸ்பரத் தாக்குதல் நிகழ்ந்தது மிகவும் துர்ப்பாக்கியமாகும். அதிருஷ்டவசமாக அந்த நிலைமை இன்று மாறியிருப்பதற்கு ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்; மத்தியஸ்த யோசனைகள் கூறிய பிரிட்டிஷ் பிரதமருக்கு நன்றிகூற வேண்டும்; யோசனைகளை நல்ல முறையில் எடுத்துக்கொண்டு அமுல் செய்த இந்தியா — பாகிஸ்தான் ஆட்சியாளருக்கும் நன்றி செலுத்த வேண்டும்.

இது தாற்காலிகப் போர் நிறுத்தமாயிராமல், பேச்சு வார்த்தைகள் மூலமே இரு நாடுகளும் தங்கள் எல்லைப் பிரச்னையையும், முடியுமானால் காச்மீர விவகாரத்தையும் நிரந்தரமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இனி நம் பிரார்த்தனை.

சில தனி நபர்களும், கட்சிகளும் ஆத்திரவசமாகிறார்கள். இவர்களின் கோபக் கூப்பாட்டை இந்திய அரசாங்கம் பொருட் படுத்தலாகாது. எவ்வளவோ எதிர்ப்புக்களிருந்தும் எவ்வாறோ போர் நிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டதற்காக நாடு தன்னைத்தானே பாராட்டிக் கொண்டு பெருமைப்படலாம்.

வெளி எதிரிகள் சமயம் பார்த்துக்கொண்டிருக்கும்வேளையில் இந்தியாவோ பாகிஸ்தானோ ஒன்றோடொன்று போரிட்டால் அது இறுதியில் இந்நாடுகள் தற்கொலை செய்துகொள்வதாகவே முடியும். நம்மிடம் உண்மையிலேயே அக்கறை கொண்டுள்ள மேல்நாடுகள், நாம் இவ்வாறு பயங்கரமான தவறு செய்ய நம்மை அநுமதிக்கமாட்டா என்பதை இப்போது கண்டு மனநிறைவு பெறுகிறோம். யார் உண்மையான நண்பர்கள் என்பதையும் இப்போது கண்டோம். உண்மையான நண்பர்களின் சக்தி பொருந்திய வாக்குக்கு இப்போது இரு நாடுகளும் கட்டுப்பட்டது போலவே எப்போதும் கட்டுப்படும் என்றும், இதனால் அபாயம் தவிர்க்கப்படும் என்றும் நம்பிக்கை உண்டாகிறது.

பாகிஸ்தானைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்துகொண்டு, சீனத்தின்மீதே நம் சக்தியை ஒருமுகப்படுத்துவோம். மேல் நாட்டுடன் ராணுவ உறவு கொள்வதே வழி என்பதை உணருவோம். நியாயமான முறையில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக நட்பு நாடுகளின் சக்திகளை ஒன்று திரட்டுவதே இன்றைய தேவை என்பதைக் கண்டு, அவ்வழியில் நாமே முதலடி எடுத்து வைத்து வேண்டியதை நல்ல முறையில் செய்து விமோசனம் பெறுவோம்.

அகிலாண்டநாயகியின் ஆலயத் திருப்பணி

'பாரோடு விண்ணும் பரந்து' நிற்கும் இறைவனைப் பஞ்சபூதமாக வழிபடும் மகா க்ஷேத்திரங்களில் திருச்சிமாநகரைச் சேர்ந்த திருஆனைக்காவும் ஒன்று. இங்கு காவிரி ஒரு மருங்கும் கொள்ளிடம் ஒரு மருங்குமாக அணைந்தோடும் தீவில் ஜகன்மாதா நீரையே லிங்கமாக்கிக் கருணை சமுத்திரமான கைலாயநாதனை வழிபட்டதால் இது அப்பு க்ஷேத்திரமாக விளங்கி வருகிறது. அனவரதமும் நீரில் குளிரக் குளிர மூழ்கியுள்ள மகாதேவன் வெண்நாவல் மரத்தடியே எழுந்தருளியுள்ளதால் ஜம்புகேசுவரன் எனத் திருநாமம் பெற்றிருக்கிறான். ஆனை வழிபட்டதால் ஆனைக்கா என்று இப்பதி அழைக்கப்படுகிறது. தேவார திருவாசகப் பதிகங்களும் பாக்களும் பெற்ற பழம் பெரும் ஸ்தலம்.

இங்கு ஐயனின் பெருமையை விஞ்சுகிறது அம்மையின் மகிமை. ஐயன் நீர் என்ற ஒரு பூதத்துக்கு மட்டும் நாயகனாக விளங்குகிறானெனில், தேவியோ எல்லாப் பிரபஞ்சங்களுக்கும் நாயகியான அகிலாண்டேசுவரியாக ஆவிர்ப்பவித்திருக்கிறாள். சக்தி பீடங்களில் ஒன்றாக மதிக்கப்பெறும் இந்த க்ஷேத்திரத்துக்கு ஆதிசங்கர பகவத் பாதர்களும் எழுந்தருளி தேவியின் அபரிமிதமான சக்தியை சிவசக்கரமாகவும், ஸ்ரீ சக்கரமாகவும் அமைந்த இரு தாடங்கங்களில் அடக்கி அவற்றை அவளுக்கே அணிவித்து அழகு செய்திருக்கிறார். இன்றைய சங்கரராகிய ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளும் இதே தாடங்கத்தைப் புதுப்பித்துப் பிரதிஷ்டை செய்திருக்கிறார். ஆதியில் இந்த ஆலயத்தை நிர்மாணித்த போது பரமேசுவரனே தலைமைக் கொத்தனாக வந்து அம்பிகைக்குப் பணி புரிந்து, தினமும் விபூதியைச் சிற்றாள்களுக்குக் கூலியாகத் தர, அந்த விபூதியே பொற்காசுகளாயிற்று எனத் திருநீற்று மதிலைப் பற்றிய ஐதிகம் கூறும். ஆண்டவனே திருப்பணி செய்த ஜம்புகேசுவரர் — அகிலாண்டேசுவரி ஆலயத்துக்கு மீண்டும் திருப்பணி செய்யும் பேறு இப்போது நம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், நல்ல ஆஸ்திக சிந்தை பெற்றவருமான ஸ்ரீ டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளையவர்களின் தலைமையில் அமைந்த திருப்பணிக் குழுவினர், லட்சக்கணக்கில் நிதி திரட்டி எம்பெருமானுக்கும் எம்பிராட்டிக்கும் மகத்தான முறையில் கும்பாபிஷேகம் செய்ய முயன்று வருகின்றனர். இத்திருப்பணிக்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு வருமான வரியிலிருந்தும், நன்கொடை வரியிலிருந்தும் விலக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப் பெரும் புண்ணிய கைங்கரியத்தில் ஆஸ்திகர் யாவரும் பங்கு பெறக் கோருகிறோம். நிதி அனுப்பவேண்டிய முகவரி: **எக்ஸிக்யூடிவ் ஆபீஸர், - திருப்பணிக் கமிட்டி காரியதரிசி, ஸ்ரீ அகிலாண்டேசுவரி-ஜம்புகேசுவரர் தேவஸ்தானம், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி - 5.**

என்ன சேதி?

ராஷ்டிரபதியின் அங்கீகாரம்

பெர்மிட்-லைசென்ஸ்களை விநியோகிப்பதற்குச் சுதந்திரமான தனி போர்டு வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் யோசனைக்கு உள் துறை மந்திரி ஸ்ரீ நந்தர் அவர்கள் ஆதரவு தெரிவித்ததையடுத்து ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் நந்தருக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் நிலவும் ஊழலுக்கு முக்கிய உற்பத்தி ஸ்தானமாக உள்ள ஒரு பாசிக்குளத்தைத் தூர்க்க வேண்டிய அவசியத்தை அரசாங்கம் புரிந்து கொள்ளத் தொடங்கியிருப்பது நல்ல அறிகுறி. ஆனால் இப்போதும் எதிர்காலத்தைப் பற்றிப் பூரண நம்பிக்கை கொள்ள இயலவில்லை. காங்கிரஸ் கட்சியின் வற்றாத அக்ஷய பாத்திரமாக இருக்கும் பெர்மிட் லைசென்ஸ் விநியோக ஊழல் மறைவதற்கு அக்கட்சியினர் மனம் கொள்வார்களா என்பது மிகவும் சந்தேகமே! போர்டு நிறுவிவிட்டால் போதாது. அது உண்மையிலேயே சுதந்திரமாக இயங்க வேண்டியது அவசியம். இதற்குக் காங்கிரஸார் யுக்திகள் ஏதும் செய்யாமல் இடம் தருவார்களா?

ஜனநாயகத்துக்குக் காப்பா?

அமெரிக்காவில் நடப்பதுபோல் இங்கும் ஜனாதிபதியிடம் ஆட்சி அதிகாரம் ஒப்புவிக்கப்பட்டால் இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கும் என்று ஸ்ரீ ஆர். வெங்கடராமன் கருதுகிறார். ஆனால் அவரது திட்டத்தை ஆராய்ந்து பார்த்தால் தற்போதுள்ள சிறிதளவு ஜனநாயக ஆட்சியும் அற்றுப்போகவே அவர் வழி செய்வதாகத் தோன்றுகிறது. ஸ்ரீ ஆர். வி.யின் யோசனைப்படி மந்திரி சபையை ஜனாதிபதியே நியமிப்பார். மந்திரிகள் சட்ட சபை அங்கத்தினராக இருக்க வேண்டியதில்லை. எனவே சட்ட சபைக்குப் பதில் கூறும் பொறுப்பு அவர்களுக்கு இராது என்பது தொக்கி நிற்கிறது.

தற்போதுள்ள சூழ்நிலையில் காங்கிரஸ் தலைவர் ஒருவர்தான் ஸ்ரீ ஆர். வி. கூறும் முறையில் ஜனாதிபதியாக உட்கார்வார். அப்படிப்பட்ட ஒரு காங்கிரஸ் தலைவர் சட்ட சபைகளுக்குப் பதில் சொல்லும் பொறுப்பில்லாத வேறு சில காங்கிரஸ் மந்திரிகளைக் கொண்டு ஆட்சி நடத்தினால் ஜனநாயகம் என்ற பெயர்கூட நாட்டில் உயிர் வாழ முடியாதே!

ஒரு நன்னிமித்தம்

தேசம் போகிற போக்கைப் பார்த்து விமோசனமே இடையாதோ என்று கை விரித்து அங்கலாய்க்கும் நிலைக்கு வரும்போது, இறைவன், "அப்படியொன்றும் சோர்ந்து விடவேண்டியதில்லை. உன் கடமையை எப்பொழுதும்போல் ஆற்றிவா!" என்று கூறுவதுபோல் அவ்வப்போது சுப சூசகங்களைக் காட்டுகிறான். அப்படிப்பட்டதொரு நன்னிமித்தமாகத்தான் ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் சமீபத்தில் நடைபெற்ற உபதேர்தலில் சுதந்திரக் கட்சி பெற்ற வெற்றியைக் கருத வேண்டும். சமீபத்தில் காங்கிரஸ் அக்கிராசனர் திரு காமராஜ் ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் சூறாவளிச் சுற்றுப் பிரயாணம் செய்தார். காங்கிரஸ் தனது பண பலம், படை பலம் எல்லாவற்றையும் காட்டியிருக்கிறது. இருப்பினும் மக்கள் சுதந்திரக் கட்சி அபேட்சகரைத் தேர்ந்தெடுத்திருப்பது இந்நாட்டில் ஜனநாயகம் தழைக்காதா என்று ஏக்கமுற்றவர்களுக்கு நம்பிக்கை யூட்டியிருக்கிறது!

இசையுலகில் இன்னோரிடி

ஸ்ரீ ஜி. என். பி. அவர்களின் மறைவால் ஏற்பட்ட துயர வடு ஆறுவதற்குள் மற்றொரு மாபெரும் வித்வானாகிய ஆலத்தூர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய அய்யர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தது சங்கீத ரஸிகர்களுக்குப் பெரும் நஷ்டமாகும்.

'சுப்பையர்' என்று அழைக்கப்பட்டு வந்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய அய்யரவர்கள் ஆலத்தூர் சகோதரர்கள் எனப் புகழ் பெற்ற இரட்டையரில் கனமாகப் பாடிப் பல்லாண்டுகளாகப் பல்லாயிரம் ரஸிகர்களை மகிழ்வித்தவர். லய நுணுக்கங்களுக்கு முக்கியத்வம் அளித்துப் பாடுவது அவரின் தனிச் சிறப்பாகத் திகழ்ந்தது. இதனால் அவர் ராக பாவத்தையோ, அர்த்த பாவத்தையோ மறந்துவிடவில்லை என்பதற்கு ஸ்ரீ தியாகப் பிரம்ம உத்சவங்களில் அவர் வழக்கமாக அமைத்துக் கொண்ட நிகழ்ச்சிகளே ஒரு நல்ல உதாரணம். அவரது தந்தையும் குருவுமான ஆலத்தூர் வேங்கடேச அய்யரவர்கள் ஸ்ரீ தியாகய்யரின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவரானபடியால் ஸத்குருவின் பல அபூர்வ கிருதிகளில் ஸ்ரீ சுப்பையர் தேர்ச்சி பெற்றிருந்தார். ராகம், பாவம் இவற்றின் அளவுக்குத் தாளத்துக்கும் பிரதான இடம் தரவேண்டும் என்று அவர் கருதினார். சென்ற ஆண்டு மியூஸிக் அகாடெமி விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கச்சேரிகளில் ராகம் — தானம் — பல்லவிக்கு முக்கியமான இடமளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மலரில் வண்ணம், மணம், மென்மை இம்மூன்றும் பிரிக்க முடியாமல் இணைந்திருப்பது போல் இசையில் ராகம், பாவம், தாளம் மூன்றும் சேர்ந்திருக்கின்றன. எனினும் சில புஷ்பங்கள் வண்ணத்துக்காகவும், வேறு சில மென்மைக்காகவும், மற்றும் சில மணத்துக்காகவும் சிறப்புப் பெற்றிருப்பதுபோல் சில வித்வான்களிடம் ராகம், பாவம், தாளம் இவற்றில் ஏதேனும் ஓர் அம்சம் விசேஷமாகப் பரிமளிக்கும். முக்கியமாகச் சாதகனின் கட்டுப்பாட்டுக்கு உதவும் லயம் ஆலத்தூர் சங்கீதத்தில் சிறப்பிடம் பெற்று, இன்றைய இசை மாணவர்களுக்கு ஒரு நல்ல வழி காட்டியா யிருந்தது.

ஆலத்தூர் சுப்பையரவர்களுக்கு ஐம்பது பிராயம்கூட நிரம்பவில்லை என்றறியும்போது பிரிவுத் துயரம் மேலும் அதிகமாகிறது. இவரை இசையுலகம் முப்பத்தைந்து ஆண்டுகளாக அறிந்திருந்தது எனில் அவர் எவ்வளவு பாலியத்திலேயே தெருடலான இசை முறையில் தேர்ச்சி பெற்றிருந்தார் என்று அறிந்து வியப்புக் கொள்ள முடிகிறது. ஆலத்தூர் சகோதரர்களிடம் சிட்சை பெற்றுள்ள பல சிடர்கள் அவர்களது அழகிய பாடாந்தரத்தைக் காத்து வருவர் என்பது இன்று ரஸிகர்களின் நம்பிக்கை.

கலைஞர் என்பதாக மட்டுமின்றித் தனி மனிதர் என்ற முறையிலும் பல நண்பர்களைப் பெற்றிருந்த நல்ல மனிதர் ஸ்ரீ சுப்பய்யர். பிறர் பாட்டைக் கேட்டு ரஸிக்கும் நல்ல உள்ளம் பெற்றவர்.

ஆலத்தூர் சுப்பையரின் மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது குடும்பத்தில் ஒருவராகவே ஆகிவிட்ட சங்கீத சகோதரர் ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் அவர்களுக்கும் நமது உளமார்ந்த அனுதாபங்களை அளிக்கிறோம்.



ராஜாஜியின் கருத்துக்கள்

அமெரிக்காவின் அரசியல் சாஸனம் உருவானவுடன், பெஞ்சமின் ஃப்ராங்க்லின் அவர்கள், ''இதன் மூலம் உங்களுக்குக் குடியரசைத் தந்திருக்கிறோம் — அதைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியுமாயின்'' என்று ஒரு பெண்மணியிடம் கூறினாராம்.

இதே போல்தான் நமக்குச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்திருக்குமாயின் 1947ல் பிரிட்டிஷார் அளித்த சுதந்திரம் உண்மையான சுதந்திரமாயிருக்கும். ஆனால் மக்களோ, 'சோஷலிஸம்' என்கிற பெயரில் மக்களின் சுதந்திரத்தைச் சர்க்கார் பறித்து வரும் போக்கைச் சிறிதும் தடை செய்யக் காணோம். சுதந்திரமாயிருக்க வேண்டும் என்ற உணர்வு நசித்து விட்டதாகவே காண்கிறது.

சோஷலிஸத்தின் முடிவில், வெளிநாட்டார்களிடம் அடிமைப்படுவதற்குப் பதில் ஆட்சியைக் கைப்பற்றிய இந்தியக் கட்சி ஒன்று நடத்தும் சர்க்காரிடம் அடிமைப்பட்டு நிற்க வேண்டும். சோஷலிஸத்தால் சுதந்திரம் நாசமடைவதுடன் பொருளாதாரமும் நாசமடைகிறது. அந்நியர் ஆட்சியினால் சுதந்திர உணர்வு பலவீனமடைந்த ஒரு நாட்டில், சோஷலிஸத்தின் மூலம் அடிமைத்தனத்தை உறுதிப்படுத்திய பின் பொருளாதார அபிவிருத்தி காண்பது எப்படிச் சாத்தியம்?

1947க்கு முன்னிருந்தது போலவே இனியும் சுதந்திரமின்றி வாழ மக்கள் பழகி விட்டதாகத் தோன்றுகிறது. சுதந்திர உணர்வுக்கு அரசியல் சாஸனம் ஆதாரமல்ல; சுதந்திரமாயிருக்க வேண்டும் என்று மக்களின் மனத்தில் உள்ள சங்கற்பமே அதற்கு ஆதாரம். அத்தகைய சங்கற்பம் இல்லாத போது சாஸனமும், சட்டமும், சட்ட சபையும், நீதி ஸ்தலமும் என்ன செய்ய முடியும்?

எதிர்க் கட்சிக் கூட்டங்களில் பெருவாரியான மக்கள் உற்சாகமாகக் கலந்துகொண்ட போதிலும், காங்கிரஸ் கட்சியே இடைத் தேர்தல்களில் வெற்றிபெறுவது எதனால்? காங்கிரஸின் லாரியிலும், பஸ்ஸிலும், ஜீப்பிலும் கூட்டமாகச்சென்று மக்கள் அதற்கே வாக்குத் தருவதற்குக் காரணமென்ன? லஞ்சக்காசா? அல்லது பயமா? இவைமட்டுமே காரணமல்ல. சுதந்திரமாயிருக்க வேண்டும் என்ற சங்கற்பம் மக்களுக்கு இல்லாததே முக்கியமான காரணம். அடிமை மனப்பான்மையைப் போக்க காந்தியடிகள் அரும்பாடு பட்டதை நாமறிவோம். ஆனால் மக்கள் பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்ததற்குக் காரணம் அந்நியர் என்பதால் அவர்கள் மீது எழுந்த பகை உணர்ச்சியே அன்றி அந்தரங்கமான சுதந்திர வேட்கையல்ல என்பதை இ உணர்கிறோம். 'நம்' சர்க்கார் என்று சொல்லப்படும் சர்க்காரும் அந்நிய சர்க்காரைப் போலவே நம் சுதந்திரத்தை அழிக்க முயலும்போது மக்கள் சும்மாயிருப்பதற்கு இதுவே சமாதானம்.

பிரிட்டிஷாரின் ஆட்சியில் இல்லாத சிக்கல் இப்போது உள்ளது. மக்கள் தவறாகப் புரிந்துகொண்டு ஆதரிக்கும் சர்க்கார் சர்வாதிபத்திய சோஷலிஸம்தான் அவர்களைக் கட்டிப் போடும் கயிறு என்பதை உணர்ந்து, மக்களுக்குச் சுதந்திர உணர்வு அளித்து, அந்நிலையை விலக்கச் செய்ய வேண்டும்.

உற்பத்திக் கட்டுப்பாடு, விலைக் கட்டுப்பாடு இவை யாவும் உண்மையில் பொருள்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடல்ல; மக்களுக்கே விதிக்கப்படும் கட்டுப்பாடுகள்தான். மக்கள் இதைத்தான் வாங்க வேண்டும், இவ்வளவுதான் வாங்க வேண்டும் என்று செய்கிற விதிகளெல்லாம் மக்களையே கட்டுப்படுத்துபவைதான். இக்கட்டுப்பாடுகள் மனிதனுக்குத் தர வேண்டிய மதிப்பைப் பறித்து, அவனது சுதந்திர உணர்வை அழிந்து, அடிமைப் பட்டாளத்தை உண்டாக்கிக் கொள்ளும் பசிவெறியை அரசாங்கத்துக்கு ஏற்படுத்துகின்றன. கழுத்தைச் சுற்றி இறுக்கும் தூக்குக் கயிறு இங்கிலாந்தில் செய்ததல்ல, இந்தியாவிலேயே செய்தது என்பதனால் அதன் பயங்கர விளைவு மாறிவிடாது. உணவும், உடையும், இருப்பதற்கு இடமும் போல் சுதந்திரமும் மக்களுக்கு அவசியம். சுதந்திரமின்றி மக்கள் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகாது.

மகிழ்ச்சியற்ற வாழ்க்கையை மக்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்யும் சக்தி சமூகத்துக்கும், சர்க்காருக்கும் உண்டு. நாளடைவில் மக்கள் எதிர்ப்புச் சக்தியை முற்றிலும் இழந்து விடுவார்கள். 'சுதந்திர வாழ்வில் ஒவ்வொருவரும் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்; சர்க்காரின் கீழ் அடிமைப் பட்டிருக்கும் போது இத்தகைய பொறுப்பில்லை' என்பதால் மக்கள் அடிமைத்தனத்தையே வரவேற்கவும் கூடும்.

இந்தியா அந்தக் கட்டத்துக்கு வந்து விட்டதா அல்லது இப்போதேனும் அதைக் காக்க முடியுமா என்பதே கேள்வி. மக்களின் சுதந்திர உணர்வைக் காக்க முடியும் என்பதே சுதந்திரக் கட்சியின் நம்பிக்கை.

மகத்தான எந்த இயக்கமுமே ஆரம்பத்தில் ஒரு தலைவர், அல்லது ஒரு சில தலைவர்களின் சக்தி வாய்ந்த முன்னணியில், உற்சாகமுள்ள சில அபிமானிகளின் ஆதரவுடன்தான் தொடங்கப்படுகிறது. இதுவே பிற்பாடு சரித்திர முக்கியத்துவம் பெறுகிற அளவுக்குப் பெருகி விடுகிறது. 1920ம் ஆண்டில் கிலாஃபத் இயக்கத்தில் தோன்றிய ஒரு கிளையாகவே காந்தியடிகளின் சுயராஜ்ய இயக்கம் தொடங்கியது. பிற்பாடு அதுவே வளர்ந்து அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுத் தந்தது. பெர்மிட்—லைசென்ஸ்

ராஜ்யத்திலிருந்தும் இவ்வாறே விடுதலை கிடைக்கும் என நம்புவோமாக.

ஃஃஃ

தனி முதலாளிகளின் கீழ் வேலை செய்பவர்களுக்கு உள்ள உரிமைகளும், சலுகைகளும், சுதந்திரங்களும் சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடையாது என்பதை அனைவரும் அறிவர். என்றாலும் இந்த அபாயத்தை உணராமலே, தனியார் ஸ்தாபனங்களில் குறைபாடுகள் இருப்பதாகத் தோன்றினால் அதைச் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று ஊழியர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். கோபத்தில் பகுத்தறிவு அழிந்து போவதன் விளைவே இது. தனி முதலாளியிடமிருந்து சர்க்கார் முதலாளியின் ஆதிக்கத்துக்கு மாறிய பின்தான் காலக்கிரமத்தில் அதன் பிரதிகூலங்களை ஊழியர்கள் அறிவார்கள்.

ஃஃஃ

சில தொழில் நிர்வாகிகளிடம் காங்கிரஸ் மந்திரி ஒருவருக்கு வெறுப்பு ஏற்பட்டால், அந்த ஒரே காரணத்துக்காக அத் தொழிலைச் சர்க்கார் எடுத்து நடத்துவதைக் காண்கிறோம். இதனால் 'பழி வாங்கினோம்' என்ற திருப்தி மந்திரிக்கு ஏற்படுவது தவிர நாட்டுக்கு எவ்வித நன்மையும் இல்லை.

ஃஃஃ

அபேட்சகர் தம் பணத்தைக் கொடுத்து வாக்கு வாங்குவது தவறு என்கிறது சட்டம். ஆனால் அவர் சர்க்கார் பணத்தைக் கொடுத்து வாக்கு வாங்குவது தவறில்லை என்று எண்ணப்படுகிறது. காங்கிரஸ் அபேட்சகர்கள், 'எங்களுக்கு வாக்களித்தால் சர்க்கார் செலவில் பள்ளிக்கூடம் கட்டித் தருவோம்; பிரசவ ஆஸ்பத்திரி கட்டித் தருவோம்' என்றெல்லாம் பிரசாரம் செய்வது அரசாங்கப் பணத்தை லஞ்சம் தருவதற்குச் சமானமேயல்லவா ? இதே போல் எதிர்க்கட்சியினர் வாக்குறுதி கூறி, மக்களின் வாக்குகளைப் பெறுவது சாத்தியமா? எதிர்க்கட்சியினரிடம் சர்க்கார் கஜானா இல்லை.

ஃஃஃ

இதோ ஒரு பத்திரிகைச் செய்தி :

புதுதில்லி, ஜூன் 28

அடுத்த ஆண்டு செப்டம்பர் — அக்டோபரிலிருந்தே அகில இந்திய, மத்திய சர்வீஸ் பரீட்சைகளைப் பிரதேச மொழிகளில் நடத்துமாறு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குக் கூற வேண்டுமென மந்திரி சபைக்கு உள்நாட்டு இலாகா யோசனை கூறியுள்ளது.

எனினும், எந்தப் புதியதொரு மொழியில் பரீட்சை நடத்தத் தொடங்கினாலும், அதனால் விடைத் தாள்களை ஒரு சீராக மதிப்பீடு செய்வதில் சிக்கல் அதிகமாகும் என்று இலாகா எச்சரித்திருக்கிறது.

மொழிப் பிரச்னையை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட மந்திரி சபைத் துணைக் கமிட்டியானது, எல்லாப் பிரதேச மொழிகளிலும் பரீட்சைகள் நடத்தும் கொள்கை ஆட்சேபகரமானது என்றும், இதன் விளைவாக தேச ஐக்கியம் பாதிக்கப்படும் என்றும் கருதியதை உள்துறை இலாகா நினைவூட்டியுள்ளது.

ஃஃஃ

காரைக்குடியைச் சேர்ந்த நாராயணி, மீனா என்ற இரண்டு இளம் சகோதரிகள் வாழ்க்கையில் உற்சாகமில்லாததால் விஷத்தை உண்டு உயிர் விட்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் வெறுப்படைந்ததே தற்கொலைக்குக் காரணமெனக் கடிதம் எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆசாரங்களையும், வாழ்க்கைப் பண்புகளையும் சீர்குலைப்பது சுலபம். ஆனால் அவற்றுக்குப் பதிலாக வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுத்தித் தரும் புது அம்சத்தை அமைத்துத் தருவது கஷ்டம்.

ஃஃஃ

சென்ற வாரத்தில் மிக முக்கியமான செய்தி வருமாறு :

புதுதில்லி, ஜூன் 28உ

இந்தியாவின் பொருளாதார நிலைமை நன்றாக இல்லை என்று இன்று நிதிமந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மந்திரி சபைக் கூட்டத்தில் கூறினார்.

நடப்புத் திட்டத்தின் மீதமுள்ள காலத்துக்கும், நான்காம் திட்டத்துக்கும் தேவைப்படும் உள்நாட்டு — வெளிநாட்டு நிதி வசதிகளைப் பற்றி நிதிமந்திரி தமது சகாக்களுடன் ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனையின் போது சில மந்திரிகள் நிதிமந்திரியின் சிற்சில கொள்கைகளைக் கண்டித்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்த அறிக்கை தவறானது என்றும், ஆதாரமற்றது என்றும் சர்க்கார் சார்பில் மறுப்பு வெளியானால் யாரும் ஆச்சரியப்பட மாட்டோம். எனினும், மேலே கண்டிருப்பது நிதிமந்திரி சென்னையில் கூறியதன் உள்ளுறைப் பொருளே என்பதை யாவரும் காண முடியும்.

ஃஃஃ

தனியொரு சர்வாதிகாரி ஆட்சி புரிந்தால் அவனைப் பதவியிலிருந்து விரட்டுவது கடினமல்ல. பென் பெல்லாவின் கதையைச் சமீபத்தில்தான் பார்த்தோம். ஆயுதபலத்தால் பெற்ற சர்வாதிகாரம் ஆயுத பலத்தாலேயே முடிந்து போயிற்று.

தனி மனிதனுக்குப் பதில் ஒரு கட்சியானது சர்வாதிகாரம் பெற்றால் அதைப் பதவியிலிருந்து நீக்குவது கடினம். தனி மனிதனின் ஆயுளும் ஆற்றலும் குறுகியவை. ஆனால் சர்க்காரின் அதிகாரத்தைக் கொண்டு ஆள்கிற கட்சி தன் ஆயுளையும், ஆற்றலையும் நிரந்தரமாக நீடிக்க முடியும். கம்யூனிஸ ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும் இதையே காண்கிறோம்.



அத்தியாயம் 16

வாழ்வின் ஒளி

இருவேறு மனநிலைகளுடன் ஐயனார் கோயிலுக்கு வந்திருந்தனர் தங்கப்பனும் செல்லமும். தங்கப்பன் தனது லட்சியங்களையெல்லாம் செல்லத்திடம் கூறி அவளது ஒத்துழைப்பைப் பெறக் கருதி வந்திருந்தான். செல்லமோ அத்தான் தன்னிடம் காதல் மொழி பேசித் தன்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்தப் போகிறார் என்ற ஆர்வத் துடிப்பு உருவாக்கிய குறுகுறுப்பின் இன்ப வேதனையை அநுபவித்தபடியே வந்திருந்தாள். அவ்விதம் அவள் தீர்மானமாக நம்பிய காரணத்தால் தனது வழக்கமான அடக்க சுபாவத்தை ஒதுக்கி விட்டு அத்தானின் கண்களைப் பொத்தி அவரை மகிழ்விக்கவும் ஆசைப்பட்டாள். அவரது கன்னங்களில் தன் உள்ளங் கைகள் உராய்வதையும் அத்தானின் சிரம் தன் நெஞ்சிலே படுகிற நெருக்கத்தையும் அதுவரை உணர்ந்திராத அவளுக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்று. கூடவே ஏதோ ஒரு தயக்கம். தாயார் எதிரில் தவறு செய்யும் போதே கூடவே சிரித்தும் மழுப்பும் குழந்தை போல அவள் கலகல வென்ற நகைப் பொலியைச் சிந்த விட்டாள்.

இருவருக்குமே மற்றவர் நடந்து கொண்ட விதம் திகைப்பை அளித்தது. எப்போதும் ஒடுங்கி நிற்கும் செல்லமா இன்று வெட்கத்தை விட்டுத் தன் கண்களைப் பொத்துகிறாள் என்று தங்கப்பன் வியப்புற்று விழித்தான். காதல் பார்வையை எதிர்பார்த்திருந்த செல்லமோ கடுமையான நோக்கினைக் கண்டு மிரண்டு நின்றாள்.

இருவருக்குமே ஒருவரை மற்றொருவர் தவறாகப் புரிந்து கொண்டு அவ்விடத்துக்கு வந்திருப்பது தெரிந்தது. சற்று நேரம் என்ன பேசுவதென்றே தெரியாமல் மௌனத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள்.

''செல்லம்! நான் எதற்காக உன்னை இங்கே வரச் சொன்னேனென்று நீ நினைக்கிறாய்?'' என்று தங்கப்பன் கேட்டான்.

தான் என்ன நினைத்து வந்தாளோ அதைக் கூறாமல், ''நீங்கள் சொன்னால்தானே தெரியும், அத்தான்?'' என்றாள் அவள்.

அவன் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்து போனான். ''ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகப் புரிகிறது அத்தான். நீங்கள் இப்போதெல்லாம் அடிக்கடி மௌனச் சாமியாராக மாறிக் கல்லுப் பிள்ளையார் போல உட்கார்ந்து விடுகிறீர்கள். இங்கே வந்த உடனே முதலில் உங்களைக் காணோம் என்று முடிவு கட்டிவிட்டேன். 'அடடா! நம்மை வரச் சொல்லிவிட்டு இவர் ஏமாற்றி விட்டாரே' என்று உங்கள் மீது ஒரு விநாடி கோபம்கூட வந்தது. அப்புறம்தான் சிலைகளுக்கிடையில் சிலையாக நீங்கள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது!''

''ஆகவே உன்னோடு கண்ணாமூச்சி விளையாட முடியவில்லையே என்ற ஏக்கத்தால்தான் நான் அப்படி அடிக்கடி கல்லாய்ச் சமைந்து விடுகிறேன் என்ற தீர்மானத்துக்கு வந்தாய்; கண்களைப் பொத்தி உற்சாகமூட்ட நினைத்தாய், இல்லையா?''

எரிச்சலுடன் தங்கப்பன் பேசுவதைக் கேட்டதும் செல்லத்துக்கும் விசுக்கென்று கோபம் வந்தது. ''கிண்டல் கிடக்கட்டும், அத்தான்!'' என்றாள் அவள் சூடாக. ''என்னிடம் கொஞ்சிக் குலாவ நீங்கள் விரும்பாதிருக்கலாம்; ஆனால் அப்படி நான் கற்பனை செய்து கொள்ள இடமளித்தது உங்கள் தவறுதான்! என்னிடத்தில் தனிமையில் பேச வேண்டுமென்றும் ஏகாந்தமான இந்த இடத்துக்கு நான் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது நீங்கள்தானே?'' உணர்ச்சி வசப்பட்ட அவள் அலை அலையான விம்மல்களில் நெஞ்சம் அடுத்தடுத்துப் பொங்கித் தணியப் பெருங் கவளங்களாகக் காற்றை விழுங்கினாள்.

''ஆமாம், செல்லம்! தவறுதான்! என்னைப் பற்றி நானே ரொம்பப் பிரமாதமாக எண்ணி வந்தேன், இத்தனை நாட்களாக. பேச்சு, நோக்கம், சிந்தனை, லட்சியம் எல்லாம் உயர்வாக இருக்க வேண்டும்; வெறும் வாய்ச் சொல் வீரனாக இல்லாமல் நடைமுறையிலும் அப்படியே விளங்க வேண்டும். உற்றாரும் சுற்றாரும், ஊராரும் பெருமைப்படத் தக்க காரி

யங்களைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் உறுதி பூண்டிருந்தேன். ஆனால் நானும் தவறுகள் இழைக்கக் கூடிய ஒரு சாதாரண மனித ஜன்மம்தான் என்பதை இன்று உணர்ந்துகொண்டிருக்கிறேன். உன்னை இங்கே வரச் சொன்னது பெரிய குற்றமாக எனக்குப் படவில்லை; அதைவிடப் பெரிய தவறு இழைத்து விட்டேனோ என்றுதான் பயப்படுகிறேன்!''

செல்லத்தின் மனம் நெய்யாக உருகி விட்டது. ''போதுமே அத்தான்! நீங்கள் இன்று பேசுவது உங்களுக்குப் பொருத்தமாகவே இல்லை. தன்னம்பிக்கை மிகுந்த உங்கள் சுபாவம் எங்கே போயிற்று? உங்களுக்காக நீங்களே துக்கப்பட்டு வருந்தினால் அழகாகவா இருக்கிறது?''

''நான் உண்மையைச் சொல்கிறேன், செல்லம்! அதைப் பற்றி மனம் விட்டுப் பேசத்தான் உன்னை இங்கு வரவழைத்தேன். எப்படி ஆரம்பித்து, என்ன விதமாகச் சொல்வது என்றுதான் கல்லுப் பிள்ளையார்போல் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தேன். சுற்றி வளைத்துப் பேசவா, அல்லது நேரடியாக விஷயத்துக்கு வரவா?''

''முற்றுகையிட்டுக் கோட்டையைப் பிடிக்க வேண்டாம், அத்தான்! நேரடியாகத் தாக்குங்கள்!'' என்றாள் செல்லம் சிரித்துக் கொண்டே.

''தாக்குதலைத் தாங்கும் பலம் உன்னுடைய உள்ளத்துக்கு இருக்க வேண்டுமே?''

''பயமுறுத்தப் பார்க்காதீர்கள், அத்தான்! துன்பமோ இன்பமோ எதுவானாலும் அதனை என்னுடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் பக்கத்தில் இருக்கிறீர்கள் என்கிற தைரியம் எனக்கு எப்போதும் உண்டு!''

தங்கப்பன் துணுக்குற்றான். 'என்னிடம் எத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறாள் இவள்! அவளுக்கு எப்பேர்ப்பட்ட ஏமாற்றத்தை அளிக்கவிருக்கிறேன் நான்?'

''செல்லம்! நீ ஆசைப்படுவதுபோல உன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய நிலையில் நான் இருக்க விரும்பவில்லை என்பதைத்தான் உனக்கு முக்கியமாகத் தெரிவிக்க நான் முயலுகிறேன்.''

''நீங்கள்...... நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அத்தான்?''

''அத்தையும் மாமாவும் நீயும் எதிர்பார்ப்பது போல் இந்தக் கலியாணம் நடக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை என்கிறேன்.''


தன் காதுகளையே நம்ப முடியாதவள் போல் சற்று நேரம் திகைத்து நின்று அவனைத் திறந்த வாயுடன் வெறித்து நோக்கினாள் செல்லம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவள் உதடுகளில் ஒரு புன்னகை அரும்பி மலர்ந்தது. அடுத்து இயற்கையாகவே ஒட்டி உலர்ந்தது போல் அமைந்திருந்த வயிறு மேலும் எக்கி மறைய, தோள்கள் குலுங்கச் சிரிக்க ஆரம்பித்தாள்.

தங்கப்பனுக்கு அவள் போக்குப் புதிராக இருந்தது. அழுது புலம்பப் போகிற அவளைச் சமாதானப்படுத்திச் சமாளிக்கத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான் அவன். அவளோ சிரித்தாள்! 'ஒரு வேளை தான் கூறியதைக் கேட்டதும் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவள் சித்த சுவாதீனமே இழந்து விட்டாளோ?'

''நான் உங்கள் கண்களைப் பொத்தியதற்காக அப்படிச் சீறினீர்களே அத்தான்! இப்போது நீங்கள் மட்டும் என்னிடம் விளையாடலாமா? வேடிக்கை விவகாரமா இது?'' என்றாள் செல்லம். ''இரண்டு நாட்களில் ஊர் திரும்பப் போகிறவளிடம் அன்பாக நாலு வார்த்தைகள் பேசுவீர்களாக்கும் என்று வந்தால் எதை எதையோ சொல்லி நேரத்தை வீணாக்குகிறீர்களே. மறுபடியும் நாம் சந்திப்பதென்பது அநேகமாகக் கலியாணத் தேதியையொட்டித்தானே இருக்கும். அதற்கு இன்னும் எத்தனை நாட்கள் காத்துக் கிடக்க வேண்டுமோ!''

அவள் தெளிவாகவே, புத்திபூர்வமாகப் பேசுவது கேட்டுச் சற்று நிம்மதியுற்றான் தங்கப்பன். கூடவே, 'செல்லம்' என்கிற வார்த்தையை அதட்டுவதற்குக் கூடப் பயன்படுத்தலாம் என்று நிரூபித்து அந்தக் கூரிய சொல்லால் அவள் இதயத்தைக் கீறினான். ''என் பொறுமையைச் சோதிக்காதே! நாடகமாடவா நான் இங்கு வந்தேன்; உன்னையும் வரச் சொன்னேன்?'' என்று கூறி வேறு புறம் திரும்பிக் கொண்டான் வெறுப்போடு.

மாலையில் தலையில் சூடி இரவு படுக்கப் போகு முன்னர் கழற்றி எறியப்பட்ட மலர்ச் சரம் போலத் துவண்டு அவன் காலடிகளில் விழுந்தாள் செல்லம். துக்கம் பேச விடாமல் அவள் தொண்டையை அடைத்தது; கண்ணீராய்ப் பெருகியது. அவள் சிரம் அவன் பாதங்களே தஞ்சம் என்று சரண் புகுந்தது. தோணியிலே செல்லும் ஒருவன் அது அவனைக் கவிழ்த்துவிட்ட போதிலும் தான் மூழ்கி விடாதிருக்க அவன் அந்தத் தோணியையே ஆதரவுக்



குப் பற்றிக் கொள்வது போல், அவன் கால்களைக் கட்டி அணைத்துக் கொண்டு அவள், "அத்தான்! அத்தான்!" என்று புலம்பலைத் தவிர வேறெதுவும் அறியாத பேதையாக மாறினாள்.

செல்லத்தின் அழுகை நீண்ட நேரத்துக்கு அடங்கவேயில்லை. "செல்லம், கொஞ்சம் நிதானப்படுத்திக் கொள்ளேன்; நான் சொல்ல வந்ததை முழுமையாகக் கேட்டு விட்டுப் பிறகு அழேன்" என்று தங்கப்பன் மன்றாடியும்கூடப் பயனில்லை.

முள்ளின் மேல் நின்ற மூன்று யுகங்களாகத் தங்கப்பன் கருதிய பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவள் சற்று ஓய்ந்தாள். நிதானத்தை உபதேசித்த அத்தான் மீது அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோவின் நிதானம் உங்களுக்கு நன்றாகப் பொருந்தி யிருக்கிறது; என் இதயக் கோயில் பற்றி எரியும்போது நான் இன்முகம் காட்ட வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது அதைவிட அழகாயிருக்கிறது' என்று தனக்குள் நினைத்துக் கொண்ட அவளுக்கு அழுகை மேலும் பொத்துக் கொண்டு வந்தது.

தன் மடியில் புதைந்து கொண்ட முகத்தை மெல்ல நிமிர்த்திக் கேசத்தைக் கோதியவாறே, "நான் உணர்ச்சியற்ற பாவி இல்லை, செல்லம். உன் வேதனையை நானும் புரிந்து கொண்டிருக்கிறேன். என் தவிப்பைக் குறைக்கவாவது நீ கொஞ்சம் அழுவதை நிறுத்திக் கொள்ள மாட்டாயா?" என்று கெஞ்சுதலாகக் கேட்டான் தங்கப்பன்.

"அத்தான்! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்? எதற்காக அத்தான்?"

"அதைத்தான் நான் செய்த தவறு என்று தொடக்கத்திலேயே கூறினேனே, செல்லம்! என்னையறியாமல் நான் உங்கள் அனைவரது உள்ளங்களிலும் நமது கல்யாணம் பற்றிய திட்டங்கள் உருவாக இடமளித்திருக்கிறேன். அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க வேண்டும் நான். எடுத்த எடுப்பிலேயே மறுத்துக் கூறியிருந்தது பிசகுதான்."

"உங்களை நம்பியவர்களுக்குத் துரோகம் செய்வது சரிதானா, அத்தான்?" என்று நாத் தழுதழுக்கக் கேட்டாள் அவள்.

"செல்லம்! முதன் முதலாக உன் அப்பா கொண்டிருந்த ஆசையைப் பற்றி அவர் உனக்குப் பிரமாதமான முறையில் மஞ்சள் நீராட்டு விழா நடத்தினாரே: அப்போதுதான் ஊகித்தேன். ஆனால் அன்று அவரோ உன் தாயாரோ வாய் திறந்து ஏதும் கூறவோ கேட்கவோ இல்லை. நானாகவே அவர்களிடம் போய், 'செல்லத்தை எனக்கு மணமுடித்து வைக்கும் நோக்கம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படியானால் அந்த எண்ணத்தை மறந்து விடுங்கள்' என்பதா? இறுதிப் பரீட்சை முடிந்து நாம் உதகைக்கு வந்த போதுதான் மாமா தம் உள்ளத்திலிருப்பதை வெளியிட்டார். அப்போதும் ஜாடைமாடையாகத்தான். 'உனக்கு மாமியாராக வரப் போகிறவள்' என்று அத்தையைக் குறிப்பிட்டார். நானும் உடனுக்குடன் 'மாப்பிள்ளையாக வருவேனென்று முதலில் கவலைப்படட்டும்.

எலிக்குக் கொண்டாட்டம்
நமக்குத் திண்டாட்டம்



நம் நாட்டில் உணவு உற்பத்தி பெருகுகிறதோ இல்லையோ, எலிகளின் குடும்ப அபிவிருத்தி நாளுக்கு நாள் பெருகி வருகிறது. நம் நாட்டு ஜனத்தொகை நாற்பது கோடி. ஆனால் எலிகளின் எண்ணிக்கை 240 கோடி. இந்தியாவின் ஜனத்தொகையை விட ஆறு மடங்கு எலிகள் இன அபிவிருத்தி செய்கின்றன! பிறகு அவை செய்யும் அட்டகாசத்துக்குக் கேட்பானேன்? அவற்றிடம் என்ன குடும்பக் கட்டுப்பாடு பிரசாரமா செய்ய முடியும்?

அரிசியைப் பல நாட்கள் சேமித்து வைப்பதால் அது சுவையையும் எடையையும் இழக்கிறது; தரமும் குறைந்து விடுகிறது. பூட்டிக் கிடக்கும் அரிசிச் சேமிப்புக் கிடங்குகளில் எலிகள்தான் ராஜா. அதனால் ஏற்படும் அழிவைக் கேட்டால் அசந்து விடுவோம். மிகக் குறைந்த மதிப்பீட்டின் படிகூட 240 கோடி எலிகள் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து எடுத்துக் கொள்ளும் உணவு தானியம் இருபத்துநான்கு லட்சம் டன்களுக்கு மேல் இருக்குமாம்! அதன் மதிப்பு 120 கோடி ரூபாய்! சர்க்கார் அரிசி முதலிய உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதால் எலிகளுக்குத்தான் கொண்டாட்டம்! அவை அழித்தவை போகப் பாக்கியுள்ளவை தான் மக்களுக்கு வந்து சேருகின்றன.

சர்க்கார் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசியை எப்படி வேண்டுமானாலும் சேமித்து வைத்து வாணிபம் செய்யட்டும். உள் நாட்டில் உற்பத்தியாகும் அரிசியையாவது தனியார் வர்த்தகத்துக்கு விட்டு வைத்துப் பெரு நஷ்டத்திலிருந்து மீண்டால் என்ன?

தகவல்:
எம். ஏ. தங்கப்பன்
கௌரவ காரியதரிசி,
சென்னை ராஜ்ய உணவுப்
பொருள் வியாபாரிகள் சங்கம்

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள்
நாள்முழுவதும் சுறுசுறுப்பாக
இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு
புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது....நாள் முழுவதும் அந்தத் துடிப்பான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு நாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!







அப்புறம் மாப்பிள்ளைக்கு உடம்புக்கு ஒன்றும் வராதிருக்கணுமேன்னு விசாரப் படலாம்' என்று சொல்லி வைத்தேன். ஆனால் அவர்கள் அதையும் விளையாட்டாக எடுத்துக் கொண்டு சிரித்தார்கள். உல்லாசப் பயணத்துக்கென்று அவர்களை அழைத்து வந்த இடத்தில் மனக்கசப்பை வளர்க்க நான் விரும்பவில்லை. நம் கல்யாணம் பற்றிப் பேசி முடிவு செய்யவே சந்திப்புரிக்கு அவர்கள் உன்னுடன் வருகிறார்கள் என்று உணர்ந்தேன். இங்கே வந்ததும் எல்லாவற்றையும் தெளிவாக்கிவிட நினைத்திருந்தேன். உன்னை என் அம்மா கட்டி அணைத்து வரவேற்பதைப் பார்த்ததும் அவளும் இந்தச் சம்பந்தத்தில் எத்தனை ஆர்வம் காட்டுகிறாள் என்று தெரிந்தது எனக்கு. வாய் வார்த்தையாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ என்னைக் கேட்காமலே அவள் உன்னைப் பெற்றவர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்க வேண்டும். என்னிடம் நேருக்குநேராகச் சம்மதமா என்று ஒரு வார்த்தைகூடக் கேளாமல் நான் மறுத்துச் சொல்லப் போவதில்லை என்று அவர்களாகவே மனப்பூர்வமாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.''

''பெரியவர்கள் தங்களுக்குள் பேசி முடிவு செய்து கொண்ட பின்னர் தானே உங்களை அணுகுவார்கள், அத்தான்?'' என்றாள் செல்வம் இதயம் வெடிக்கிறதினைக் குரலில்.

''அப்போதுதான் எனக்கு உன் உதவியும் தேவைப்படும், செல்லம்! அவர்கள் செய்து கொண்டுள்ள சுமுகமான முடிவுக்கு நான் ஒத்து வராதபோது அங்கே எரிமலையாக வெடிக்கப் போகிறார் மாமா. சூறாவளியாகச் சீறப் போகிறாள் என் அம்மா. அவர்களைச் சமாதானப்படுத்த உன் துணை வேண்டும் எனக்கு!''

''என் தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட என் உதவியையே கேட்கிறீர்களா?'' என்றாள் அவள், தன் முகத்தை இரு கரங்களாலும் அடித்துப் பொத்தி அழுத்தி மூடிக் கொண்டு.

''செல்வம்! தயவுசெய்து நான் சொல்லப் போவதைச் சிரத்தையாகக் கேள்!'' என்றான் தங்கப்பன். பிறகு பல வருஷங்களாகவே தன் இதயத்தைத் துன்புறுத்தி வரும் நினைவுகளையும் தன் லட்சியக் கனவுகளையும் பற்றி அவளுக்கு விரிவாக எடுத்துரைத்தான். முதன் முதலாக அத்தானின் உள்ளத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் கேட்டாள்



யார் தெரியுமா?

ஆசாரக் கோவை

அவர் வகித்த பதவியோ அட்வகேட் ஜெனரல் பதவி. அதுவும் சென்னை உயர் நீதி மன்றத்தில். ஆனால் ஆசார நியதிகளை அநுஷ்டிப்பதிலோ அவர் எந்தப் பாதுகாப்புத் துறை ஜெனரலுக்கும் மேல் கண்டிப்பானவர். தம் வீட்டில் தவிர வேறு எந்த வெளியிடத்திலும் உணவருந்தத் திட்டவட்டமாக மறுப்பவர்.

ஒரு சமயம் அவருடைய ஆப்த நண்பரும் உயர்ந்த பதவி வகித்தவருமான ஓர் ஆங்கிலேய கனவான் அட்வகேட் ஜெனரல் அன்பரைத் தம்முடன் தேநீர் அருந்தத் தமது மாளிகைக்கு அழைத்தார். நட்போ பலமானது. ஆனாலும் ஆசாரம் குறுக்கே நின்றது.

தம்முடைய நிலையைத் தெளிவாக எடுத்துரைத்த அட்வகேட் ஜெனரல், "நண்பரே! உம் இருப்பிடத்துக்கு வந்து உம்முடனும் உம் மனைவியாருடனும் தேநீர் அருந்துகிறேன். ஆனால் அந்தத் தேநீர் என் வீட்டுப் பரிசாரகனால் என் வீட்டுப் பாத்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்" என்றார். ஆங்கிலேய நண்பர் ஆட்சேபணை ஏதும் எழுப்பாமல் ஆமோதித்தார்.

குறிப்பிட்ட தேதியில் அட்வகேட் ஜெனரல் வீட்டுப் பரிசாரகன், வெள்ளிப் பாத்திரங்கள் சகிதம் அந்த வெள்ளையர் பங்களாவுக்கு வந்தான். ஒதுக்கப்பட்ட அறையை மந்திரபூர்வமாகச் சுத்தம் செய்து அடுப்பும் பற்ற வைத்துத் தேநீர் போட்டான். நண்பருடன் அமர்ந்து அளவளாவிய தன் எஜமானனுக்குத் தன் கையாலேயே தேநீர் வழங்கினான். ஆங்கிலேய நண்பர் தம் இந்திய நண்பரின் லட்சியத்தையும் பழக்கத்தையும் வெகுவாகப் பாராட்டினார்.

எந்தச் சூழ்நிலையிலும் தம் வழக்கத்தையும் ஆசாரத்தையும் கைவிடாமல் இருந்த வழக்கறிஞர் பெருமான் யார் தெரியுமா?

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் அபாரப் புகழுடன் தொழில் நடத்தி வந்த சர் வி. பாஷ்யம் ஐயங்கார் தான். அவரைத் தேநீர் சாப்பிட அழைத்த நண்பர் அந்த நாளைய கௌன்சில் அங்கத்தினர் சர் முர்ரே ஹமிக்!

ஆதாரம்: 'ஒரு நூற்றாண்டு முடிந்தது' என்ற சென்னை உயர்நீதி மன்றத்தைப் பற்றிய நூல்.

செல்லம். கேட்டு வியர்த்தாள், வியந்து பெருமையுற்றாள், விம்மிதமடைந்தாள்: விண்வெளியிலேயே பறக்கலானாள் !

"செல்லம்! சிறுவனாயிருந்தபோதே நான் பாஸ்கெட் பால் ஆட ஆரம்பித்தேன். கல்லூரியிலும் அந்த ஆட்டத்தில் பல பரிசுகளைப் பெற்றேன். குறி பார்த்துப் பந்தை வீசும்போதெல்லாம், 'இதில் வெற்றி பெற்றுப் பலன் என்ன? எனது லட்சிய நோக்கங்களில் வெற்றி பெறுவதில் அல்லவா நான் குறியாக இருக்க வேண்டும்?' என்று நினைப்பேன். இன்றும் எனக்குச் சதா சர்வ காலமும் இதே யோசனை தான். நிலத்தையெல்லாம் விற்க அம்மாவிடம் எப்படியாவது சம்மதம் பெற்று, கிடைக்கும் தொகையைக் கொண்டு சிறிய அளவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறேன். நாளாவட்டத்தில் அதனை விரிவுபடுத்தி வளர்த்து வருவதே என் முழு நேர வேலையாக இருக்கும். எத்தனை குடும்பங்களுக்கு நல் வாழ்வு அளிக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்யத் தளராமல் உழைக்க விரும்புகிறேன்."

கண்களை மூடியபடி நிம்மதி நிறைந்த ஒரு நீண்ட பெருமூச்சினை வெளிப்படுத்தினாள் செல்லம். "இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா அத்தான்? எவ்வளவோ சந்தோஷத்தோடு கேட்டுக் கொண்டிருந்திருப்பேனே. அதை விட்டு என்னை அழ வைத்து விட்டீர்களே!"

"நிஜமாகத்தான் சொல்கிறாயா, செல்லம்? கல்யாணம் இல்லை என்றதனால் உனக்குக் கோபம், வருத்தம் ஏதுமில்லையா?"

"உங்கள் அபிலாஷைகள் நிறைவேற நான் ஒருநாளும் தடையாக நிற்க மாட்டேன் அத்தான்; ஆனால் இதற்கும் நமது கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்றுதான் எனக்குப் புரியவில்லை."

"ஏன் இல்லை? எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். முக்கியமாக, குடும்ப வாழ்க்கையில் இப்போது எனக்கு நாட்டமில்லை. பூரண சந்திரனைப் பார்த்தால் காதலர்களுக்கு இன்பமாக இருக்கும் என்பார்கள். எனக்கோ அது கடமையைத்தான் நினைவூட்டும். கடற்கரை மணற் பரப்பில் அமர்ந்து சந்திரோதயம் ஆவதைப் பார்த்துக் கொண்டிருக்கையில்தான் எனக்குக் குடும்ப கௌரவத்தை இன்ன விதமாக மீண்டும் நிலைநாட்டலாம் என்ற திட்டம் உதயமாயிற்று. காதலியின் அன்பு மொழிகளும் அணைக்கும் பார்வையும், இன்ப ஸ்பரிசமும் போதையூட்டும் என்பார்கள். எனக்கோ போதை, மயக்கம் என்ற எண்ணமே என் தகப்பனார் நடத்திய கள்ளுக் கடைகளையும், அது காரணமாக நான் கேட்க நேர்ந்த அவதூறுகளையும் பற்றிய நினைவுகளைத் தூண்டி விட்டுவிடுகிறது. தொழிற்சாலை இயந்திரங்களைத்தான் என் குழந்தைகளாகவும் அவை இயங்கும்போது எழும்சத்தத்தைத்தான் அவை பேசும் மழலை மொழிகளாகவும் நான் ஒப்புக்கொள்ள முடியும்! இதெல்லாம் உனக்குப் புரியாது செல்லம். நீ புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவும் இல்லை!"

"அதெல்லாம் முடியாது! நான் கட்டாயம் நன்றாகப் புரிந்துகொள்ளத்தான் செய்வேன்!" என்றாள் செல்லம். "உங்களுக்கு முன்பாக நானே அப்பா, அம்மாவிடம் வாதாடிக் கல்யாணப் பேச்சுக்கெல்லாம் முடிவு கட்டுகிறேன்!"

—


காற்றிலே கிளை ஒன்று அசைந்து ஒதுங்க, செல்லத்தின் மேனியில் படிந்திருந்த நிழல் நீங்கி முழுச் சூரிய ஒளியால் குளிப்பாட்டப் பெற்றாள் அவள். தங்கப்பன் விக்கித்துப் போய் நின்றான். தெய்வ சங்கல்பத்தால்தான் அப்படி அவள் தேஜோமயமாக அவனுக்குக் காட்சியளிக்கிறாள் என்பதாகத் தோன்றியது அவனுக்கு. அடுத்த இரண்டு வினாடிகளுக்குள் அவளை மீண்டும் நிழல் கவ்வியபோதிலும், இரவில் தீபத்தை அணைத்து இருள் சூழச் செய்தாலும் அந்தச் சுடர், விழித் திரையை விட்டு நீங்காதது போல், பிரகாசமாக நின்று ஒளி சிந்தும் அவளது தோற்றம் அவன் இதயத்தில் நிலைத்தது. (தொடரும்)

சிரஞ்சீவிக் கதைகள்...

4. தசரதன் - கைகேயி



ஒரு காலத்தில் தேவேந்திரன் சம்பராசுரனை எதிர்த்துப் போர் புரிந்தான்.




அயோத்தி மன்னன் தசரதர் இந்திரனுடைய உதவிக்குப் போனார். ராணி கைகேயியும் கணவனுடன் யுத்தகளம் சென்றாள்.



மும்மரமாக யுத்தம் நடந்தது. திடீரென தசரதருடைய தேரின் கடையாணி முறிந்து விட்டது.




வீராங்கனையான ராணி கைகேயி இதைக் கவனித்தாள். தனது விரலைக் கடையாணிக் குப் பதிலாக அச்சில் கொடுத்தாள்.



யுத்தம் தொடர்ந்து நடந்தது. கைகேயியின் விரலிலிருந்து ரத்தம் கொட்டியது. இருந்தும் அவள் விரலை எடுக்கவில்லை.



யுத்த முடிவில் கைகேயியின் தீரச் செயலைத் தசரதர் அறிந்தார். தமது நன்றியைத் தெரி விப்பதற்காக கைகேயிக்கு இரு வரங்கள் அளித்தார். அவ் வரங்களைத்தான் கைகேயி, பல ஆண்டுகளுக்குப் பின், இராமனைக் காட் டுக்கு அனுப்பவும், பரதன் பட்டாபிஷேகம் பெறவும் உபயோகித்தாள்.



ஸ்ரீ வியாஸ பூர்ணிமை

இந்து சமயத்தைச் சார்ந்த ஆசார சீலர்கள் தங்கள் தங்கள் குரு அல்லது ஆசாரியர்களுக்குக் காணிக்கை சமர்ப்பித்து பூஜை செய்யும் நாளான 'குரு பூர்ணிமை' அல்லது 'வியாஸ பூர்ணிமை' என வழங்கும் புனித நாள் இந்த ஆண்டு ஆடிப் பௌர்ணமி யான ஜூலை 13ந் தேதி வருகிறது. இந்தப் புனித நாளில் ஆசாரிய பக்தர்கள் எல்லாரும் பயபக்தியுடன் தங்களாலான தொகையை-எவ்வளவு குறைந்த தொகை ஆயினும் சரி—ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுடன் சம்பந்தப் பட்ட மடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உத்தரப் பிரதேசம் கோரக்பூரில் கீதா பிரஸ்ஸில் அச்சிடப்பட்டு 1957ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான "கல்யாண் தீர்த்தாங்க" ஆண்டு மலரில் பக்கம் 547ல் பகவத் பாதாள் சம்பந்தப்பட்ட மடங்களின் பெயர்கள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு :


ஸ்ரீ சங்கராசாரிய த்வார ஸ்தாபித பஞ்சப் பிரதான பீடங்கள்: ஜோதிர் பீடம், கோவர்த்தன பீடம் (பூரி). சாரதா பீடம் (துவாரகை). சிருங்கேரி பீடம் (சிருங்க கிரி). காமகோடி பீடம் (காஞ்சிபுரம்).

கீழே காணப்படும் 15 பீடங்களின் பெயர்களையும், மேற்படி சஞ்சிகை குறிக்கின்றது.

1. கூடலி மடம் (கூடலி, துங்கபத்திரை, ஷிமோகா மாவட்டம், மைசூர் ராஜ்யம்.)
2. சிவகங்கை மடம் (சிவகங்கை, மைசூர் ராஜ்யம்)
3. ஆவணி மடம் (கோலார் மாவட்டம், மைசூர் ராஜ்யம்)
4. விருபாக்ஷ மடம் (ஹாஸ்பெட் வட்டம், பெல்லாரி மாவட்டம்)
5. புஷ்பகிரி மடம் (புஷ்பகிரி, கடப்பை மாவட்டம்)
6. ஸங்கேச்வர கரவீர மடம் (நாராயணபேட்டை, பூனா)
7. இராமச்சந்திரபுர மடம் (இராமச்சந்திர புரம், ஹொஸ்னகார வட்டம், மைசூர் ராஜ்யம்)
8. ஹரிஹரபுர மடம் (சிருங்கேரி அருகில்)
9 பத்ரிகாடி மடம்



10. எடநீரு மடம் (காஸர்கோடு வட்டம், தென்கன்னட மாவட்டம்)
11. கோதண்டராம மடம் (ஹிப்பெரு இராமம், தும்கூர் வட்டம், மைசூர் ராஜ்யம்)
12. ஸ்வர்ணவள்ளி மடம் (ஸ்ரீவிவட்டம், தென் கன்னடம்)
13. நெல மாவு மடம் (வட கன்னடம்)
14. யோக நரஸிம்ம ஸ்வாமி மடம்(ஹோல நரஸீபூர், மைசூர் ராஜ்யம்)
15. பாலெகுதுரு மடம் (ஜுங்கர் கட்டா பி. ஓ., தென் கன்னடம்)



மேற்கண்டவை அன்றி இன்னும் சில மடங்களின் பெயர்களை மைசூர் பண்டித தர்மாதிகாரி காசி சேஷநாகேசுவர சாஸ்திரிகளின் பேரப் பிள்ளையான மஹா வித்துவான் வெங்கடாசல சர்மா அவர்கள், ''சாரீர மீமாம்ஸ பாஷ்ய''த்துக்கு எழுதிய 'பூமிகை' யில் குறித்திருக்கிறார்கள். இந்த நூல் 1931ல் பம்பாய் வெங்கடேசுவர் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ''ஸ்ரீசங்கராசார்யாதி வித்யாதர்ம பீடாதிபரம்பராகத மட'' என்ற தலைப்பின் கீழ் பின்வரும் மடங்களின் பெயர்களை மேற்கண்ட நூல் குறிப்பிடுகின்றது:

1. சுமேரு மடம்
2. பரமாத்மா மடம்
3. காசியில் உள்ள சுமேரு மடம்
4. ஹவ்யாக மடம்
5. கொப்பல மடம்
6. ஸ்ரீ சைல மடம்
7. இராமேசுவரம் மடம் (துவாரகை ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஆதரவில் வெளியாகும் ''சாரதா பீடப் பிரதீபம்'' என்ற ஆராய்ச்சி சஞ்சிகையும் ஆதிசங்கரர் அவர்கள் இராமேசுவரத்தில் ஒரு மடத்தை ஸ்தாபிதம் செய்ததாகக் கூறுகிறது.)
8. ஞானகிரி மடம்
9. ஹொனஹள்ளி மடம்
10. கைவல்யபுர மடம்
11. மூலபாகலு மடம்
12. சிராளி மடம்
13. இத்ரபுர மடம்
14. நரஸிம்மவாடி மடம்
15. மூலவன மடம்
16. பைதான மடம்
17. காசி மடம்
18. தீர்த்தராஜபுர மடம்
19. கங்கோத்ரி ('லேட் ஆப் தி ஈஸ்ட்', 11வது வால்யூம் 11வது நெ. ஜுலை 1894 சஞ்சிகையில் இந்த மடம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இமாசலப் பகுதியில் ஜோதிர் மடம் அன்றி இந்த மடத்தையும் ஸ்ரீமத் பகவத் பாதாள் ஸ்தாபிதம் செய்ததாகத் தெரிகிறது.)



சிருங்கேரி மடம் ஸ்ரீ சச்சிதானந்த பாரதியின் (1770—1814) உத்தரவின் பேரில்

எழுதப்பட்டு ஸ்ரீரங்கம் வாணிவிலாஸ் பிரஸ்ஸில் வெளியிடப்பட்ட 'குருவம்ச காவியம்' (திர்மபீடம்) என்ற நூல் ஆதிசங்கரர் காசியில் தமக்காக ஒன்றும் அவருடைய சீடர்கள் நால்வருக்கு நான்குமாக மொத்தம் ஐந்து மடங்கள் ஸ்தாபிதம் செய்ததாகக் கூறுகிறது. இவற்றுள் எந்தெந்த மடங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன என்பது தெரியவில்லை.

4. நம்பூதிரி சந்நியாசிகளைத் தலைவர்களாகக் கொண்ட சில மடங்கள் ஆதிசங்கரரின் நேர் வழிச் சீடர்களான சுரேச்வரர், பத்மபாதர் முதலியோரால் கேரளாவில் உள்ள திருச்சூரில் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாகக் கொச்சி ராஜ்ய வெளியீடு (மேன்யுவல்) கூறுகிறது. இவற்றுள் ஒன்று, "நடுவில் மடம்" என்று வழங்கப்படுகிறது. மற்றும் ஒன்று நம்பூதிரி பிராம்மணர்களுக்கான வேதிய நிலையமாக (பிரம்மஸ்வ மடம்) மாற்றப்பட்டதாகத் தெரிகிறது.

5. குறைந்தபட்சம் ஏழு புகழ் பெற்ற மடங்களை அத்வைத தத்துவஞானி சங்கராசாரியர் அவர்கள் ஸ்தாபிதம் செய்துள்ளார் என்று உயர்நீதிபதி ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகின்றார். (I L R 27 சென்னை பக்கம் 438 பார்க்கவும்.)

மேலே குறிப்பிட்ட மடங்களின் இன்றைய நிலை, அவற்றின் சரியான விலாஸம் பற்றிய விவரங்களை அங்கங்கே வசிக்கும் அன்பர்கள் சேகரித்துக் கீழ் குறித்திருக்கும் முகவரிக்கு அனுப்பித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இது விஷயம் அனுப்புவோர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உபநிஷத் பிரம்மேந்த்ர மடம் சிஷ்ய ஸ்வாமிகள்
ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள்
ஸ்ரீ திருவிக்கிரமநேந்த்ர ஸ்வாமிகள்
சென்னை நுங்கம்பாக்கம் உபநிஷத் பிரம்மேந்த்ர
ஆச்ரம டிரஸ்டிகள்

இது சம்பந்தமாகப் பின்கண்ட விலாஸதாருக்கு எழுதிக் கொள்ளலாம்.

ஸ்ரீ தத்தாஜி,
டிரஸ்டி,
ஸ்ரீ உபநிஷத் பிரம்மேந்த்ர ஆச்ரமம்,
வைத்தியநாதய்யர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை — 34

சின்ன மீனும் பெரிய மீனும்

கொந்தளிக்கும் அலைகள் நிறைந்த அந்தச் சமுத்திரத்தில், சலனமில்லாத அடித்தளத்தில் ஒரு சிறிய மீன் ரொம்பவும் சுதந்திரமாக ஆடி, அசைந்து நீந்திக் கொண்டிருந்தது. அந்த மீனுக்கு ஒரே மகிழ்ச்சி. கண்களை இலேசாக மூடி மூடித் திறந்தது. கடலுக்கு மேற்பரப்பில் வந்து கொஞ்ச நேரம் நீந்தியது. மீண்டும் கடலுக்கு அடியில் போய் விளையாடிக் கொண்டிருந்தது. சற்று முன்தான் இரை அகப்பட்டது அந்த மீனுக்கு.

எதிர்த்தாற்போல் வருவது என்ன ? அந்தச் சின்னஞ்சிறிய மீன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் ஒருமுறை பார்த்தது. அங்கே ஒரு பெரிய மீன் வேகமாக வந்து கொண்டிருந்தது. 'பெரிய மீன்..... அதற்கும் அந்தச் சமுத்திரத்தில் வாழ உரிமை உண்டு. என்னைப் போல' என்று அந்தச் சின்ன மீன் நினைத்துக் கொண்டு கொஞ்சம்கூட அஞ்சாமல் முறைத்துக் கொண்டு நின்றது.

நெருங்கி வந்த பெரிய மீன் சின்ன மீனை ஆவலுடன் பார்த்தது. பார்த்தவுடன் அதை விழுங்கத் தன்னுடைய பெரிய வாயை அகலமாகத் திறந்தது. இதைப் பார்த்ததும் அந்தச் சின்ன மீனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது.

"ஏ.... பெரிய மீனே, உன்னைப்போல எனக்கும் இந்தச் சமுத்திரத்தில் வாழ உரிமை உண்டு. இந்தக் கடலில்தான் என்னுடைய முன்னோர்கள் வாழ்ந்தார்கள்.....நானும் வாழப் பாத்தியதை உண்டு. என்னை ஏன் விழுங்க நினைக்கிறாய்?" என்று ஓவென்று கத்தி, உரிமை முழக்கமிட்டது சின்ன மீன்.

பெரிய மீனுக்கு இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை......

"நான் உன்னை விழுங்கக் கூடாதென்றால்...நீயாவது என்னை விழுங்கி விடேன்! நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லை" என்றது பெரிய மீன்.


"அது சரி... நீ என்னை விழுங்குவதற்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை எனக்கு உன்னை விழுங்குவதற்கும் உண்டு....." என்று சின்ன மீன் சொல்லிக் கொண்டே தன்னுடைய சின்னஞ்சிறிய வாயை எவ்வளவு அகலமாகத் திறக்க முடியுமோ அவ்வளவு அகலமாகத் திறந்து கொண்டு பெரிய மீனை விழுங்க முயன்றது. முடியவில்லை. அந்தப் பெரிய மீனை வாயைத் திறந்து கொண்டு சுற்றிச் சுற்றி வந்ததுதான் மிச்சம்.

கடைசியாக அலுத்துப் போய், "சரி, என்னை விழுங்கிவிடு. இதுதான் உலக நியதி போல இருக்கிறது" என்று சொல்லி விட்டுச் சின்ன மீன் கண்களை மூடிக் கொண்டது.

—கஸ்தூரி கணேசன்

(மேல்நாட்டுக் கதை ஒன்றைத் தழுவியது)





கந்தன் கருணை

36. அறிவுரை பலிக்கவில்லை!

சூரனுக்குச் சிங்கமுகாசுரன் ஐயனின் பெருமையை விளக்கலானான்:

''முருகன் சிவபெருமானின் கண்களினின்று உதித்த சோதி. சிவபெருமானின் பெருமையை நன்கு அறிந்த தாங்கள் அவரது செழுஞ்சாருகத் தோன்றியுள்ள குமரனின் ஆற்றலை அலட்சியம் செய்வது எப்படிப் பொருந்தும்? அவர் வேதங்களாலும் அறிந்து கொள்ள முடியாத முதற் பொருள். சற்கருமங்கள் இல்லாத பாமரர்களால் அறிய முடியாத சிற்பரமூர்த்தியைப் பாலகன் என்று இகழ்ந்து பேசுகின்றீர்கள். சிறியதோர் ஆலம் விதையில் மிகப் பெரிய மரம் ஒடுங்கியிருந்து தோன்றுவது போல் எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமான சிவத்தின் ஆற்றலைத் தம்மில் பெற்றவரே ஆறுமுகக் குமரனார்.

'' சீலம் இல்லவர்க் குணர
வொண்ணுத சிற்பரனைப்
பாலன் என்றனை அவனிடத்தில்
பல பொருளும்
மேலைநாள் வந்து தோன்றிய
சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே
அவதரித் ததுபோல்

'' உருவம் சிறியதா யிருப்பதைக் கொண்டு அவருடைய ஆற்றலைக் கணிக்க முடியுமா? அவர் உருவமேயற்ற அருவமுமாவர்; உருவமுமாவர். அவரது திருவிளையாடலை யாரே கூற முடியும்?

'' அருவு மாகுவன்; உருவமும்
ஆகுவன்; அருவும்
உருவு மில்லதோர் தன்மையும்
ஆகுவன்; ஊழின்
கருமம் ஆகுவன்; நிமித்தமும்
ஆகுவன்; கண்டாய்
பரமன் ஆடலை யாவரே
பகர்ந்திடற் பாலார்

''அண்ணு! சிவபிரானின் அடியாராகிய தாங்கள் சிவமே தந்த முருகனைச் சிறுவராக நினைத்தது எப்படிப் பொருந்தும்? உமக்கு வரம் தந்த சிவபெருமான் தாமே உம்மை அழிப்பது முறையல்ல என்ற காரணம் பற்றித் தான் முருகனைத் தோற்றுவித்திருக்கிறார்.

திருமுருக கிருபானந்தவாரியார்

" வரமளித்த யாம் அழிப்பது
முறையன்று வரத்தால்
பெருமை பெற்றுள சூரனை
அடுவது பிறர்க்கும்
அரிதெனப்பரன் உன்னியே
தன்னுரு வாகும்
ஒருமகற்கொடு முடித்துமென்
றுன்னினான் உளத்தில்

"நல்ல கட்டையைப் போட்டு அனல் மூட்டினால் அவ்வளவும் சிவப்பாயிருக்கும். சிறிது நேரம் சென்று பார்த்தால் மேலே முழுதும் சாம்பல் பூத்திருக்கும். சுவாமியின் திருமேனி நெருப்பு. மேலே நீறு பூத்திருக்கும். நீறுதானே என்று கையை வைத்தால் சுட்டுவிடும். அந்தக் காரியத்தைத்தான் நீங்கள் செய்கிறீர்கள் அண்ணா! அதற்குத்தான் இவர்கள் அறியாமையால் உம்மை மேலும் ஊக்குகின்றனர்.

"சிவம் வெறும் வெண்ணீறு என எண்ணினால் நெருப்பாகச் சீறும். சிவம் நெருப்பு என அறிந்து அடங்கியிருப்பின் அதன் வெண்ணீறே தண்ணென அருள் செய்யும். ஞானவொளி வீசுவது திருநீறு. இறைவன் திருநீற்றையணிவது தன்னை நினைக்கின்ற ஆன்மாக்களின் வினைகள் பொடிபட வேண்டும் என்பதன் பொருட்டேயாகும்" என்றெல்லாம் சிங்கமுகன் கூறினான்.

சிவபெருமான் அணிந்திருக்கின்ற சந்திரனும் வெண்மை; தும்பை மலரும் வெண்மை. அவரது வாகனமாகிய ரிஷபமும் வெண்மை. வாசம் செய்யும் மலை வெள்ளியங்கிரி; உண்மையின் உருவான வெண்மை ஐயனைக் குறித்த எல்லாப் பொருட்களுக்கும் உண்டு. அதுவே அடியவர் மனத்தை வெளுக்கச் செய்யும்.

கடவுளுக்கு உருவத்தைக் கற்பனையாகப் படைத்தார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அற்ப மனிதனா கடவுளுக்கு உருவம் படைக்கிறான்? உருவத்தை எம்பெருமானே எடுத்துக் கொண்டார். இதன் உட்பொருளை சிங்கமுகாசுரன் வாயிலாகக் கச்சியப்பர் விளக்குகிறார்.

"சுரவரைச் சிறு பாலரை
மாதரைக் குறைநீர்
விரத நற்றொழில் பூண்டுளோர்
தம்மை மேலவரை
அருமறைத் தொழிலாளரை
ஒறுத்தனர் அன்றோ
நிரய முற்றவும் சென்றுசென்
றலமரும் நெறியோர்

(நிரயம் — நரகம்)

"நரகத்துக்குப் போய்த் துன்பப்படுபவர் யார்? பெரியவர்களுக்குத் துன்பம் செய்தவர்கள்; குழந்தைகளுக்குத் தீங்கு செய்தவர்கள்; பெண்களை ஹிம்சித்துக் கொல்கிறவர்கள்; விரதம் இருப்போருக்குக் கெடுதல் செய்வோர்; தான தருமம் செய்வோரைத் தடுப்போர் ஆகிய இவர்களெல்லோரும் நரகங்களுக்குச் சென்று துன்புறுவார்கள். ஆகவே, அண்ணா! தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தாங்கள் தீங்கு செய்வது நியாயம் அல்ல" என்று சிங்கமுகாசுரன் கூறினான்.

"தமையனே! எல்லாம் படித்த தாங்கள் மயங்கி இருக்கிறீர்கள். மயக்கத்தில் உள்ள தாங்கள் எனக்கு மயக்கம் என்கிறீர்கள். அடியேன் சொல்வதைக் கேளுங்கள். முருகனின் ஒப்பற்ற சக்தியை உணருங்கள்.

" வேதக் காட்சிக்கும் உபநிடத்
துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்;
புதியரில் புதியன்;
மூதக் கார்க்கு மூதக்கவன்
முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய்
நின்ற அமலன்.

"அவர் வேதங்களின் ஞானத்திற்கும், உபநிடதங்களின் ஞானத்திற்கும் காணுதற்கு அரியவர்; புதியார்க்கும் புதியவர் முதியர்க்கும் முதியவர்; முதலுக்கு முதலானவர்; முடிவிற்கும் முடிவு ஆனவர்; உயிர்க்கும் உயிராய் நின்றவர்" என்று சிங்கமுகாசுரன் ஸ்வாமியின் பெருமையை அண்ணனுக்கு எடுத்துக் கூறினான்.

ஒரு பேராசிரியர். அவருக்குப் பதினெட்டு பாஷைகள் தெரியும். கடற்கரைக்குச் சென்றார் அந்தப் பேராசிரியர். மணலில் அமர்ந்ததும் அவரது சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது.

"கடவுளின் நிறம் என்ன? அவனது குணமென்ன? அவன் உருவம் என்ன?" என்ற தீவிரமான ஆராய்ச்சியில் ஆழ்ந்தார் பேராசிரியர். அப்போது சித்திரக் குள்ளன் ஒருவன் அங்கே வந்தான். 'குடுகுடு' வென்று பார்ப்பதற்கே விநோதமாக ஓடலானான். ஓட்டமாக ஓடிக் கடல் தண்ணீரில் இறங்கினான். கிளிஞ்சல் ஒன்றில் கடல் நீரை முகர்ந்துகொண்டான். அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடிவந்து கிளிஞ்சலில் முகந்துகொண்ட நீரை மணலில் கொட்டினான். இப்படியாக அவன் ஓடுவதும், கிளிஞ்சலில் நீர் முகந்து வந்து மணலில் கொட்டுவதுமாக இருந்தான். ஆராய்ச்சியில் ஆழ்ந்திருந்த பேராசிரியரின் கவனம் சித்திரக் குள்ளன் மீது திரும்பியது.



ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்
முரட்டு கேசத்தையும்
படியச்செய்கிறது—
நாள் முழுவதும்
மழமழப்பாய் வைக்கிறது
இழைய வாரிவிடப்பட்டு
பளபளக்கும் அழகிய
கேசம்...நறுமணம் வீசும்
அடர்த்தியான கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

சித்திரக்குள்ளனின் செய்கை அவருக்கு விசித்திரமாக இருந்தது.

பேராசிரியர் சித்திரக்குள்ளனைக் கூப்பிட்டு "நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு நேரடியாகப் பதில் கூறாத குள்ளன் "ஐயா! இன்று உலகில் ஏழைகள் அதிகமா? பணக்காரர்கள் அதிகமா?" என்று கேட்டான்.

"ஏழைகள்தான் அதிகம்" என்று பதில் சொன்னார் பேராசிரியர்.

"உலகில் ஏழைகள் அதிகமாக இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. நான் ஒரு புரட்சிகரமான வேலை செய்கிறேன். அதன்மூலம் ஏழைகளாக இருப்பவர்கள் அனைவரையும் பணக்காரர்களாக ஆக்கப்போகிறேன். ஏழைப் பெண்கள் அனைவருக்கும் விலையுயர்ந்த நகைகளைக் கொடுக்கப் போகிறேன். ஏழைகளையெல்லாம் கோடீசுவரர்களாக்குவதற்காகவே இப்போது வேலை செய்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டுவிட்டான் சித்திரக்குள்ளன்.

சித்திரக்குள்ளன் கூறியதைக் கேட்ட பேராசிரியருக்கு முன்னமே ஏற்பட்டிருந்த வியப்பு பன்மடங்கு அதிகரித்தது.

சித்திரக் குள்ளன் பழையபடியே நீருக்குள் ஓடுவதும், கிளிஞ்சலில் நீர் முகந்து வந்து மணலில் கொட்டுவதுமான தனது வேலையை வேகமாகச் செய்து கொண்டிருந்தான். நெடுநேரம் ஆகியும் சித்திரக் குள்ளன் தனது வேலையை நிறுத்தவில்லை.

பேராசிரியரின் பொறுமை எல்லை கடந்து விட்டது. மீண்டும் சித்திரக் குள்ளனை அழைத்தார். அவன் வந்து நின்றதும் "உன்னுடைய வேலை முடிந்து விட்டதா?" என்று கேட்டார்.

"ஐயா! நான் மேற்கொண்டிருக்கும் வேலை எவ்வளவு பெரியது! அதற்குள் முடிந்துவிடுமா?" என்று ஒரு போடு போட்டான் சித்திரக் குள்ளன்.

"தம்பி! நீ சொல்வதும், செய்வதும் எனக்குச் சிறிதும் புரியவில்லை. இந்தக் கிளிஞ்சலில் நீர் முகந்து வந்து மணலில் கொட்டுவதற்கும் ஏழைகளைப் பணக்காரர்களாக்குவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் பேராசிரியர்.

"ஐயா! சமுத்திரத்துக்குக் கடல் என்பதைப் போலவே வேறொரு பெயரும் உண்டு தெரியுமா?" என்று கேட்டான் சித்திரக்குள்ளன்.

"ஆம் தம்பி! ரத்னாகரம் என்ற பெயரும் சமுத்திரத்துக்கு உண்டு" என்று பதில் சொன்னார் பேராசிரியர்.

"முத்து, பவளம், வலம்புரி, நவரத்தினங்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் எல்லாம் இந்தக் கடலில் இருக்கின்றன. கடல் நீரைக் கிளிஞ்சலில் முகந்து வந்து மணலில் கொட்டிவிட்டால் கடல் நீர் வற்றிவிடும். கடல் வற்றிய பிறகு அதிலுள்ள முத்து, பவளம், வலம்புரி, நவரத்தினம் முதலிய எல்லாவற்றையும் எடுத்து ஏழைகள் அத்தனை பேருக்கும் கொடுத்தால் பணக்காரர் ஆகிவிடுவர் அல்லவா? அதற்காகத்தான் இப்பொழுது கிளிஞ்சலில் நீரை முகந்து வந்து மணலில் கொட்டுகிறேன்" என்று பதில் கூறினான் சித்திரக்குள்ளன்.

சித்திரக்குள்ளன் கூறிய பதிலைக் கேட்டதும், சிரிப்பை அடக்க முடியா

மல் நெடு நேரம் வாய் விட்டுச் சிரித்தார் பேராசிரியர்.

''அது சரி ஐயா! நீங்கள் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தீர்களே! எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டான் சித்திரக்குள்ளன்.

''நான் கடவுளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தேன்'' என்றார் பேராசிரியர்.

இந்தப் பதிலைக் கேட்ட சித்திரக்குள்ளன் அவர் சற்று முன் சிரித்ததைவிட அதிகமாகவே 'கலகல'வெனப் பலமாக நகைக்கலானான்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார் பேராசிரியர்.

''அதுவா? சின்னக் கிளிஞ்சலில் தண்ணீர் முகந்து வந்து மணலில் கொட்டினால் கடல் வற்றிவிடுமா என்று நினைக்கிறீர்கள். நீங்கள் கடவுளைப் பற்றிச் செய்யும் ஆராய்ச்சியும் அது போன்றது தான். தங்களுடைய சிறிய அறிவினால் கடவுளையும் அவரது அனந்த கல்யாண குணங்களையும் அளவுகட்டிவிட முடியுமா? கடவுளை ஆராயும் உங்கள் வேலை முடிவதற்குள் நான் என் வேலையை முடித்து விடுவேன்'' என்று பதில் சொன்னான் சித்திரக்குள்ளன்.

இந்த உண்மையைச் சிங்கமுகாசுரன் சூரபன்மனுக்குச் சொல்கிறான். ஆண்டவனின் உருவம் என்ன?

" ஞானந்தான் உருவாகிய
நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென்றால் அஃதெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந்
தேற்றிலர் முழுவதும்
தானுங் காண்கிலன் இன்னமுந்
தன்பெருந் தன்மை

''ஞானமே வடிவமாக இருக்கின்ற எம்பெருமான் திருமேனியின் தன்மையை நீயும் நானும் சொல்வதென்றால் அஃது எளிதோ? பரம மௌனிகளாக இருக்கின்ற ஞானிகளுக்கே அவர் பெருமை தெரியாதே!

''முருகப் பெருமானுக்குத் தன் பெருமை தெரியாமலில்லை. அவர் சர்வக்ஞர். சிலரிடம் அளவுக்குமேல் செல்வமிருந்தால் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாது. அது போலத்தான் முருகனுக்கும்.

''அண்ணா! தத்துவங்களையெல்லாம் கடந்து தனி முதல்வனாயிருக்கின்ற முருகப் பெருமானைப் பாலன் என்று இகழ்ந்து பேசுகிறாயல்லவா? உனக்குத் தன் பேராற்றலை உணர்த்துவான் வேண்டியே அவர் போர்க் களத்தில் வந்திருக்கிறார். பிறப்பவர் இறப்பது திண்ணம். வச்சிர சரீரம் பெற்றுவிட்டோம் என்றும், ஆதலால் அழிவு இல்லை என்றும் எண்ணி விடவேண்டாம். தேவர்களையெல்லாம் சிறையிலிருந்து விடுதலை

செய்து அழியாமலிருக்க வழி தேடுங்கள்'' என்று சிங்கமுகாசுரன் கூறினன்.

''ஊன வில்லை யொடித்துக் கூனியின் சூழ்ச்சியினுல் அரசை இழந்து ஒட்டை மரத்தில் அம்பு விடுத்து, நான் இழைத்த சூழ்ச்சியினுல் மனைவியை இழந்து, உயிரைச் சுமந்து நிற்கும் மானுடனையா நீ பரம்பொருள் என்று கூறு கின்ருய்?'' என்று விபீஷணரைப் பார்த்துக் கேட்டான் இராவணன்.

அது போலவே, இங்கே சூரபன்மன் முருகனைப் பற்றிப் பேசிப் பாலன் என்று பழித்துப் பேசலானுன்.

'' காற்றில் தள்ளுண்டு, நெருப்பினில் சூடுண்டு, கங்கை
ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்கு அலைப்புண்டு
வேற்றுப் பேர் முலை யுண்டு அழுதே விளையாடும்
நேற்றைப் பாலனையோ பரம்பொருளென நினைந்தாய்?''

''காற்றினுல் தள்ளப்பட்டும், நெருப்பினுல் கொளுத்தப்பட்டும், கங்கை நதியில் அலைக்கழிக்கப்பட்டும், சரவணப் பொய்கை அலைகளால் மோதப்பெற்றும், தாய் அல்லாத வேற்றுப் பெண்களிடம் ஸ்தன்ய பானம் செய்தும் அழுது விளையாடும் பாலனையா பரம்பொருள் என்ருய்? நான் பெரியவன்; வரங்கள் பல பெற்றவன். ஆகவே, அந்தச் சிறுவனை வென்று நான் வெற்றி வாகை சூடுவேன். அசுரர் குலத்தில் பல பேரை அழித்தார்கள். நம் குலத்தை அழித்த தேவர்களைச் சிறை வைத்தது குற்றமன்று. குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது நியாயமே என்று மனுநூல் கூறுகிறது. ஆகவே ஒரு போதும் நான் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்க மாட்டேன். அது மட்டுமல்ல; எனக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் இந்திரனையும் பிடித்துக் கொண்டு வந்து சிறையில் வைப்பேன். என்னை எதிர்த்துச் சிவபெருமானே வந்து போர் செய்தாலும் பயப்பட மாட்டேன். நீ எனக்கு உடன் பிறந்தவனுயிருந்தும் வானவர்களுக்குப் பரிந்து பேசுகின்ருயே! உடன் பிறந்தே எனக்கு வெடி வைக்க முற்படும் உன்னைவிட எனக்கு வேறு பகையும் வேண்டுமோ? பூமிக்குப் பாரமாகவா நீ ஆயிரம் சிம்மத் தலைகளையும் இரண்டாயிரம் தோள்களையும் சுமந்து கொண்டிருக்கிருய்? உன்னுடைய வலிமையும் வீரமும் எங்கே போய்விட்டது? உன்னுல் அசுரர்களின் புகழ் மங்கிவிட்டது. நீ உயிருடன் இருப்பதும் ஒன்றுதான்; இறப்பதும் ஒன்றுதான். நான் போகிறேன் போருக்கு. நீ உன் நகரம் சென்று உடம்பில் ஒரு புண்ணும் படாமல் சௌக்கியமாக இரு'' என்று கர்ஜித்தான் சூரபன்மன். **(தொடரும்)**

ஒருவனது வெளித் தோற்றத்தைக் கண்டு மட்டும் ஆசாமி எப்படிப்பட்டவன் என்று மதிப்பு போட்டு விடக் கூடாது என்பார்கள். ஒருவன் அணிந்திருக்கும் ஆடை அணிகளிலிருந்தே அவன் எத்தகையவன் என்று எடை போட்டு விடலாம் என்றும் கூறுவார்கள். ஆகக்கூடி பகட்டாக இல்லை என்றாலும் பார்ப்பதற்குப் பளிச்சென்று விளங்குவது குறிப்பாகப் பட்டண வாசத்துக்கு இன்றியமையாததாகிறது.

படத்தில் கல்பனா அணிந்திருக்கும் சட்டை கசங்காத தன்மை பெற்ற காலிகோத் துணியிலானது. சட்டையில் காணப்படும் ''டிசைன்''கள் தற்கால நாகரிகத்துக்கு ஏற்ப அமைந்தவை என்பதோடு மெருட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்தர நூல்களால் போடப்பட்டவையாம். ஸ்பரிசத்துக்கு இந்தப் பகுதிகள் ஓரளவு ஸாடினின் தன்மை கொண்டிருக்கின்றன.

நல்ல துணியைத் தேர்ந்தெடுப்பதுடன் அதனை நன்ன பாணியில் வெட்டித் தைப்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும். காலரின் அமைப்பைக் குறிப்பாகக் கவனிக்கவும். சட்டையின் கைகள் சற்று இறுக்கமாகவும் தூக்கலாகவும் உள்ளதைக்



இன்றைய நாகரிகம்



காலணிகள்: பம்பாய் ஜே. ஜே. அண்ட் சன்ஸ் தயாரிப்பு.
சட்டை தயாரிப்பு: குத்தூஸ், 2/80 பிராட்வே, சென்னை-1
பேண்ட்: பேஷன் ஹோம், வாலஸ் ரோடு, சென்னை-8
போட்டோ: ஸ்டில்லோகிராப் ஸ்டுடியோ, சென்னை17



காண்க. சுமார் பத்து ரூபாய்க்குள் அடங்கும் இந்தச் சட்டை.

பேன்ட் டைட்ஸ் வகையைச் சேர்ந்தது. மடிப்புக் கலையாத, கசங்காத நல்ல டெரிலின் துணியிலானது. விலை கூடுதலாகுமே என்று யோசிப்பவர்கள், சாதாரணமாக நாலு பேண்டுகள் தேவைப்படும் இடத்தில் இரண்டு தைத்தால் போதுமென்பதையும் மிச்சமாகும் சலவைச் செலவு, நீடித்த உழைப்பு ஆகியவற்றையும் மறவாமல் கணக்கிலெடுத்துக் கொண்டு மறு பரிசீலனை செய்தல் நலம்!

காலணிகள்: 1. ஸாம்ஸன் ஸ்லிப்பர்கள்: எடுப்பான சந்தன நிறம். 'குஷன்' வைத்திருப்பதால் நடக்க இதமாயிருப்பதுடன் ஆளைச் சற்று உயரமாகவும் காட்டும்.

2. அட்லாஸ் ஷூ: கூர்மையான அமைப்பு; கறுப்பு நிறம். பக்கவாட்டில் லேஸ் இடம் பெற்றுள்ளதால் நாற்காலியில் உட்கார்ந்து வயிற்றை எக்கிக் குனிந்து கஷ்டப்படாமல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு முடிச்சுப் போட வசதியாக இருக்கும். அணிபவரின் உயரத்தை அதிகரித்துக் காட்டக் கூடியவை.

எப்படி முடியும்? — பெயிலான பையன்



குமாரின் தந்தை பேப்பரைப் பார்த்தார்.

இந்த வருடமும் குமார் பெயில்! அவருக்குக் கோபம் உச்சத்தில் இருந்தது! போன வருடமே அவர் தம் மகனிடம் சொல்லியிருந்தார். "அடுத்த வருடம் பெயிலானியோ தொலைச் சுடுவேன் தொலைச்சு" இப்போது? அவர் மனைவியின் குரல் கேட்டது.

"என்னங்க....குமாரை விட்டிலே காணோம். இன்னிக்கு ரிஸல்ட் வருதுன்னு நேத்திக்கே சொன்னான். என்னங்க ஆச்சு?"

தந்தைக்குப் பகீரென்றது. ஒருவேளை...

மொட்டை மாடிக்குப் போய் நின்று நாலுபுறமும் பார்த்தார். அவர் வீட்டின் அருகேதான் ரயில் தண்டவாளம் இருக்கிறது. ஐயோ! அதை நோக்கியல்லவா குமார் ஓடிக்கொண்டிருக்கிறான்.

"குமார்" என்று பலமாகக் கத்திக்கொண்டே மகனைத் தொடர்ந்தார் தந்தை. தூரத்தே ரயில் வரும் ஓசை கேட்டது.

"குமார்...வேண்டான்டா. நீ பெயில் ஆனாலும் பரவாயில்லேடா. உனக்கு நீ கேட்ட சைக்கிள் வாங்கித் தரேன்டா...வா...வா... திரும்பி வா"- கத்திக்கொண்டே ஓடினார் தந்தை.

-------- எப்படி முடியும்? --------

சற்று சிந்திக்கவும். பிறகு கீழே படிக்கவும்

------இப்படி முடியும்------

குமார் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் தந்தை!

"குமார்... வேண்டான்டா..... நான் கோபத்தில் ஏதோ சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லே. அதை நெஜம்னு நெனைச்சியா? வா கண்ணு வா."

குமாருக்கு விஷயம் புரிந்தது. காலையில் மொட்டை மாடியில் நின்று பந்து விளையாடியதும், தண்டவாளத்தின் அருகில் விழுந்த பந்தை அவன் எடுக்க ஓடியதும் கடைசியில் நல்லதாய்த் தான் போயிற்று! இல்லையென்றால் பெயிலானதற்கு உதைக்குப் பதிலாகச் சைக்கிள் பரிசு கிடைக்குமா, என்ன? - விமலா ரமணி



அற்புதப் படம்

இந்தியக் கண்ணோடு பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படத்தான் செய்கிறது. 'என்ன பிரமிப்பு?' என்று கேட்கலாம். 'ஆகா' தங்கள் குறையைத்தான் எவ்வளவு சாமர்த்தியமாக நிறையாக மாற்றிக் கொண்டு விட்டார்கள்!'' என்ற வியப்புத் தான் ஏற்படுகிறது.

இந்தியாவைப் போன்றோ, கிரேக்க, ரோம, இங்கிலாந்து போன்றோ பேரரசர்கள் ஆண்டும், படையெடுத்துச் சென்றும் நிகழ்த்திய வியப்பூட்டும் கட்டங்கள் நிறைந்த நீண்ட நெடிய சரித்திரம் கிடையாது அமெரிக்காவுக்கு. நானூறு ஆண்டுகளுக்கு முன் தான் ஐரோப்பியர்களுக்கு அமெரிக்கா என்ற ஒரு கண்டம் இருப்பது தெரிந்தது. கிழக்கு அமெரிக்காவில் தான் முதலில் குடியேறினார்கள். ஓரளவு தம் வயப்படுத்திக் கொண்ட பிறகு ஒரு சில குடும்பங்கள் மேற்கு நோக்கிக் கிளம்பின. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் நீர்மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் வனாந்தரமான பிரதேசங்களில் சென்று, சிவப்பு இந்தியர்களோடு நட்பை வளர்த்துக் கொள்ளக்கூடிய இடத்தில் நட்பை வளர்த்து, சண்டை போட வேண்டிய இடத்தில் போராடிப் பல இன்னல்களை வெற்றி கொண்ட வரலாறே இப்படம்.

உருப்படியான கதையோ, காதலோ, மற்ற ரஸங்களோ காட்ட வாய்ப்பில்லாத ஓர் விஷயத்தைக் கொண்டு அத்தனை ரஸங்களையும் இப்படத்தில் புகுத்தியிருக்கிறார்கள். ஓஹியோ நதியில் திடீர் என்று வெள்ளப் பெருக் கேற்பட்டு அந்தக் குடும்பம் தத்தளிக்கும் காட்சியும் எருமைக் கூட்டத்தின் படையெடுப்புக் காட்சியும், ரயிலில் நடைபெறும் போராட்டக் காட்சியும் மெய் சிலிர்க்க வைக்கின்றன.

அமெரிக்கத் திரை உலகின் முன்னணி நடிகர்கள் அனைவரும் இதில் நடித்திருக்கின்றனர். மூன்று அகாடமி பரிசுகள் பெற்ற படம்.

தியேட்டரில் ஜனகணமன பாடும் போது மரியாதையாக நின்று வணக்கம் செலுத்தத் தெரியாத நமக்கு, இப்படம் ஒரு பாடம்.

HOW THE WEST WAS WON -






பூத் பங்களா

“பௌர்ணமி இரவு”ப் போலவே இதுவும் இரட்டைக் கொலைக் கதைதான். யார் கொன்றார்கள் என்னும் இரகசியத்தைக் கடைசிவரை மூடி மறைத்துப் படத்தை முடித்திருக்கிறார் நடிகர் மஹ்மூத்.

மஹ்மூதே கதை புனைந்து நடித்து இயக்கிப் படமாக்கியுள்ள ‘பேயுலாவும் பங்களா’விலே காதல் உண்டு. ஹாஸ்யம் உண்டு. பல்சுவைக் கூட்டாக விளங்கும் இந்தப் படத்திலே நாஜு பாலீஸ்கர் உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறார்.

என்னும் அற்புதப் படத்தில் வரும் காட்சி.



மோகனாக வரும் மஹ்மூத் பேய் உலாவும் பங்களாவின் இரகசியத்தை அறிய வந்து பயந்து செத்து நம்மைச் சிரிக்க வைக்கிறார். நண்பனாக வரும் உபநடிகரோ அவருக்கு ஈடு கொடுத்து நடித்துப் புகழில் பெரும் பகுதியைத் தட்டிக் கொண்டு போகிறார். மஹ்மூத் தமக்குப் பிடித்தமான பெண் வேஷம் பூண்டு நடிக்கும் காட்சியில் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்துகிறார்.

ரேகாவாக வரும் தனுஜா தன் தோழிகளுடன் பேய் பங்களாவில் படும் அவஸ்தைகளும், அவளுக்கு வரும் டெலிபோன் செய்திகளும் ஏதோ பயங்கரம் நிகழவிருக்கிறது என்பதை அம்பலப் படுத்துகின்றன.

கடைசியில் நிகழும் அந்தப் பயங்கரம் என்ன தெரியுமா? மோகனுக்கும் ரேகாவுக்கும் திருமணம் நிகழ்ந்து கதை சுபமாக முடிவதுதான்!


கதைச் சுருக்கப் புத்தகத்தில் ‘முடிவை நாங்கள் கூறமாட்டோம். நீங்களும் படத்தைப் பார்த்துவிட்டுப் போய் பின் கூறக் கூடாது’ என்னும் பொருள் தொனிக்கக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சரி, அவர்கள் ஆசையைத்தான் கெடுப்பானேன்? முடிவு என்ன என்பதைக் கூறாமல் விடுகிறோம். ஆனால் உண்மைக் காரணம் என்ன, தெரியுமா? அவர்களைப் போலவே படம் பார்த்து எழுந்து வந்த நமக்கும் முடிவு சரிவர வி[illegible]காமல் இருப்பதுதான். எப்படி மர்மம்?


அவள் எங்கே?
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி
14
சேகர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் டெலிபோனை வைத்து விடுகிறான்.
என்ன சந்துரு அவன் பதிலைக் கேட்டாயா?
மறுபடியும் யாருக்கப்பா டெலிபோன் செய்யப் போகிறாய்?
சினிமா உலகோடு தொடர்புள்ள எனக்குத் தெரிந்த பிரபல எக்ஸ்ட்ரா சப்ளையர் ஒருவன் இருக்கிறான். மாலதி ஒரு காலத்தில் அவன் குரூப்பில் இருந்தவள். அவனுக்குத்தான் போன் செய்கிறேன்.
மிஸ்டர் சந்துரு!


ஹலோ... ஹலோ!
பாவிப் பயல் டெலிபோனை வைத்து விட்டானே. ம்... எதற்கும் துணிந்த இவனை இப்படிப் பயம் பற்றுவதானால் இதில் ஏதோ விஷயமிருக்கிறது...
என்ன சொல்கிறான் அந்த ஆள்?
வரலாமா?
வாருங்கள். உங்களைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
ஏதாவது புதிய தகவல்கள் கொண்டு வந்திருக்கிறீர்களா?
தெம்பு தரும்படியாக ஏதாவது தகவல்களை நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் நான் வந்தேன். டெலிபோன் அழைக்கிறது; கேளுங்கள்.
ஹலோ!... ரேணுகாதான் இருக்கிறேன்.
போன் உங்களுக்குத்தான் போலிருக்கிறது.
தான் சந்துருவைச் சந்திக்கப் போவதாகவும், ஏதாவது அவசரமானால் அங்கு போன் செய்யும்படியும் தன் பணியாளுக்கு உத்தரவிட்டிருந்தாள் ரேணுகா.
என்ன...? போலீஸ் ஸ்டேஷனிலிருந்தா? ம்... உடனேயேவா? வா...? சரி.
போலீஸிலே என்ன செய்தி?
நீரில் மூழ்கித் தேடித் தடையங்களைக் கண்டு பிடித்து விட்டார்களாம். அதைப் பார்த்து ஊர்ஜிதம் செய்ய என்னை போலீஸார் எதிர்பார்க்கிறார்கள்.
அது எப்படி சாத்தியம்? உங்கள் தங்கை உயிரோடு, ஆனால் நினைவுகளில் கோளாறு ஏற்பட்டு வெளியேறி இருக்கும்போது இந்தத் தகவல் எப்படி...?
குமாரின் திட்டப்படி அந்த உடலுக்குரிய தங்கையாகவுமிருக்கலாமல்லவா? ரேணுகா! என்ன இது? இந்தச் சமயத்தில்தான் நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும். இப்படி ஒரேயடியாக இடிந்து போய் விட்டீர்களே!

தொடரும்...



இந்தப் பிரத்தியேகமான பெப்பித்தோ ஸோல் ஈரமான ரஸ்தாக்களில் வழுக்கி விடாது

கரோனு பாத அணிகளின் தனிச் சிறப்பு

நீடித்து உழைக்கும் ஸோல், உறுதியான அமைப்பு

மழைகாலத்திற்கு ஏற்ற கரோனு பாத அணிகள் உறுதியானவை ஆகையால் ஒன்றல்ல, பலவருஷங்கள் உங்களுக்கு மழைகாலத்தில் சிறந்த சேவை புரியும். இந்தப் பாத அணிகளின் ரப்பர் கொண்டு தயாரிக்கப்பட்ட பிரத்தியேகமான வழுக்கிவிடாத ஸோல், நெடுநாள் உழைப்பதற்காக பாத அணிகளின் மேல் பாகத்துடன் பிரத்தியேக முறையில் பொருத்தப்பட்டுள்ளன.

இவை நாகரிகமானவை...குடும்பத்தினர் எல்லோருக்கும் ஏற்றபடி பலவித புதிய டிஸைன்களில் தயாரிக்கப்பட்டவை.

இந்தப் பாத அணிகளை அணிந்து நீங்கள் கொட்டும் மழையிலும், சௌகரியமாக, சுகமாக நடக்கலாம்.

Carona QUALITY SHOES

கரோனு ஸாஹு கம். லிமிடெட்
ரெஜிஸ்டர்டு ஆஃபீஸ்:
221, தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய்-1



மோஹாக்



பெல்லரீனு

JWT-CSC-3942







1, 2. ஸ்ரீமதி கலோசனா ஸ்தாணுநாதனைத் தலைவியாகக் கொண்டு சிறப்புற இயங்கி வரும் பாரதி ஸ்திரீ சமாஜத்தின் கட்டிட நிதிக்காகக் குமாரி ராணி ராமன் பரத நாட்டிய விருந்தளித்தார். இவ்வைபவத்துக்கு மைசூர் சர்வகலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீமாலி தலைமை வகித்தார்.

3. பம்பாய் பாரதீய வித்யா பவனத்தின் ஹாஸரிமல் ஸோமணி கல்லூரி தொடக்க விழாவில் மத்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி சவான் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

4. சென்னையில் நடைபெற்ற இராமலிங்க வள்ளலார் நூற்றாண்டு விழாவில் திரு சிவ சண்முகம் பிள்ளை தலைமை உரையாற்றுகிறார்.

5. காரைக்குடியில் 12ம் ஆண்டு குறள் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.





அத்தியாயம் இருபத்தெட்டு

கண்ணீர்க் கோலம்

கோட்டைக்குச் செல்லும் சாலை வழியே சாமந்திப்பூ சிங்காரியும் சபேசனும் முன் பின்னாக நடந்தனர். முதலில் குறுக்கிட்ட கூவம் ஆற்றுப் பாலத்தைக் கடந்ததும் அந்தச் சாலை நாற்சந்தியாகி, அங்கிருந்து கடற்கரைக்கு ஒரு சாலையும், கோட்டைக்கு ஒரு சாலையும், கோட்டை ஸ்டேஷனுக்கு ஒரு சாலையும், சைனு பஜாருக்குப் போக மேம்பாலச்சாலை ஒன்றுமாகப் பிரிந்தன. அவள் மேம்பாலச் சாலையில் திரும்பி நடந்தாள். அவனும் அவளுக்குப் பின்னால் சென்றான்.

சாலையின் உயர மட்டத்துக்குப் போன பின் அந்தச் சாமந்திப்பூ சிங்காரி நேரே செல்லாமல் இடதுபுற நடைபாதையோரமாக இருந்த சிமிண்டுக் கிராதியைத் தாண்டிக் கொண்டு செங்குத்தான சரிவில்இறங்கினாள். இப்போது அவ்விருவரும் ஒரு பெரிய கால்வாய் ஓரம் நடந்தனர்.



ஒளிக்கீற்று

குடலை அறுத்தெடுக்கும்படியான துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த அந்தக் கழிநீர் ஓடையின் இருபுறமும் சிறுசிறு குடிசைகள் தென்பட்டன. குடிசைகளா அவை? பிய்ந்து போன பழைய சினிமா பானர் துணிகளையும், தகரத் துண்டுகளையும், கிழிந்த கோணிகளையும், புளிப் பார்சலுக்கு உதவிய ஈச்சம் பாய்களையும் கொண்டு நாலடி உயரத்துக்குக் கூரைபோல் வேய்ந்து பன்றிக் கொட்டகைகளென உருவாக்கப்பட்டிருந்த அவற்றில் பன்றிகள் இருக்கவில்லை; திணமும், தசையும், உயிரும், ஆன்மாவும் கொண்ட மனிதர்கள் வசித்தனர். அந்தக் குடிசைகளுக்கு எதிரே பிரும்மாண்டமான வைத்தியக் கல்லூரிக் கட்டடம்; அதற்கு அப்பால் அதைவிடப் பெரிதான ஜெனரல் ஆஸ்பத்திரி. சுகாதாரத்தை அடிப்படைத் தத்துவமாகக் கொண்ட அந்த வைத்தியத்துறை மனைகளை நோக்கிச் சவால் விடவே இந்தக் குடிசைகள் அங்கு இருந்தனபோலும்!




உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத் துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின் ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க் கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்திருக்கின்றனர். அதன் உன்னதமான நறுமணத்திலும் நீங்கள் பரவசமடைவீர்கள்... கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள் கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர் விரும்புவர்
COLGATE
HAIR OIL
எகானமி சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
ECHO-C-6.TAM.

''இன்னா அஞ்சலை, இன்னைக்கு மலைப்புத்தானா?'' என்று கால்வாய் ஓரம் கல்லடுப்பு மூட்டிச் சோறு பொங்கிக் கொண்டிருந்த கதம்பப்பூ கொண்டைக்காரி ஒருத்தி குத்தலாகக் கேட்டாள்.

''ஹுக்கும்! நீயும் வர்றியாமே. பங்கு போட்டுக்குவே?'' என்று அலட்சியமாகச் சொன்ன சாமந்திப்பூ சிங்காரி ஒரு குடிசைக்கு எதிரே போய் நின்று. ''யம்மோவ்! பொயலை வாங்கியாறச் சொன்னியே, இந்தா!'' என்றவாறு தன் இடுப்பில் செருகி வைத்திருந்த பையைப் பிடுங்கி உள்ளே எறிந்தாள். அதுதான் அந்த 'ராணி'யின் 'அரண்மனை' போலும்.'

''பார்த்தியாமே. பொயலை கொடுக்கிற சாக்கிலே முன் பணம் வாங்கினதைக் கொடுத்துட்டுப் போறாடி. அவ!'' என்று பக்கத்துக் குடிசைக் கெதிரில் உட்கார்ந்து மீன் ஆய்ந்து கொண்டிருந்த ஒருத்தி மற்றொருத்தியிடம் கிசுகிசுத்தாள்.

''அவனுக்கென்ன....அயகிய முகம்'' என்று பாட ஆரம்பித்தாள் தலை வாரிக்கொண்டிருந்த இன்னொருத்தி.

''அட சீ, சும்மா கெடங்கடீ!'' என்று சீறி விட்டு மேலே நடக்கலானாள் சாமந்திப்பூ சிங்காரி.

சபேசனால் இந்தப் புதிரான பேச்சுக்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. 'நச்சியைக் காட்டுகிறேன்' என அழைத்து வந்து இப்படி எங்கெங்கோ இழுக்கடிக்கிறாளே என்று உள்ளூறத் திகிலடைந்து நடுநடுங்கினான். பாலைத் தண்ணீரில் 'காக்காய் குளியல்' குளித்துக் கொண்டிருந்த சில ஆடவர்கள் தொண்டையைக் கனைத்துக்கொண்டு அவனைக் கேலியாக வெறித்துப் பார்த்தனர். இதனாலும் அவனுடைய பீதி பன்மடங்காகியது.

குலுக்கு நடை போட்டு முன்னால் சென்ற சாமந்திப்பூ சிங்காரி, அந்தச் சாக்கடைக் கால்வாய் கூவம் ஆற்றில் சங்கமமாகும் இடத்தில் அமைந்திருந்த ஒரு ரயில் பாலத்தின் அடியில் போய் நின்றாள். மின்சார ரயில் வண்டிகள் போகவும் வரவுமாக இரு ஜோடி இருப்புப் பாதைகள் புகுந்து ஓடிய அந்தப் பாலத்துக்கு வடக்கே — அரை பர்லாங் தொலைவில் — கோட்டை ஸ்டேஷன் ஒளி மயமாகத் தெரிந்தது. இப்பால் பாலத்தின் முனையிலிருந்து மேற்கு நோக்கி ஒரேயடியாக வளைந்து திரும்பிய ரயில் பாதைகள், கூவம் ஆற்றுக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கும் இடையே பூங்கா ஸ்டேஷனுக்குச் சென்றன.

பயப் பிராந்தியுடன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு அங்கு வந்து நின்ற சபேசன் சுற்றுமுற்றும் திருதிருவென விழித்துப் பார்த்தான். பாலத்துக்கு வெளியே கோட்டை ஸ்டேஷன் பக்கமிருந்து தென்புறம் நின்ற ஒரு சிக்னல் கம்பத்தில் எரிந்து கொண்டிருந்த சிவப்பு விளக்கின் ஒளி தண்டவாளங்களின் மேல் தெறித்து அவற்றை இரத்த ஓடைகள் போல் எடுத்துக் காட்டின. எதிர்ப்புறத்தே உயர்ந்து சென்ற சாலையின் விளக்கு வெளிச்சம் பாலத்தடிப் பக்கவாட்டுச் சுவரில் பாதியளவு விழுந்தது. அதில் கரிக் கட்டையாலும் சுண்ணாம்பாலும் கிறுக்கப்பட்டிருந்த ஏதேதோ ஆபாசச் சித்திரங்களையும், துர்மொழிச் சொற்களையும் துலக்கிக் கொண்டிருந்தன. இத்தகைய மறைவான இடங்களைத் தேடி வருகிறவர்களிடமுள்ள கலை உணர்ச்சியும் மொழிப் பாண்டித்யமும் இந்த வகையில்தான் வெளிப்படும் போலும்! மற்றபடி அங்கு இருளே மண்டிக் கிடந்தது. அதனால் சபேசனின் பார்வைக்கு ஒன்றும் புலப்படவில்லை.

''இன்னாய்யா, இன்னுமா படுத்துக் கெடக்கிறே? ரவ நேரம் எய்ந்திருச்சு உக்காரக் கூடாது?'' என்று கேட்டுக் கொண்டே பாலத்துச் சுவரோரம் எவ்விதத் தடுமாற்றமுமின்றி சகஜமாகச் சென்றாள் அந்தச் சாமந்திப்பூ சிங்காரி. மறுகணம், யாரோ முனகும் சப்தம் கேட்டது.

''பரவாயில்லே, இப்ப கொஞ்சம் காய்ச்சல் இறங்கியிருக்குது'' என்று ஆதரவுடன் சொன்ன அவள், கேலியாகச் சிரித்து, ''அட, இன்னாய்யா நீ ஆம்பிளே? இதுக்குப் போய் இப்படி ஒரேயடியா பிணுக்கிக்கிட்டுக் கெடக்கிறாயே!'' என்றாள்.

இந்தச் சமயம், இருண்டு கிடந்த பாலத்தடியில் கோட்டை ஸ்டேஷன் பக்கமிருந்து குபீரென ஒளி வெள்ளம் பாய்ந்தது. அது மின்சார ரயில் வண்டியின் வெளிச்சம். அவ்வெளிச்சத்தைக் கண்டு பரபரப்படைந்த சபேசன் அங்கும் இங்குமாகப் பார்வையைச் செலுத்தினான். பாலத்து இடதுபுறச் சுவரோரம் தலை முதல் கால் வரையில் போர்த்திக்கொண்டு சுருண்டடித்துப் படுத்துக் கிடந்த ஓர் உருவம் கண்ணில் தென்பட்டது. அவள்தான் நச்சியோ?

சாமந்திப்பூ சிங்காரி எழுந்து சபேசனிடம் வந்தாள். ''பார்த்தியா நைனா, இதுதான் உன்னோட தோஸ்து! பாவம், நாலைந்து நாளா நல்ல காய்ச்சல். பொரக்கினை இல்லாம ஐகோர்ட்டண்

டைப் படுத்துக் கிடந்துச்சு. நான்தான் பார்த்து இங்கே இஸ்தாந்து போட்டேன். ரெண்டு நாள் கண்ணே திறக்கலே. ஆஸ்பத்திரிக்குப் போன்னாலும் போவ மாட்டேன்னுடுச்சு. மனசு கேக்குதா?. எப்பவோ ஒரு நாளாச்சும் அத்தோட ரொனைத்தைத் தண்ணவளாச்சே! சுக்குக் கசாயம் போட்டுக் கொடுத்தேன். இப்ப கொஞ்சம் தேவலாம். போ, போய்ப் பார்க்கிறதுன்னு பாரு! மூச்சுக்கிட்டுத்தான் இருக்குது. நான் போய் மத் தண்ணி வாங்கியாறேன்'' என்றவள் ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்து திரும்பி நடந்தாள்.

சபேசனின் மனம் மிகவும் சங்கடப்பட்டு விட்டது. தயக்கத்துடன் சற்று முன்னால் போய், ''அண்ணே...!'' என்றான்.

முடங்கிப் படுத்துக் கிடந்த உருவம் மெல்ல எழுந்து உட்கார்ந்தது: ''இன்னு பிரகா! உன்னைத்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்; நீயும் வந்துட்டே! சௌக்கியமா இருக்கிறயா?'' —சந்தேகமில்லை; இது நச்சினார்க்கினியவின் குரல்தான்.

மின்சார ரயில் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் அவனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான் சபேசன். அன்றொரு நாள் இரவு ரோஸியுடன் கை கோத்து டான்ஸ் ஆடிய அந்த நச்சி தானா இவன் என்றே அவனால் நம்ப முடியவில்லை. பரட்டைத் தலையும், அழுக்கேறிய ஆடையுமாக இளைத்துக் களைத்துப் பார்க்கவே மிகப் பரிதாபமாகக் காட்சியளித்தான். ஆனால் அந்த நிலையிலும் அவனது வழக்கமான கோணல் சிரிப்பு முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது.

பெருத்த இரைச்சலுடன் பாலத்தின் மேல் புகுந்து ரயில் வண்டி ஓடி மறைந்ததும் பழையபடி அங்கு இருள் சூழ்ந்தது.

''என்ன அண்ணே! என்ன உனக்கு?'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டுக்கொண்டே அவனருகில் சென்று உட்கார்ந்தான் சபேசன்.

''ஒண்ணுமில்லே, தம்பி! சும்மா உடம்பு கொஞ்சம் மக்கார் பண்ணிச்சு. நாலஞ்சு நாள் ரெஸ்ட் எடுத்துக்கிட்டேன், அவ்வளவுதான்'' என்றான் நச்சி சிரித்துக்கொண்டே.

சபேசன் அவனுடைய நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். இலேசாக ஜுரம் காய்ந்து கொண்டிருந்தது. ''உடம்புதான் இப்படி இருக்கிறதே! உன் வீட்டில் போய்ப் படுத்துக் கொள்ளக் கூடாதா? இங்கே ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்?''

''என் வீட்டுக்கா? அங்கே போனால் என் அம்மா கூச்சல் போடும். இப்ப என்மேலே அதுக்கு ரொம்பக் கோவம்'' என்று சிரித்த நச்சி, ''உடம்பு சரியில்லேன்னு நான் எப்பவுமே வீட்டுக்குப் போறதில்லே. அது என் பழக்கம்'' என்றான்.

அன்றொரு நாள் தன் தாயை அடித்து விட்டு வந்ததனால் அவளிடம் போகப் பயந்து, இப்படி ஏதோ சாக்குப் போக்குச் சொல்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட சபேசன், ''சரி; ரோஸியிடமாவது போயிருக்கலாமே? அவள் நன்றாகக் கவனித்துக் கொள்வாளே?'' என்று கேட்டான்.

''உனக்கு விஷயம் தெரியாது, தம்பி! இந்தக் கோலத்திலே நான் அவளிடம் போனால், என்மீது அவள் கொண்டிருக்கிற காதல் எல்லாம் அடுத்த நிமிஷமே எகிறிப் போயிடும்!''

'எந்த நிலையிலும் இவன் இந்த உலகத்தைப்பற்றி எத்தனை யதார்த்தத் தெளிவோடு பேசுகிறான்' என்று


அவர் காது அங்கே!



தத்துவ ஞானியான அரிஸ்டிபஸ் கொடுங்கோல் அரசன் டயோனிஷுஸ் என்பவரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். என்ன கேட்டும் பயனில்லாது போகவே கடைசியில் அரிஸ்டிபஸ், டயோனிஷுஸின் காலில் விழுந்து வேண்டவே அரசர் இரக்கம் காட்டினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் அரிஸ்டிபஸிடம் பின்னர் தனியாகக் கேட்டார்: ''நீங்கள் ஒரு பெரிய தத்துவ ஞானியாக இருந்தும்கூடவா இவ்வளவு கேவலமாக அக்கொடுங்கோலனின் காலில் விழுவது ?''

''என்ன செய்வது? குற்றம் என்பேரில் இல்லை. காதுகளைத் தன் கால்களில் மாட்டி வைத்துக் கொண்டிருக்கும் அரசரிடம் வேறு எவ்வாறு கேட்பது?'' என்று பதில் அளித்தார் தத்துவஞானி.


பிரான்ஸிஸ் பேகன் கட்டுரையிலிருந்து — தகவல் ஸ்ரீதேவி



இந்திய இத்தாலிய தொழில் ஒத்துழைப்பில் இணையற்ற மதருஸ் அலுமினியம் தொழிற்சாலையை நம் ராஷ்ட்ரபதி துவக்கி வைத்தார்

மேட்டூரில் எழும்பியுள்ள, தென்னாட்டிலேயே மிகப்பெரிய மதருஸ் அலுமினியம் கம்பெனியின் தொழிற்சாலையை நம் ராஷ்ட்ரபதி ஜூலை 2ல் துவக்கிவைத்தார். ஏற்காட்டில் இக்கம்பெனிக்கு சொந்தமான சுரங்கங்களில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு 10,000 டன் அலுமினியம் தற்போது தயாரிக்கவல்ல இக்கம்பெனி விரைவிலேயே இந்த அளவை இரு ·மடங்காக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்திய இத்தாலிய சிறப்புமிக்க ஒத்துழைப்பிற்கு சான்றாக 14 கோடி செலவில் உருவாகியுள்ள இத்திட்டத்திற்கு இத்தாலியிலுள்ள மிலான் நகரத்தைச் சேர்ந்த சொஸைட்டி மான்டிகாடினி நிறுவகத்தினர் தொழில் நுட்ப உதவியுடன் மூலதனத்திலும் பங்கு பெற்றுள்ளனர். இத்தாலிய பாங்கான **மீடியோ பாங்கா** அந்நிய இயந்திர சாதனங்கள் வாங்க கடன் உதவுகின்றது





MALCO MONTECATINI

தி மதருஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர்

தேசத் தொழில் அபிவிருத்திப் பாதையில் மற்றுமோர் முன்னேற்றம்

FDS MAC 533A TM


CAUVERY BAR SOAP
கண் கவர் வெண்மைக்கும்
மின் ஒளி வண்ணத்திற்கும்
காவேரி பார் சோப்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
CRITERION.MC.353

எண்ணி உள்ளூற வியந்துகொண்ட சபேசன், ''அது போகட்டும் அண்ணே! இப்போது எழுந்து என்னோடு வா. யாராவது ஒரு டாக்டரிடம் அழைத்துப் போகிறேன். நடக்க முடியாது என்றால் வண்டி வைத்துக் கொள்ளலாம். பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே. என்னிடம் இருக்கிறது'' என்று படபடப்புடன் கூறித் தன் சட்டைப் பித்தான் பகுதியைத் தட்டிக் காட்டினான்.

சிக்னல் கம்பத்தில் எரிந்துகொண்டிருந்த ஆரஞ்சு வர்ண விளக்கு அணைந்து பச்சை விளக்குப் பளிரிட்டது. சபேசனின் கையைத் தன் மெலிந்த கரத்தால் பற்றிக்கொண்டு அந்தப் பசுமையான ஒளியில் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிய நச்சி தணிந்த குரலில், ''வேண்டாம், தம்பி! எனக்கு அப்படி ஒண்ணும் உடம்பு அதிகமாயில்லே. நாளைக்கு எல்லாம் சரியாகிப்பிடும்'' என்றான்.

சற்று நேரம் பேசாதிருந்த சபேசன், ''சரி; இப்போது உனக்கு ஏதாவது சாப்பிட வேண்டுமா, சொல் அண்ணே? போய் வாங்கிக்கொண்டு வருகிறேன்!'' என்றவாறு எழுந்தான்.

நச்சி இதைக் கேட்டு மெல்லச் சிரித்தான். ''இன்னு பிரதர்! எப்பவோ உனக்கு நான் என்னமோ உதவி செய்திருக்கிறதாக உன் எண்ணம். அதுக்கு இப்ப இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு எனக்கு எதனாச்சும் செய்திடணும்னு நினைக்கிறே, அப்படித்தானே?''

சபேசன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். காரணம், நச்சியின் குரலில் ஓர் ஆழ்ந்த துயரம் கலவையிட்டிருந்தது. மீண்டும் அவனே பேசினான்: ''எந்தப் பிரதிபிரயோசனத்தையும் எதிர்பார்த்து நான் யாருக்கும் எதுவும் செய்யறதில்லே, தம்பி! ஏன்னா, எனக்கு என் மேலேயே ரொம்ப நம்பிக்கை. அதுவுமில்லாம, மனுசனுக்கு மனுசன் செய்ய வேண்டிய கடமை எப்படி உதவியாவும்? உதவின்னு நாம் எப்பவும் செய்துக்கிட்டே இருக்கணும்; அது நம்மாலே முடியுமா? அப்படியே முடிஞ்சாலும் நாம் செய்யறதெல்லாம் மத்தவங்களுக்கு உபகாரமாவே இருந்து விடுமென்கிறது என்ன நிச்சயம்? சில சமயம் அது அவங்களுக்குப் பாதகமாகக்கூட ஆகிப்பிடும் இல்லையா?... அடங்க, இல்லே! இன்னமும் ஏதோ சொல்லணும்னு நினைக்கிறேன். மனசிலே இருக்குது. சொல்லத்தான் தெரியலே. நான் படிக்காதவன். ப்பூ!... வெறும் பேச்சிலேதானா மனுஷனுடைய மனசைத் தெரிஞ்சுக்கணும்? அப்படீன்னா அது தெரியவே வேணும்!''

வெட்கத்தால் வாயடைத்துப் போய் அப்படியே குன்றிக் குறுகி நின்றுவிட்டான் சபேசன். பூங்கா ஸ்டேஷன் பக்கமிருந்து விரைந்து வந்த மின்சார ரயில் வண்டியொன்று பாலத்தினுள் புகுந்து அதிரடித்துக்கொண்டு ஓடியது.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த நச்சி அவனை நிமிர்ந்து பார்த்து, ''என் தம்பி! நீ எப்பவாச்சும் என் வீட்டுப் பக்கம் போனியா? என்னோட தங்கச்சி வேதாவைப் பார்த்தியா?'' என்று இழுத்தாற்போல் கேட்டான்.

''இல்லே, அண்ணே! நான் எப்படி அங்கு போக முடியும்?'' என்றான் சபேசன் ஒருவித அச்சம் கலந்த குரலில்.

"நானும்தான் போகவில்லை" என்று சிரித்த நச்சி, "அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் வேதாவைப் பார்க்காமல் இருக்கிறதுதான் மனசுக்கு என்னவோ மாதிரி..... சரி, சரி; அவள் நல்லாத்தான் இருப்பாள்" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

"அண்ணா! ஒரு விஷயம்..."

"இன்னா தம்பி? ரோஸியோட வீட்டில் இப்போ நீ இல்லேன்னு சொல்லப் போறியா?"

"உனக்கு அது தெரியுமா?"

"தெரியாது. ஆனால் நான் காட்டி விடுகிற இடங்களில் இரண்டொரு நாட்களுக்கு மேல் உன்னால் தங்கி இருக்க முடியாதென்கிற விஷயம் மட்டும் எனக்கு முதலிலேயே தெரியும்."

வியப்புடன் அவனை உற்றுப் பார்த்த சபேசன் தயங்கிய குரலில், "ஆமாம், அண்ணா! அதனால்தான் இன்று ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்...." என்றான்.

நச்சி அவனை அமைதியாக ஏறிட்டு நோக்கினான்.

"நாளைக்கு என் சொந்தக் கிராமத்துக்குப் பயணமாகி விடுவது என்று தீர்மானித்திருக்கிறேன், அண்ணா!"

பதிலேதும் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாயிருந்த நச்சி தன் வழக்கமான கோணல் சிரிப்புடன், "நல்ல காரியம். அப்படியே செய்" என்றவன், "எனக்குக் கொஞ்சம் குளிர்கிறாப்பலே இருக்குது. படுத்துக்கிறேன்" என்றவாறு கந்தல் துணியை இழுத்துப் போர்த்திக் கொண்டு முடங்கிப் படுத்து விட்டான்.

சபேசனின் மனம் வேதனையால் வெந்து நொந்தது. நச்சியை அந்த நிலையில் பார்க்கவே அவனால் சகிக்க முடியவில்லை. தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவன் சட்டென்று எழுந்தான். 'என்ன ஆனாலும் சரி, எந்நேரமானாலும் சரியே; கன்னியப்பனைப் பார்த்து நச்சியின் நிலைமையை அவனிடம் தெரிவித்துவிட வேண்டியது' என்ற தீர்மானத்துடன் அங்கிருந்து எழுந்து வந்த வழியே விரைந்து நடக்கலானான்.


நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதியை அவன் அடைந்தபோது இரவு ஒன்பதரைக்கு மேல் ஆகி விட்டது. அந்தக் குடிசைகள் வட்டாரத்தினுள் நுழைந்து கன்னியப்பனின் வீட்டெதிரே போய் நின்றான்.

வாசல் கதவு திறந்தே இருந்தது. வீட்டில் விளக்கும் எரிந்துகொண்டிருந்தது. தன்னை மீறிய திகிலுடன் வேலிப் படலைத் திறந்துகொண்டு ஓசையின்றி நடந்து சென்ற சபேசன், கதவோரம் போய்த் தயங்கி நின்று உள்ளே எட்டிப் பார்த்தான்.

அங்கே, அடுப்படிக் கட்டைச் சுவர் அருகில் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள் வேதா. கன்னியப்பன் எங்கிருக்கிறான் என்பது தெரியவில்லை. சபேசன் இன்னும் கொஞ்சம் தலையை நீட்டி வேதாவைக் கூர்ந்து நோக்கினான்.


ஒரு காலை மடக்கிப் போட்டு மறு காலைக் குத்திட்டுக் குந்தியிருந்த அவள் தன் மோவாயை முட்டியில் தாங்கியவாறு மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். கண்களிலிருந்து முத்து முத்தாகப் பாதத்தின் மேல் உருண்டு சிதறிய கண்ணீரைத் தன் வலது கைச் சுட்டு விரலால் தொட்டுத் தொட்டுத் தரையில் ஏதோ கோலம் போடுவது போல் நிதானமாக இழுத்துக் கொண்டிருந்தாள். (தொடரும்)


விநோதக் குழப்பம்!



1. "டேய் சேது, ராமு! என் அண்ணா கந்து ஊருக்குப் போகிறார். ரயிலேற்றி அனுப்பி விட்டு வாலாம்" என்று கூறி அவர்களை ரயிலடிக்கு அழைத்துச் சென்றார் சந்துரு மாமா. கந்து மாமாவும் சந்துருவும் ஸ்டேஷனில் பேச்சு சுவாரஸ்யத்தில் மூழ்கினார்.

2. "டேய்! இரண்டு மாமாவுக்கும் தோற்றத்தில் வித்தியாசமேயில்லையே" என்று சிறுவர்கள் கூறியது பலித்து விட்டது. பேச்சு சுவாரசியத்தில் ஞாபகமறதியோடு தம்பியை ரயிலேற்றி விட்டார் அண்ணா. அவசரத்தில் சிறுவர்களும் சந்துரு மாமாவை ரயிலேற்றி விட்டனர்.







பாப்பா மலர்

3. ரயில் நகர்ந்ததும்தான் கந்து மாமா விழித்துக் கொண்டு, "அடடா! நான் அல்லவா ரயிலில் போகணும். என்ன செய்வது?" என்று கூறி அலறிப் புடைத்துக் கொண்டு அவர்களுடன் காருக்கு ஓடி வண்டியை வேகத்துடன் ஓட்டினார்.

4. கார் ரயிலுடன் போட்டி போட்டுக் கொண்டு பறந்தது. கந்து ஊருக்கு அவசரமாகத் தாம் போகவேண்டியதை நினைத்துப் பதறினார். காரும் கடும் வேகத்தில் பதறியபடி பறந்தது.

சாமா






5. ரயில் ஒரு ஸ்டேஷனில் வந்து பத்து நிமிஷங்கள் நின்றதும், காரை விட்டு ஓடினார் கந்து மாமா. சந்துரு மாமா ரயிலை விட்டு வெளியே ஓடிவருவதற்கும் கந்து மாமா அவசரமாய் வண்டிக்குள் பாய்வதற்குந்தான் நேரம் சரியாக இருந்தது. உடனே ரயிலும் நகர்ந்தது.

6. ரயிலிலிருந்து அருகே வந்த மாமாவைப் பார்த்து, "மாமா! ரயிலில் போவது நீங்களா? அல்லது உங்கள் அண்ணாவா? எங்களுக்கு ஒரே குழப்ப மாக இருக்கிறது!" என்றனர் சிறுவர்கள். அந்த மாமாவுமே கிறங்கிப் போய் நின்றார்!



குழியிலிருந்து குரல்: டேய்! ஒன் ஸிக்ஸ்டிஒன்! என்னை விட்டு ஓடிப் போய் விடாதேடா, நானும் உன்னோடு வர்றேன். இருடா!





ஸர் எம். விசுவேசுவரய்யா, மைசூர் திவானாக இருந்தபோது ஒரு ரஸமான சம்பவம் :

மைசூர் சட்டசபை நடக்கவிருந்தது. தொடக்க உரை நிகழ்த்த வேண்டியவர் மைசூர் மகாராஜா. மைசூர் மகாராஜாவை வரவேற்கச் சட்டசபை முன்வாசலுக்கு வந்து, திவான் விசுவேசுவரய்யா குறித்த நேரத்துக்கு முன்னதாகவே காத்திருந்தார். மைசூர் மகாராஜா குறித்த நேரத்தில் வரவில்லை. திவான் விசுவேசுவரய்யா உள்ளே போய் விட்டார். மைசூர் மகாராஜா ஐந்து நிமிஷங்கள் தாமதித்து வந்தார். குட்டி அதிகாரிகள் வரவேற்க உள்ளே சென்றார் மகாராஜா. சட்டசபை தொடக்க உரை நிகழ்த்திவிட்டு மகாராஜா அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். அங்கே அவர் மேஜையில் அவருக்கு முன்னதாக ஒரு கடிதம் வந்து காத்திருந்தது. கடிதம் எழுதியவர் ஸர் எம். விசுவேசுவரய்யா. அவர் அரசருக்கு என்ன எழுதியிருந்தார், தெரியுமா?

"ஒரு நிகழ்ச்சிக்கு வருவதாக இருந்தால் ஒருசில நிமிஷங்கள்கூடத் தாமதித்து வரக் கூடாது. குறித்த நேரத்தில் வந்து சேர வேண்டும். நீங்கள் மன்னர். மக்கள் உங்கள் பழக்க வழக்கங்களையே பின்பற்றுவார்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக விளங்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது!" என்று பொருள்பட எழுதியிருந்தாராம்.




"ப்ளீஸ்! கொஞ்சம் பையனை ஸ்கூலில் அட்மிட் பண்ணிக்க முடியுமா?...முடியுமா?"



"கண்ணாடி போட்டும் கண் இடக்கு பண்ணுது. பூனை, புலியைப்போல் தெரியுது!"

உடனுக்குடன்

சாமா



சித்திரக் களஞ்சியம்

ஷாவின்

பொது உடைமைக் கருத்து!

ஒரு சமயம் இலண்டனில் உள்ள ஹைட் பார்க்கில் பொதுவுடைமைக் கொள்கை பற்றிச் சொற்பொழிவாற்றும்போது "பெரு மக்களே! இப்போது நீங்கள் விரும்பிய பண மூட்டைகளைப் பலாத்காரமாகக் கொள்ளையடியுங்கள்" என்று வீர மொழி பகர்ந்தார் பெர்னார்ட் ஷா.

அதன் பின் சில கணம் தாமதித்து அவர் கூறினார்: "ஆனால் வெளியே நிற்கும் ரோல்ஸ் ராய்ஸ் காரை மட்டும் ஒன்றும் செய்துவிடாதீர்கள். அது என்னுடையது!"



"…..இந்த உதவியை எனக்குச் செய்தீர்களானால் என் ஆயுள் உள்ளளவும் உங்களை மறக்க மாட்டேன்."

— ஓர் எண்ணெய்க் கடைக்காரர்.




"லவ் சீன் பிரமாதம்."
"எந்தப் படத்தில்?"
"எதிர் வீட்டு மொட்டை மாடியில்தான்!"

மீண்டும் கண் பார்வை!

சமீபத்தில் இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் பெரியம்மாவான 70 வயதான விண்ட்ஸர் கோமகள் கண் நோய் காரணமாக இலண்டன் மூர்பீல்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவரது இடது கண் குருடாகிவிடக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். சில நாட்களில் நவீன அறுவைச் சிகிச்சை ஒன்றின் மூலமாக விண்ட்ஸர் கோமகளின் நோயுற்ற கண்ணின் விழித்திரை மீண்டும் பொருத்தப்பட்டு விட்டதாகவும் அவருக்குப் பார்வை திரும்பிவிடும் என்றும் கூறப்பட்டது.

கண் நோய்களில் மிகவும் பயங்கரமான நோய் 'விழித் திரைச் சிதைவு' ஆகும். பார்ப்பதற்கு விழித் திரை மிகவும் அவசியம்; அத்துடன் இந்த விழித் திரையை மாற்றுவது என்பது இயலாத காரியம். மேற்கூறிய புதிய முறைப்படி சிதைந்து போன விழித்திரைத் துண்டுகளின்மீது சக்தி வாய்ந்த ஒளிக் கிரணங்களைப் பாய்ச்சுகிறார்கள். அப்போது சிதைந்து போன விழித் திரைகளின் பகுதிகள் ஒன்றாக ஒட்டி இணைந்து கொள்கின்றன!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, டாக்டர் ஜெர்ஹார்ட் மேயர் ஷிவிக்காத் என்ற கண் மருத்துவ நிபுணர் இந்த முறைப்படி அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் பயன்படும் கருவியைத் தயாரித்தார். பிறகு அவர் தயாரித்ததை மாதிரியாகக் கொண்டு பிரபல ஜெர்மன் நிறுவனம் ஒன்று இக்கருவியைப் பெரும் அளவில் தயாரித்தது. இதன் விலை 37,500 ரூபாயாம்!





வளரும்
குழந்தைகளுக்கு
தேவைப்
படுவது

‘கெப்ளர்’ மால்ட்

உறுதியான எலும்புகளை உருவாக்கவும், வலு மற்றும் தாங்கும் சக்தியை அளிக்கவும் ‘கெப்ளர்’ மால்ட்டுக்கு ஈடானது இல்லை. ஷார்க் லிவர் ஆயில், மற்றும் வைட்டமின் ‘ஏ’யும் ‘டி’யும் கலந்ததாயிற்றே அது! பிணியாறுபவர்களுக்குச் சாலச் சிறந்தது.

ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு.



SHBI-BW-24 TAM

அருணகிரியாருக்கு ஒரு வாரியார்

ஆயிரம்பேர் புகழ்ந்து கவி புனைந்தாலும் அருணகிரிநாதப் பெருமானின் திருப்புகழுக்கு ஒரு தனிப் புகழ் இருக்கத்தான் செய்கிறது. முருகப்பெருமானின் புகழிலே மூழ்கித் திளைத்து உருகி உருகி அருணகிரியார் உலகுக்களித்த நூல் திருப்புகழாகும். அழகும் ஞானமும் பக்தி வேகமும் அமைந்த திருப்புகழைப் படித்துச் சுவைத்து மகிழாதவர்கள் பக்தித் துறையிலே யாருமே இருக்க மாட்டார்கள். தமிழ் மொழிக்கே பெருமை தரத்தக்க நூல் அது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் புகழ் பாடும் திருப்புகழ்ப் பாடல் ஒவ்வொன்றும் விருப்பு வெறுப்பு அற்ற ஓர் உன்னத நிலைக்கு நம்மை இழுத்துச் செல்லவல்லது. அதை ஒவ்வொருவரும் படித்தால் நல்லது என்னும் ஆசை திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் உள்ளத்தில் வளர்ந்த வண்ணமே உள்ளது. அதன் பயன்தான் திருப்பரங்குன்றம் — திருச்செந்தூர் ஆகிய இரு படை வீடுகளைப் பற்றிய திருப்புகழ் விரிவுரை.

படித்துப் பாருங்கள்

மானிடராய் வந்தவர்கள் மாயத்தில் சிக்குண்டு எவிடரில் மூழ்குகிறார்கள் என்று மனம் நைந்துருகி ஊரூராய்ச் சென்றிடுவார்; உரையாற்றி நின்றிடுவார் திருமுருக வாரியார் அவர்கள். நெஞ்சினிலே பக்திநெறி தழைக்கத் திளைப்பக் கந்தன் புகழுரைத்துக் கன்னித் தமிழகத்தில் வாரி வழங்கும் வாரி இவர். முருகனுக்குச் சொற்கோவில் அமைப்பதில் மட்டுமல்லாமல் கற்கோயில் அமைப்பதிலும் இவருக்கு இணை இவரேதான். திருமுருக வாரியார் அவர்களை அறியாதார் அறியாதாரே! அன்புருகிக் கோல் எடுத்துச் செந்தமிழில் நூல் வடித்து இனிக்க இனிக்கக் கொடுத்துள்ளார் நமக்கு. திருப்புகழுக்கு உரை எழுதுவதற்கு ஒரு தனித் திறமை வேண்டும். 'அவன்' புகழ் வரைய 'அவன்' அருள் நிறைய வேண்டும். அது நிறைய இருக்கிறது வாரியாரவர்களுக்கு என்பதை அவருடைய உரை நமக்கு உணர்த்துகிறது. ஒவ்வொரு பாடலையும் பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரை என்னும் நான்கு பகுதிகள் வாயிலாக நம் மனத்திலே பதிய வைத்து விடுகிறார். அவ்வளவு சிறந்த முறையிலே அவருடைய உரை அமைந்துள்ளது.

இந்த இரண்டு நூல்களையும் படித்தால் கூடப் போதும், எவ்வளவோ அற நூல்களையும் தத்துவ நூல்களையும் மந்திர நூல்களையும் படித்த பயனை அடைந்துவிடலாம். கற்றுணர விரித்துரைக்கும் — விரித்து எழுதும் கலையிலே அத்துறையை கைதேர்ந்தவராக உள்ளார். வேலை வணங்குவதே நம் வேலையெனச் சொல்லும் வாரியார் அவர்களின் நூலைப் படிப்பதே முதல் வேலையெனக் கொண்டோமானால் மாயத் திரை விலகும்; வேலின் ஒளி தெரியும். நிச்சயம் வேலின் ஒளி தெரியும்! சிலர் எழுதுவார்கள் உரை. அதைப் படித்த உடனே பாட்டைப் படித்ததும் இருந்த தெளிவுகூட ஒளிந்துகொண்டுவிடும். புலமையைக் காட்ட வேண்டும் என்பதற்காகவே உரை எழுதுவார்கள் ஒருசிலர். அதுபோல எழுதப் புகாமல் புலமையோடு இனிமையையும் எளிமையையும் கலந்து முருகப் பெருமானின் பெருமையையும் அருமையையும் சேர்த்துத் திறமையாக ஒருமை மனத்தோடு, புரியவேண்டுமே மக்களுக்கு என்னும் பொன்னான கருத்தோடு உரை வகுத்துத் தந்துள்ளார்கள் திருமுருக வாரியார் அவர்கள். உரையைப் படிக்கப் படிக்க அறிவு வளர்கிறது; அன்பு பெருகுகிறது; அருள் சுரக்கிறது; பக்தி மலர்கிறது. மற்ற படை வீடுகளுக்கும் இதுபோல விளக்க உரை தர வேண்டும் மிக விரைவில் என மனம் விழைகிறது. முருகப் பெருமானுக்கு ஓர் அருணகிரி நாதர் கிடைத்தது போல அருணகிரிநாதப் பெருமானுக்கு ஒரு வாரியார் கிடைத்துள்ளார் என்றுதான் தோன்றுகிறது. அழகு மிக்க இரு நூல்களையும் படித்து முடித்ததும், பூந்தமிழ்க் காட்டில் புகுந்து புகுந்து அமுதம் மாந்தி மாந்தி, மனம் களித்துக் களித்து, மற்றவர்களையும் வாரீர்—வாரீர் என்று அழைத்து அழைத்து, வாரி வழங்கும் தமிழ் வாரி இவர்கள் நிறை புகழோடு நீடு வாழ மன்றுளாடியோன் மைந்தன் அருள் புரிய வேண்டும் என்பதே என் வேண்டுகோள் 'அவன்' திருமுன்னிலையில்!

நூல்கள்: (1) திருப்புகழ் விரிவுரை—திருப்பரங்குன்றம் (முதல் படை வீடு) விலை ரூ. 2.25; (2) திருச்செந்தூர் (இரண்டாம் படைவீடு) விலை ரூ. 5.00. ஆசிரியர்: திருமுருக கிருபானந்த வாரியார்; கிடைக்குமிடம்: திருப்புகழமிர்தம் காரியாலயம், 89, சிங்கண்ணா செட்டித் தெரு, சென்னை—2.

— சௌந்தரம் கைலாசம்



ஆண்டாள் கல்யாணம்

குமிலன்



"பஸ்களைப் பற்றி எப்போதும் குறை களையே சொல்லிக் கொண்டிருந்தாய். 'போர்' அடிக்கிறது. பாவம், அவை என்ன செய் யும்?" என்றாள் மாதங்கி.

"ஆமாம்! இன்றைக்கு இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கு ஒரு பஸ்ஸும் வரப் போவதில்லை. ஆனால், அதற்கு அவை ஜவாப்தாரியில்லை. தென் அமெரிக்கக் குடி யரசு ஒன்றின் தலைவர் இன்டி ராஜபவனி லிருந்து கிளம்பி வந்து கொண்டிருக்கிறாராம். அதற்காக வண்டிப் போக்குவரத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்" என்று வசந்தன் தெரி வித்தான்.

"எனக்கு ஒரு சந்தேகம். அவர் ராஜ் பவனிலிருந்து கிளம்புவதற்குள், அவரது குடி யரசில் ஓர் அரசியல் புரட்சி ஏற்பட்டு, ஒரு புதிய தலைவர் பதவிக்கு வந்திருந்தால், இந்தத் தலைவருக்கு நமது சர்க்கார் வர வேற்பளித்துக் கொண்டிருப்பார்களா அல்லது அவரை நடு வழியில் நிறுத்தித் திருப்பி அனுப்பி விடுவார்களா?" என்று மாதங்கி கேட்டாள்.

"இன்றைக்கு அப்படி எதுவும் நடப்பதற் கில்லை. ஏனென்றால் நமது வெளிநாட்டு விவகார மந்திரி வெளியூர்ப் பிரயாணம் சென் றிருக்கிறார். ஆகையால், இந்தத் தலைவர் வரத்தான் போகிறார். ஆகவே இந்த வழியி லுள்ள பஸ்கள் நேரம் கழித்துத்தான் வரப் போகின்றன. ஆகையால் நானும் குசேல சாமியைப் பற்றிய கதையைச் சொல்லித் தான் பொழுதுபோக்கியாக வேண்டும்" என்று வசந்தன் கூறி விட்டுக் கதையைத் தொடர்ந்து சொன்னான்:

"குசேலசாமிக்கு வயது ஐம்பத்தைந்து இருக்கும். அவருக்குக் கலியாணமாகாததற்கு அவர் ஒரு சிறிதும் பொறுப்பல்ல. ஜாதகம், ஜாதகம் என்கிறார்களே, அதுதான் அவருக்கு ஜன்ம விரோதியாக இருந்தது. அதென் னமோ, அவரது ஜாதகத்துக்கும் உலகத்தி லுள்ள மற்றெந்த கன்னிப் பெண்ணின் ஜாத கத்துக்கும் ஒத்துக் கொள்ளவே யில்லை. அவ ருக்குத் தாய் தந்தையர், அண்ணன் தம்பி, அக்கா, தங்கை என்று யாரும் கிடையாது. வித்துவாரிசுச் சட்டப்படி தாயாதி என்று பாத்தியம் கொண்டாடக் கூட எந்தப் பிராணியும் இல்லை.

அவர் வீட்டில் குடியிருந்தவருக்கு மேக நாதன் என்று பெயர். அந்த மேகநாதன் முதன் முதலில் குடி வந்தபோது பள்ளிக் கூடம் சாத்தப்பட்டிருந்த சமயம். அவ ரும் அவரது மனைவி மங்கம்மாளும் ஒரு பெண் குழந்தையும் வந்தனர். கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் திறப்ப தற்கு ஒரு வாரம் இருக்கும். அம்பி, ஆண்டாள், இந்திர குமார், ஈசுவரி, உலக நாதன், ஊர்மிளா.....' என்று பத்துப் பேர் பெண்களும் பிள்ளைகளுமாக வந்தனர். அவர்களும் தங்கள் குழந்தைகள்தான். லீவுக்குத் தங்கள் மாமாக்கள், அத்தைகள் வீடுகளுக்குப் போயிருந்தார்கள் என்று கூறி அவர்களைக் குசேலசாமிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் மேகநாதன். அப்போது குசேல சாமி தமது விரல்களை விட்டு எண்ணிக் கொண்டிருந்தார். மேகநாதனுக்கும் கணக் குத் தெரியும். அவர் எப்போதும் சாமான்களை 'ஒரு டஜன்' கணக்கில்தான் வாங்குவது வழக்கம்.

பன்னிரண்டு குழந்தைகள் இருப்பதாகச் சொன்னால் தம்மைக் குடி வைக்க மாட் டார்கள் என்று பயந்து, மேகநாதன் இரண்டே குழந்தைகளைக் காட்டி ஏமாற்றி விட்டாரென்று குசேலசாமிக்குக் கோபம். ஆனால், அவர் அதை வெளிக்குக் காண் பித்துக் கொள்ளவில்லை.

மேகநாதன் இருக்கும் இடம் கலகல, கலகல என்று இருந்தது. ஆனால், அது குசேல

சாமிக்குத் தலையில் படபட, படபட என்று போடுவது போல் இருந்தது. அவர் பல விஷயத்தில் மிகவும் கண்டிப்பு. முதல் தேதியன்று காலை ஏழு மணிக்கோ, அல்லது இரண்டாந் தேதியன்று காலை ஏழு மணிக்குள்ளோ வாடகையைக் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாதத்தில் மேகநாதன் நாலைந்து தேதிகள் வரையில் வாடகை கொடுக்கவில்லை.

குசேலசாமி முணுமுணுக்கத் தொடங்கினார். மங்கம்மாள் பதிலுக்கு, ''வாடகை இரண்டு நாட்கள் முன்னே பின்னே வாங்கிக் கொண்டால் என்னவாம்? இந்தக் கிழம் பணத்தைத் தலையில் தூக்கிக் கொண்டா போகப் போகிறது? அதுவும் நாதியில்லாத ஒரு கல்லால் அடிக்கும் சப்தமும் கேட்டன. குசேலசாமி குடித்தனக்காரரைப் போகச் சொல்ல வேண்டும் என்று எண்ணினார். மேகநாதன் குடியிருந்த பகுதிக்கு நூறு ரூபாய் வாடகை. அன்று குசேலசாமியைப் பார்க்க வந்திருந்த அவரது பழைய நண்பர் ஒருவர், தமக்குக் குடியிருக்க இடம் தேவைப்படுகிறதென்றும் தாம் மேகநாதன் இருக்கும் பகுதிக்கு இருநூறு ரூபாய் வாடகை கொடுப்பதுடன் ஆயிரம் ரூபாய் முன்பணமும் கொடுப்பதாகக் கூறி விட்டுக் கிளம்பிச் சென்றார். பிறகு திரும்பி வந்து அந்தப் பணத்துக்கு ரசீது தேவை யில்லை என்றும் சொல்லி ஒரு தினுசாகச் சிரித்து விட்டுப் போனார். அவ்வளவுதான்; குசேலசாமி குடித்தனக்கா



பிரம்மசாரிக்கட்டை........'' என்று முணுமுணுத்தது அவர் காதில் விழுந்தது.

''அம்மா! எங்கே போனாலும் வீட்டுக்காரர்கள் என்றும் அப்படித்தான் இருப்பார்கள். இவரை எதற்காக வைகிறாய்?'' என்று ஆண்டாள் தனது தாயைக் கடிந்து கூறியதும் அவர் காதில் விழுந்தது.

ஆண்டாள்தான் பெண்களுக்குள் மூத்தவள். வயது இருபத்திரண்டு இருக்கும்.

குசேலசாமிக்கு, மேகநாதனை வீட்டைக் காலி செய்யச் சொன்னால் என்ன என்று மனத்தில் முதன் முதலாகப் பட்டது. அப்போது இரண்டு குழந்தைகள் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு 'கோ'வென்று அழும் சப்தமும், ஒரு பையன் வாசற்கதவை ரைக் காலி செய்யச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஒரு வீட்டில் குடியிருப்பவர், அந்த வீட்டின் சொந்தக்காரர் இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகள் பலவற்றைப் பற்றிய விவரங்கள் குசேலசாமிக்குத் தெரியும். குடியிருப்பவரைச் சட்டபூர்வமாக வெளியேற்ற என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் அவருக்கு ஓரளவு தெரியும். மேலும் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்காக அவர் வீடு வாடகை கண்ட்ரோல் சட்டப் புத்தகத்தை வாங்கி வந்து தினமும் பாராயணம் செய்து வந்தார். அதன் பயனாக மேகநாதனை வெளியேற்ற ஒரே ஒரு வழிதான் உண்டென்று அவருக்குத் தெரிய வந்தது.

இரண்டு மாதங்கள் சென்றன.

ஒரு நாள் குசேலசாமி ஒரு சிறு பெட்டியையும், படுக்கையையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார். அவர் வாசற்கதவைப் பூட்டிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பக்கம் வந்த ஆண்டாள், "என்ன மாமா, ஊருக்கா?" என்று விசாரித்தாள்.

"ஆமாம், அம்மா! திருப்பதிக்குப் போய் விட்டு வருகிறேன்" என்று கூறினார்.

அவர், குடித்தனக்காரரைச் சேர்ந்தவர்களுள் அவள் ஒருத்தியுடன்தான் ஏதோ பேசுவது வழக்கம். அவள்தான் மாதா மாதம் வாடகையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு ரசீது வாங்கிப் போவாள்.

திருப்பதி யாத்திரை சென்றவர் ஒரு வாரத்துக்குப் பிறகு திரும்பி வந்தார். அப்போது அவருடன் ஒரு வாலிபனும் கூட வந்திருந்தான்.

"பீஷ்மா! இதுதான்டா, நம்ம வீடு!" என்று குசேலசாமி அவனிடம் கூறினார்.

"வீடு நன்றாயிருக்கிறது, அப்பா! ஆனால் பழசு, அப்பா!" என்றான்.

"பழசுதான்! தரை மட்டத்துக்கு இடித்துத் தள்ளி விட்டுப் புது மாதிரியாகவே கட்டி விடலாம், பீஷ்மா!"

"நானே பிளான் போட்டுக் கொடுக்கிறேன், அப்பா!"

"நீ சிவில் எஞ்சினியர் பரீட்சை கொடுத்தவனாச்சே. பிளான் எழுதுவது உனக்குப் பிரமாதமா? நாளைக்கே போட்டுக் கார்ப்பொரேஷனுக்கு அனுப்புவோம். சீக்கிரமே வீட்டை இடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்! தரை மட்டமாக்கி விட்டு மேலே கட்ட வேண்டும்!"

"சாவியைக் கொடுங்கள், அப்பா! கதவைத் திறக்கிறேன்!" என்று பீஷ்மன் சொல்லவே, குசேலசாமி அவனிடம் சாவிக் கொத்தைக் கொடுத்தார்.

வாசற்பக்கத்தில் குசேலசாமி பேசுவதும், யாரோ அப்பா, அப்பா என்று வார்த்தைக்கு வார்த்தை உறவு கொண்டாடிப் பதில் சொல்வதும் மங்கம்மாளின் காதில் விழுந்தது. அவள் அடுப்பில் தாளித்துக் கொட்டப்பட்டிருப்பதையும் மறந்து வாசற் பக்கம் வந்து கதவுக்கு மறைவில் நின்றுகொண்டாள்.

அப்போது பக்கத்து வீட்டுக்குச் சென்றிருந்த ஆண்டாள் வந்தாள். "எப்போது மாமா வந்தீர்கள்?" என்று குசேலசாமியை விசாரித்தாள்.

"இப்போதுதான் வந்தேன், அம்மா! திருப்பதியிலிருந்து என் பிள்ளையை அழைத்துக் கொண்டு வந்தேன். இவன்தான்" என்று கூறிப் பீஷ்மனைக் காண்பித்தார்.

பூட்டைத் திறந்து, கதவையும் திறந்து விட்டுக் கொண்டிருந்த பீஷ்மன் திரும்பிப் பார்த்தான்.

குசேலசாமி கூறியதைக் கேட்டு ஆண்டாள் தன் காதுகளை நம்ப முடியாமல் திகைத்துப் போய் நின்றாள். கதவுக்குப் பின்னாலிருந்த மங்கம்மாளின் தலை மட்டும் அவளையும் மீறி வெளியே எட்டிப் பார்த்தது.

பீஷ்மன், ஆண்டாளைப் பார்த்துத் தலையைச் சற்றுக் குனிந்து இலேசாகப் புன்னகை புரிந்தான்.

"ஆண்டாள், ஆண்டாள் என்று சொன்னீர்களே, அது இந்தப் பெண்தானா?" என்று கேட்டான் பீஷ்மன்.

மறுகணம் மங்கம்மாளின் பலமான கை ஒன்று வெளியே வந்தது. ஆண்டாளைக் கரகரவென்று வீட்டுக்குள் பிடித்திழுத்தது. மறுகணம் கதவு படாரென்று சாத்திக்கொண்டது.

பீஷ்மன் வந்து நான்கு தினங்களாயின. ஒரு நாள் மேகநாதனுக்கு, குசேலசாமியின் வக்கீலிடமிருந்து ஒரு நோட்டீஸ் வந்தது. அதில் குசேலசாமிக்கு அதிகப்படியான இடம் தேவைப்படுகிறதென்றும், ஆகையால் மேகநாதன் இடத்தைக் காலி செய்து விட வேண்டும் என்றும் கண்டிருந்தது. ஆனால் மேகநாதன் வீட்டைக் காலி செய்வதைப் பற்றிக் கனவு காணக்கூடத் தயாராய் இல்லை.

குசேலசாமி, வாடகைக் கண்ட்ரோல் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். தமக்கும் தமது பிள்ளைக்கும் இடம் போதவில்லை, ஆகையால் குடியிருப்பவரின் வசமிருக்கும் இடமும் தமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது என்பது அவரது வழக்கு. அந்த ஒரு காரணத்துக்காக, அந்த ஒரே ஒரு காரணத்துக்காக மட்டுமே ஒரு வீட்டின் சொந்தக்காரர் குடித்தனக்காரரைக் காலி செய்யச் சொல்லச் சட்டம் இடம் கொடுக்கிறது.


வழக்கு விசாரணை நடந்தது. குசேலசாமிக்குக் கல்யாணமே ஆகவில்லை. ஆகையால் பிள்ளையே இருக்க முடியாது. தம்மை வெளியேற்றிவிட்டு, அதிக வாடகைக்கு வேறு ஒருவரைக் குடி வைப்பதற்காக யாரையோ பிள்ளை என்று அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்று மேகநாதன் கூறினார்.

தாம் பிரம்மச்சாரிதான் என்றும், ஆனால் 'புத்' என்ற நரகத்தில் விழாதிருப்பதற்காக ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொண்டதாகவும் குசேலசாமி கூறினார். தாம், திருப்பதிக்குச் சென்றிருந்த சமயம் பீஷ்மன் என்ற வாலிபனை ஸ்வீகாரம் செய்து கொண்டதாகவும் சொன்னார்.

மேகநாதன் வக்கீல், சுவீகாரத்தை ஆட்சேபித்தார், ஒரு பிரம்மசாரி சுவீகாரம் செய்து கொள்ள சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை என்று.

வழக்கை விசாரித்த நீதிபதி இந்த ருசிகரமான தகவல்களைக் கேட்டு அநுபவித்துக் கொண்டிருந்தார். விசாரணை நடந்த அன்றே தீர்ப்பும் சொல்லி விட்டார்.

குசேலசாமி பீஷ்மனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதைப் பற்றி யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. சுவீகாரம் செய்து கொள்வதற்குப் பதிலாக அவர் பீஷ்மனைத் தமது வாரிசாகச் செய்து அவனுக்குத் தமது சொத்துக்களை எழுதி வைக்கவும் உரிமை உண்டு. ஆகவே பீஷ்மனை அவரது பிள்ளை என்று ஏற்றுக்கொள்வதினால் வழக்குப் பாதிக்கப்படவில்லை. முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம், தந்தைக்கும் பிள்ளைக்கும் போதுமான இடம் இருக்கிறதா என்பதே.



தக்க மணாளரிடம்
ஒப்படைத்தாள் மனத்தை:
தக்க பாங்கிலே
ஒப்படைத்தாள் பணத்தை!
திருமணப் பரிசாக உங்கள் மகளுக்கு நீங்கள் தரவேண்டியது இதுதான்: ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலே ஒரு ஸேவிங்ஸ் அக்கவுண்ட். இன்றே வாழ்க்கையிலே அவளுக்கொரு புதிய ஈடுபாடு. கீழ்க்காணும் அட்டவணையை நோக்கும்போது அவளும் அவளுடைய கணவரும் சேமிப்பதிலே ஒரு புதிய ஈடுபாடு காண்பிப்பார்கள்!
புதிய வட்டி விகிதங்கள்
ஸேவிங்ஸ் பாங்க் கணக்குகள் ... 4%
அன்றாடிடி டெபாசிட்
ஸேவிங்ஸ் பாங்க் கணக்குகள் ... 4%
ஸேவிங்ஸ் பாங்க் டெபாசிட்டுகள் ... 5%
தவணை (பிக்ஸெட்) டெபாசிட்டுகள்
91 நாட்களுக்கும் அதற்கு மேற்பட்டும் ஆனால் 6 மாதங்களுக்குக் குறைவாக ... 5%
12 மாதங்களுக்கும் அதற்கு மேற்பட்டும் ஆனால் 24 மாதங்களுக்குக் குறைவாக ... 6%
60 மாதங்களுக்கும் அதற்கு மேற்பட்டும் ... 7%
வட்டி விகிதங்கள் பற்றிய விவரங்களை விசாரித்தறியவும்
சேவை புரிந்திடவே
ஸ்டேட் பாங்க்



* காலை நேரத்தின் தெம்பு மாறி மத்தியான வெயிலில் களைப்பு மேலிடும்போது, வேலையின் சுமையால் கால் நரம்புகள் தளரும்போது, செல்ல வேண்டிய பாதை முடிவற்றுத் தெரியும்போது, உங்கள் நோக்கம் எதுவுமே நிறைவேறாத நிலைமையில் அந்தக் கட்டத்திலேதான் நீங்கள் தயங்காமல் மேலே நடக்க வேண்டும்.

* சௌஜன்யத்தைக் கருதிக்கூட உனது அனுபவத்தை மறந்து விடாதே. சமாதானத்தைக் கருதிக் கூட உனது கொள்கையைக் கைவிட்டு விடாதே.

* தான் அதிகாரத்தில் இருப்பதின் அவசியத்தைத் தினந்தோறும் புலப்படுத்தி வருபவனே அதிகாரத்தை வகிக்கத் தகுதியுடையவன்.

— டாக் ஹாமர்ஷில்ட்

குசேலசாமி, தம் வசத்தில் ஒரு வரவேற்பு அறை, ஒரு ஹால், இரண்டு படுக்கை அறைகள், ஒரு சாப்பாட்டு அறை, ஒரு பூஜை அறை, ஒரு சமையல் அறை முதலியன வைத்துக்கொண்டிருப்பதாக ஒப்புக் கொள்கிறார். இந்த இடம் ஒரு பிரம்மசாரித் தகப்பனுக்கும், ஒரு பிரம்மசாரிப் பிள்ளைக்கும் போதுமானது. அவர்களுக்குக் கலியாணமானால் அப்போது அதிக இடம் தேவைப்படலாம்'', என்று கூறிக் குசேலசாமியின் வழக்கைத் தள்ளி விட்டார்.

அன்று இரவு மேகநாதன் வீட்டில் வடை, பாயசத்துடன் சாப்பிட்டு வழக்கு வெற்றியைக் கொண்டாடினார்கள்.

குசேலசாமியோ பொருமிக் கொண்டிருந்தார். பீஷ்மனுக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. ''அப்பா! நீங்கள் உடனே யாரையாவது கலியாணம் செய்து கொண்டு விடுங்கள்! இவர்களை வீட்டை விட்டுத் துரத்தினால்தான் என் மனம் நிம்மதியடையும்!'' என்று கூறினான்.

''பீஷ்மா, அப்படிச் சொல்லுடா. நீ உண்மையில் என் பிள்ளைதான்டா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீ நாளையே கலியாணம் செய்து கொள்ள ஏற்பாடு செய். காலையில் ஐந்து மணிக்கு வெளியே கிளம்பிப் போ! முதல் முதல் உன் கண்ணில் பட்டு உனக்குப் பிடிக்கும் பெண்ணைக் கலியாணஞ் செய்து வைத்து விடுகிறேன். அது எந்தக் கழுதையாயிருந்தாலும் சரி. உனக்குக் கலியாணம் செய்து வைக்கா விட்டால் என் பெயர் குசேலசாமி அல்ல!'' என்று சபதம் கூறினார்.

''சரி, அப்பா!'' என்றான் பீஷ்மன்.

அப்போது சிறுமி ஊர்மிளா வந்து, ''என் அப்பா, வாடகை கொடுக்கச் சொன்னார்'' என்று கூறி வாடகைப் பணத்தை அவரிடம் கொடுக்க வந்தாள். ''பீஷ்மன்தான் வீட்டுக்காரன். அவனிடமே கொடு'' என்றார் குசேலசாமி. அந்தச் சமயத்திலும் அவருக்கு அவள் மீது கோபம் குறையவில்லை.

பீஷ்மன் பணம் வாங்கிக் கொண்டதற்கு ஒரு ரசீது எழுதிக் கொடுத்தான்.

மறு நாள் பீஷ்மன் விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து விட்டான். ஸ்நானம் செய்து, நன்றாக உடை உடுத்திக் கொண்டான். தந்தை கூறியபடி ஐந்து மணி அடித்ததும் கதவைத் திறந்து கொண்டு வெளியில் பெண் பார்க்கப் புறப்பட்டான். குசேலசாமி அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

அவன் தெருவில் சென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பி விட்டான்.

''அப்பா! இந்தக் கழுதை எதிரே வந்தது. அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்.--உன் மாமனாருக்கு நமஸ்காரம் செய்'' என்றான் பீஷ்மன். அந்தக் கழுதை உடனே பெரியவருக்கு நமஸ்காரம் செய்தது.

குசேலசாமி திகைப்படைந்தாராயினும் மருமகளாக வரப் போகிற கழுதையை ஆசீர்வதித்தார். நமஸ்கரித்தது ஆண்டாள்.

பிறகு பீஷ்மனுக்கும் ஆண்டாளுக்கும் கல்யாணமாயிற்று. குசேலசாமி, மேகநாதன் குடும்பத்தினருள் ஒருவராகி விட்டார் என்று சொல்ல வேண்டியதில்லை'' என்று வசந்தன் கதையை முடித்தான்.

''அந்தப் பெண் அதிகாலையில் தெருவில் எப்படி வந்து சேர்ந்தாள்?'' என்று மாதங்கி கேட்டாள்.

''ஆண்டாளும் பீஷ்மனும் திருக்குறளை ஐயந்திரிபுக்கிடமின்றிக் கற்றவர்கள். 'கண்ணொடு கண் இணை நோக்கொக்கின்......' என்ற குறளை அநுபவத்தில் பின்பற்றி வந்தார்கள். பீஷ்மன் சிறுமி ஊர்மிளாவிடம் வாடகைக்கு ரசீது எழுதிக் கொடுத்த போது அதன் அடியில் ஆண்டாளை மறு நாள் விடியற்காலை ஐந்து மணிக்கு முன்னாலேயே தெருவில் போய் இருக்கச் சொல்லி எழுதியிருந்தான்.''

அப்போது பஸ்கள் வரத் தொடங்கின. தென் அமெரிக்கக் குடியரசொன்றின் தலைவர் அந்த வழியில் வரவில்லை. அவரை வேறு வழியாக அழைத்துச் சென்று விட்டார்கள்.

''நான் போகிறேன். நான் மரியாதையாக நடந்து கொள்ளும் கண்டக்டர் கதை சொல்லலாம் என்றிருந்தேன்'' என்றாள் மாதங்கி.

''என்னது, யாரைப் பற்றிய கதை ?'' என்று வசந்தன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

அதற்கு ஏதும் பதில் கூறாமலே மாதங்கி பஸ் ஏறச் சென்று விட்டாள்.



சங்கரி பேசுகிறாள்!



சாப்பிட்டுக் கையலம்பிய ஈரம் உலரு முன்பே, ஊற வைத்த உளுந்தையும், அரிசியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போகும் சங்கரியைப் பவானி தடுத்து நிறுத்தினாள்.

"இன்னும் ஒரு நாழி கழித்து அரைக்கக் கூடாதா, சங்கரி? உண்ட கவளங்கள்கூடத் தொண்டைக்குக் கீழ் இறங்கி இருக்காது. அதற்குள் என்ன அவசரம்?" என்றாள்.

பதிலுக்கு மெல்ல ஒரு புன்னகை செய்து விட்டு, தன் வேலையைத் தொடர்ந்து செய்யலானாள் சங்கரி. உளுந்தைக் களைந்து தோலை நீக்கி, உரலைக் கழுவிவிட்டு உட்கார்ந்தாள்.

"காலையிலிருந்து ஒழைக்க விடாமல் உழைக்கிறாயே, சங்கரி......கொஞ்சம் உட்காரேன். நான் ஒரு கை அரைத்து எடுக்கிறேன்" என்றவாறு அருகே வந்தாள் பவானி.

"இதோ பார், பவானி! குழந்தை தூங்கும் பொழுதே நீயும் தலையைச் சாய்த்துக் கொள்..... இல்லா விட்டால் உடம்பை அசக்கும்.... .!"

"உனக்கு மட்டும் அந்த உடல் அசர்வு இல்லையாமோ சங்கரி?"

"நான் இதை விட்டு எழுந்திருப்பதற்குள் உட்கார்ந்தபடியே மூன்று தடவை தூங்கி எழுந்து விடுவேனாக்கும்" என்று சிரித்தாள் சங்கரி.

பவானி அவள் அருகிலேயே கால்களைக் கட்டியபடி, தூணிலே சாய்ந்து உட்கார்ந்தாள். "நேற்று ராத்திரி பன்னிரண்டு மணி வரை நடையிலே விளக்கு எரிந்ததே. நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"புளியைக் குத்தி எடுத்து வைத்தேன்."

"காலை நாலு மணியிலிருந்து மாடியிலே என்ன உருட்டிக் கொண்டிருந்தாய்?"

"ஓ, அதுவா? துவரையைப் பொழுதோடு முளைக் கட்டி வைத்தேன்." அரைப்பதின் வேகம் அதிகரித்தது.

"சரி, இந்த வேலை முடிந்ததும் என்ன செய்யப் போகிறாய்?"

"உன் குழந்தைக்கு வெந்நீர் வைத்துவிட வேண்டாமா? அது சரி, வாத்தியார் போல, 'இறந்த காலம்..... எதிர்காலம்' என்று ஏதாவது பாடம் சொல்லிக் கொடுக்கப் போகி

ருயா, என்ன? கேள்விகளாக அடுக்குகிறாயே?'' முதுகின்மீது புரண்ட கூந்தல் முடிச்சிலிருந்து பிரிந்த மயிர்க் கற்றைகள் அகன்ற நெற்றியின் மீது படிந்து, அது பாழான கதையை மறைப்பன போல அசைந்தாடின.

''இப்படி உட்காராமல் உடலை வாட்டி, உழைத்து உன்னைத் தண்டித்துக் கொள்கிறாயா, சங்கரி?'' பவானியின் குரல் கசிந்து ஒலித்தது.

ஒரு கணம் தங்கையின் முகத்தை ஊடுருவி நோக்கினாள் சங்கரி.

''மனசுக்கு ஏதேனும் ஒரு போக்கு வேண்டுமே. நம்மை ஆக்குவதும், அழிப்பதும் மனந்தான் என்று அம்மா அடிக்கடி சொல்வாள். ஆனால் அந்த மனசையே.....

உழைப்புக் கோலமும், பட்டுப் போன தோற்றமும்தான் ஞாபகத்துக்கு வருகின்றன...... எனக்கு...... உள்ளூற ஓர் ஆவல்.'' கண்ணுக்குள் தளும்பிய நீர் நழுவி உதிர, சகோதரியை ஏறிட்டு நோக்கினாள் பவானி.

''என்ன ஆவல் பவானி?''

''சூரிய ஒளி படாத செடி போல் இந்த இருட்டுக்குள்ளே புழுங்குவதற்கு முன், இடி விழுந்த மரமாக...... இந்த அவலம்.... எப்படி வந்தது? நான் முப்பது வருடக் கதையைக் கேட்கிறேன் சங்கரி.''

''போடி, பைத்தியமே, சொல்வதற்கும் கேட்பதற்கும் இது என்ன சீதை, நளாயினி சரித்திரமா? எத்தனையோ பாழடைந்த வீடுகள் பூட்டியே கிடக்கின்றன. அப்படிப்



கோமதி நாகராஜன்

இப்படி முடிவில்லாத உழைப்பினால் அழித்துக் கொள்ள முடியும் என்பது என் அனுபவம்.''

''உனக்கென்று எந்தவித ஆசையும், பற்றும் கிடையாதோ?''

''ஏன்..... இல்லை? கல்பனா இன்னும் சாப்பிட வரவில்லையே.... இதை எண்ணி ஒரு நாழியாய் மனசு தவித்துக் கொண்டிருக்கிறது. இது பற்றுதல் காரணமாக ஏற்பட்டதுதானே?''

''அதைச் சொல்லவில்லை நான். இது நீயாக வாரிப் பூசிக் கொள்ளும் உறவு. நான் கேட்க வந்தது வேறு..... சங்கரி, நீ என்னை விட முப்பது வயது மூத்தவள். அம்மா முகமே அறியாது உன் மடியிலே வளர்ந்தவள் நான். நினைவு தெரிந்த நாள் முதல் உன்

பூட்டியே பாழடைந்து போன நெடுஞ் சுவர் இது.... போயேன் !''

''சங்கரி, உனக்கு வயது ஐம்பது இருக்குமா ?''

''ஏன்? மீதி ஆறை யாருக்கு விட்டு வைத்திருக்கிறாய்?''

''அப்படியானால் உன் கல்யாணத்தை அப்பா எப்பொழுது நடத்தினார்?''

''எனக்கு ஞாபகமில்லை.''

''பதினைந்து வயதிருக்குமா?''

''இருக்கும்.... பதிமூணு.... பதினாலுக்குக் குறைவில்லை.''

''அத்தான் முகமாவது உனக்கு ஞாபகத்திலிருக்கோ?'' பானைதனை வருத்து, மெல்ல மெல்ல இழுத்து வந்தாள் பவானி.

சிறப்புச் சிறுகதை

ஆசிரியைப் பணி புரியும் ஸ்ரீமதி கோமதி நாகராஜன் பல நல்ல சிறு கதைகளைக் கல்கி வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். இப்போது 'சங்கரி பேசுகிறாள்' அவரது சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளது. நெஞ்சைப் பிழியவைக்கும் இந்தச் சோகக் கதையில் சங்கரி பேசுகிறாள்:

"இத்தனை அமளியிலும் உன் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது தெரியவில்லையா?"
— பவானி

"உதயத்தைக் கண்டிருந்தாலல்லவா அஸ்தமனத்தைப் பற்றிய பேதம் புரியும்?"
— சங்கரி

"இல்லாமலென்ன? பத்து நாட்கள் முழுக்க, முழுக்கக்கூட இருந்து விட்டு வந்தேனே...... எத்தனை சிறிய வயதானாலும் நினைவுக்கொடி படர்ந்தாற்போல் பசுமையாக இருக்கு......." மகிழ்ச்சி அடையவந்ததைக் கிளறிய பரபரப்பில் கண்கள் கூராகி ஒளிர்ந்தன.

"புக்ககத்துக்குப் போய்ச் சில நாட்கள் குடித்தனமாக இருந்தாயா?"

"ஊஹூம்..... கல்யாணமாகி ஒரு வருஷமாகி இருக்கும். சோபன முகூர்த்தம் வைக்க, அம்மா ஓடி ஓடிப் பாத்திரமும், பண்டமும் சேகரித்தாள். இப்படித்தான் ஈரெட்டு நேரம் ...ஒரு தந்தி வந்தது. அம்மா என்னைக் கட்டிக் கொண்டு அழுதாள். 'உன் தலையெழுத்தை அவன் நல்லபடியாகப் போட வேண்டுமே' என்று....." பழைய ஞாபகங்கள் புரண்டு நழுவிய அதிர்ச்சியில் முகம் வெளிறியது.

"அப்புறம்......?"

"அப்புறம் என்னை இழுத்துக் கொண்டு கல்கத்தாவுக்குப் போனார்கள். பாலாடை படர்ந்து கிடந்தாற் போல்.... கட்டிலின் மீது வெள்ளை விரிப்பின் மீது கிடந்தார்..... எங்களைக் காணவும் அழுதார்...... ஒன்று மட்டும் இன்னும் நினைவிருக்கிறது. ஒரு நாள் இருட்டி விளக்கேற்றும் நேரம். கஞ்சியை ஆற்றியெடுத்து வாயிலே ஊற்றப் போனேன். கையை இழுத்து நெற்றியிலே வைத்துக் கொண்டார். என்னவோ பார்வை!..... வாயினாலே பேச முடியாத ஊமைப் பார்வை. மனசையே வாட்டி எடுத்தது. அம்மா வந்து விட்டாள். என்னைத் தனியே கூப்பிட்டுக் கோபித்துக் கொண்டாள்..... "பெரியவர்களாகப் பார்த்துச் செய்யும் வரை; அசட்டுப் பிசட்டென்று பக்கத்திலே போய் நிற்காதே" என்றாள். எனக்கு ஒன்றும் புரியலே.... அப்புறம் மூன்று முழுநாள் போச்சு...... வந்தவர்களெல்லாம் என்னைக் கட்டிக் கொண்டு அழுதார்கள். சின்னக் குழந்தை கையில் உள்ள பண்டத்தை வேடிக்கை காட்டிக் கட்டிப் பறிப்பது போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு நகையாக உருவிக் கொண்டார்கள்."

"இத்தனை அமளியிலும் உன் வாழ்க்கை அஸ்தமித்துப் போனது உனக்கே தெரியவில்லையா?"

சங்கரி இதழ்கள் விரியச் சிரித்தாள். "உதயத்தைக் கண்டிருந்தால் அல்லவா அஸ்தமனத்தைப் பற்றிய பேதம் புரியும்?"

"பின்னே விவேமதிப்பற்ற அந்த இழப்பைப் பற்றி உனக்கு என்னதான் தோன்றியது சங்கரி?"

"எனக்கு என்ன தோன்றும்? இந்தக் காலத்தைப் போல எதையெல்லாமோ படித்தும், பார்த்தும் மனசைச் சாக்கடையாக்கிக் கொள்ள வழியில்லை. புருஷன், மனைவி வாழ்க்கை என்பது கோடி கோடி ரகசியங்களை உள்ளடக்கிய உன்னதமான கனவு நிலை என்ற உணர்வு உயிர்த்தது. உயிர்த்த விநாடியே பட்டும் போய் விட்டது. அந்த ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளாது, தனக்குள் பூட்டியபடி அவர் போனபின்பு, குறைக் கனவைச் சிந்தனையிலே அசை போடுவதும், விகாரப்படுத்தித் துக்கப்படுவதும் அசிங்கமில்லையா? ஆனால் எப்பொழுதாவது ஒரு முறை..... ஒரு குரல் எழுப்பி ஆதங்கத்தைக் கரைத்திருக்கிறேன்."

"என்ன அது?"

"நம் தர்மத்தில் பெண் கொண்டவனோடு வாழ்ந்து, முறை செய்தால்தான் ஜன்மம் கழியும் என்று ஏடு ஏடாகச் சொல்லியிருக்கிறார்களாமே பெரியவர்கள்! என்னைப் போல் இடையிலே பறிக்கப்பட்ட பிறவிகளுக்கு என்னதான் வழி? அப்படியானாலும் அடுத்த ஜன்மத்திலாவது இறந்தவரைத் தொடர்ந்து சென்று, காலடியிலே கிடந்து இந்தப் பிறப்பின் கழிவுகளையும் நீக்கி மீள வேண்டுமென்று பல முறை குரல் எடுத்து அழுதிருக்கிறேன்....." சங்கரி இதை முடிப்பதற்குள் பவானி முகத்தை மறைத்தபடி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"எதற்கடி அழுகிறாய் பவானி? நம் அம்மாவைப் போல் உனக்கும் கோழை மனசு....... இந்தச் சின்னஞ் சிறு விஷயத்தைக் கேட்டு அலட்டிக் கொள்கிறாயே....!" பந்து போலத் ததும்பி எழுந்த மாவை உள்ளடக்கித் தன்னினுள் சங்கரி.

"சின்னஞ் சிறு விஷயமா இது? தெய்வம் போல எதிரே உட்கார்ந்து கொண்டு புஷ்பங்களாய் உதிர்க்கிறாயே.... இந்த உலக நடவடிக்கையிலே எண்ணங்களைக் கலக்க விட்டு, மனசை அவியப் போடாது, பூக்களை உள்ளடக்கிய குடலையாக அதை வைத்துப் பூஜிக்கிறாயே..... யாருக்கு அந்தப் பக்குவம் வரும்?" என்றாள் கண்களைத் துடைத்தபடியே.

"இப்படித்தான் என்னைப் பார்த்ததுமே கண்ணீரைக் கொட்ட ஆரம்பித்து விடுவாள் அம்மா...... இறந்தவருக்கு எத்தனையோ 'டக்கார'ப் பட்டங்கள் கொடுத்து, வசை பாடி அழுதிருக்கிறாள். அதையெல்லாம்கூட நான் பொறுத்துக் கொண்டு விட்டேன். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் என்னால் அவளை மன்னிக்க முடியவில்லை!"

இப்பொழுது நடைபெறுகிறது



''அப்படி யென்ன செய்தாள்?''

''குங்குமத்தையும், சரட்டையும் தவிர எல்லா நகைகளையும் விலக்கி விட்டாள். தனக்கு நீடித்த மங்கள வாழ்வையே வெறுத்து ஒதுக்கி; கடமைகளையும் அலட்சியம் செய்தாள்..... அப்பாவிடம் அவள் காட்டிய உதாசீனத்தைத்தான் என்னால் மன்னிக்க முடியவில்லை. அவர் ஒரு மாசம் காய்ச்சலில் அவதிப்பட்டார்.... ஊஹூம்.... திரும்பிப் பார்க்கவில்லை. என்னால் பொறுக்க முடியவில்லை. 'விடுவிடு' வென்று அம்மாவிடம் சென்றேன். அவள் கொல்லையில் வாழை மரத்தின் ஒட்டிய நிழலடியே படுத்து அழுது கொண்டிருந்தாள். நான் போய்க் கெஞ்சினேன்.....''

''அதற்கு அவள் என்ன சொன்னாள்?''

''நீ கவனிப்பதே போதும் என்றாள் விரக்தியுடன். ''உன் தர்மம் உன்னை அழைக்கிறது.... எழுந்து போ'' என்றேன் கடுமையாக. அசையவும் மறுத்து விட்டாள். கடைசியில் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு ஒரு சாட்டு சாட்டினேன்.... அம்மா அதிர்ந்து விட்டாள்........''

''உனக்கு அத்தனை அழகாக அந்த வயதில் பேசக் கூடத் தெரிந்ததா, சங்கரி?''

''பின்னே என்ன? அப்படியோர் அடம்!''

''நீ என்ன கேட்டாய்?''

'' 'உன் சௌபாக்கியத்தைக் கண்டு நான் பொறாமைப்படுவேன் என்று அஞ்சுகிறாயா? உனக்கு என் உறுதியின்மேல் நம்பிக்கையில்லையா?' என்று கேட்டு அவள் நெஞ்சைக் கொத்திக் கிளறினேன்..... வாயைத் திறக்க வேண்டுமே! எழுந்து போய்விட்டாள்....இப்படி எத்தனையோ அநுபவங்கள்! போயேன்.''

''குட்டிச் சுவர் போல இத்தனை வயதாகியும் எங்களுக்கெல்லாம் இன்னமும் சிறு புத்தி போக வில்லை. உனக்கு இளமையிலேயே பக்குவமாகி விட்டது இல்லையா, சங்கரி?''

''அப்படிச் சொல்வதற்கில்லை. நெல்லைக் களத்திலிருந்து எடுத்து வந்து வாயிலிட்டாலே சோறாகி விடுமா? எத்தனையோ வகையில் இடியும், குத்தும், மிதியும், கொதியும் பெற்ற பின்தானே அன்னமாகப் பரிணமிக்கிறது. அது போலத்தான் மனமும் என்று வைத்துக் கொள்.''

''அப்படிக் கசப்பு அநுபவங்கள் உனக்கும் ஏற்பட்டதா?''

''அநுபவங்கள் நமக்கு வெளியிலிருந்தா வர வேண்டும்? உடம்போடு பூட்டி வைத்திருக்கிற பஞ்ச பூதங்கள் போதாவா ஒரு பெண்ணை உயர்த்தவும், தாழ்த்தவும்? வீட்டிலே நாலு சுவர்களுக்கு நடுவே நம் உடலை அடைத்துக் கொண்டால் மட்டும் போதுமா? இந்தப் புலப்பாடுகளின் வாசல்களையே இழுத்துத் தாளிட வேண்டிய உரம் வேண்டாமா? கண்களிலே கலக்கும் சில பார்வைகள், தோற்றங்கள்; காதுக்குள் புகுந்து வரும் சில கம்பீர ஒலிகள், நம்மை யறியாது புலன்களினிடையே வர்ஷித்து அசைகின்றன. இன்பமும், துன்பமும் கலந்த மருட்சி ஒரு வேலியாக முடியாது. கலங்கிய

அடுத்த இதழில்
சிறப்புச் சிறுகதை
அகிலன்
எழுதுகிறார்

லோகசஞ்சாரம்:
செஞ்சி

சேறு போல் வாழ்நாட்களை வளர்த்துக் கொள்ள எனக்குப் பிடிக்கவில்லை.... பல நாட்கள் யோசித்து அந்த முடிவுக்கு வந்தேன்..... அப்பாவிடமும் சொன்னேன்.''

பவானி அச்சத்தோடு அவள் கரங்களைப் பற்றினாள். நாவு கேள்வியெழுப்பவும் திராணியற்று அடங்கியது.

''என் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பார்கள். இந்தச் சிரசை மூடி நிற்கும் இந்தக் கூந்தல்; அதற்குத் தேடும் எண்ணெய், புனுகு; அகராக வளரும் இந்த உடல்..... காண்பவர் கண்களையே பறிக்கும் கவர்ச்சி சாதனங்கள்... இவற்றையெல்லாம் அந்தக் காலம் போல விலக்கித் தள்ளிவிட வேண்டுமென்று தோன்றியது..... தலையை மழித்துக் கோலம் போட்டுக் கொள்வதாகச் சொன்னேன்....''

''அடிப் பாவி, எத்தனை நெஞ்சழுத்தம் உனக்கு?''

''இதில் அழுத்தம் என்ன வந்தது? ஏதேனும் ஒரு வகையில் உடலை அழித்துக் கொள்ள வேண்டும்.... அவ்வளவுதான்.... கேட்டு விட்டுக் 'கோ'வெனக் கதறினார்.... 'குழந்தே, நானொக்கே அந்த ஒரு கடனையும், அவன் பெயரைச் சொல்லிக் கழித்துவிடு. ஆனால் ஒன்று மட்டும் சத்தியமாகச் சொல்கிறேன். அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு முன்பு, நீ தினமும் சுற்றி வருகிறாயே சிவன் கோவில்..... அந்தக் கிணற்றுக்குள் விழுந்து என் கதையை முடித்துக் கொண்டு விடுகிறேன்' என்று புலம்பினார். அதற்குப் பின் அந்தக் கோரிக்கையை நான் எழுப்பவில்லை. அவர்கள் காலமும் கழிந்தது. அம்மா முந்திக் கொண்டு விட்டாள்.....''

''அப்புறந்தான் அத்தைப் பாட்டி வீட்டில் தங்கியிருந்தாயா?''

''ஆமாம்.... அது ஒரு நீளக் கதை.... அத்தை அந்தக் கால மனுஷி..... ராஜ சந்நியாசினி போல ஒரு துறவு சம்பிரதாயம். சுற்றிச் சுற்றி வந்து வேலை செய்து விட்டுத் தூங்குவதைத் தவிர வேறு பிரயாணம் கிடையாது. மாதங்கள் ஓடின. அங்குதான் என் மனம் 'பளிச்'சென்று வெளி வாங்கி, தூவானம் பிரிந்த நல்லிய வானமாக மாறியது...... 'இந்த நிலைமைக்கு நானாக இருப்பதால் வாழ்கிறேன்.... வாழ்கிறேன்' என்று அடிக்கடி நம்முள் குறைப்பட்டுக் கொள்கிறோமே..... நம்மைக் காட்டிலும் அழகாக வாழ்ந்து காட்டியவர்கள் பாதையை நிமிர்ந்து பார்க்காததினால்வரும் தொற்றுநோய் இது!''

''இதை நீ எதற்குக் குறிப்பிடுகிறாய்?''

''இப்பவும் கண்ணெதிரே நடப்பது போலத் தோணுகிறது பவானி. தினமும் விளக்கேற்றி நமஸ்கரித்து விட்டு எழும்போதெல்லாம் யாரோ மெட்டிகள் சப்திக்க நடப்பது போலத் தெரியும். புடவை காற்றிலே அலைவது போலத் தட்டுப்படும்....''

''ஐயையோ!''

''பயப்படுவதற்கொன்றுமில்லை. ஒருநாள் அத்தையிடமே இதைக் கேட்டேன். அத்தை என்னைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள். ''அவள் இந்த வீட்டுத் தெய்வமடி.... புருஷன் இறந்த மூணேமுக்கால் நாழிக்குள் பூவும், பொட்டுமாக, மாலையும், கழுத்துமாக நெருப்புப் படுக்கையிலே நிரந்தரஇடம் தேடிக் கொண்டவள் அவள். நெருப்பிலே கலந்தவள் நெருப்பாக வாழ்ந்து வரும் உன் கண்ணிலே தட்டுப்படுவதில் அதிசயமில்லை' என்றாள்...''

''உடன்கட்டை ஏறுதல் என்பார்களே... அப்படியொரு தெய்வம் நம் குடும்பத்திலும் இருக்கிறாளா ?''

''ஆமாம்...... அன்றைக்கு விளக்கேற்றி வைத்ததும் எதையெல்லாமோ எண்ணி அழுதேன். முகத்தைக் கழுவிய கண்ணீரால் நெஞ்சைக் கழுவ முடியவில்லை. ஏதோ நிழல் போலத் தெரிந்தது. 'அக்கா உன்னைப் போல் உயிரை வெறுத்து உடன் போகாமல் இந்த உடலை வளர்த்துக் கொண்டு பாழும் ஜன்மமாக வளைய வருகிறேனே பாவி!' என்று அரற்றினேன். 'உனக்கு நூறு வருஷத்துக்கு முந்தியவள் நான். இந்த உலகச் சூழலிலும், என் மீதும் எனக்கு நம்பிக்கையில்லை...வந்த யாத்திரையை முடித்துக் கொண்டு விட்டேன். இறந்து பிணமாவது இயற்கை.... வாழ்ந்தே உணர்ச்சிகளைக் கருக்கி வளைய வரும் பிணமாக, நீ ஒரு படி உயர்ந்து, உயிருக்கு மகத்துவம் கொடுத்து விட்டாய், சங்கரி' என்று குரல் கொடுத்தாற் போலத் தோன்றியது. அந்த விநாடி முதலே என் குறைகள் நிறைகளாகி விட்டதை உணர்ந்தேன், பவானி.''

''கேட்கும்போது புல்லரிக்கிறது, சங்கரி.''

''சரி..... சரி.... வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்கிறது..... போய்ப் பார்.....'' குதித்தபடி கல்பனா வந்தாள்.

பளீரென்ற வெண்மை உடையில் செதுக்கி வார்த்த தோற்றம்! நெற்றியிலே செந்திக் கொழுந்து இருக்க வேண்டிய இடத்தில் மச்சம் போல் சாந்துப் பொட்டு மங்கலாகத் தெரிந்தது. வேலையை நிறுத்தி விட்டு, பொலிவு குன்றாத அவள் வதனத்தையே ஊடுருவி நோக்கினாள் சங்கரி.

''என்ன பெரியம்மா அப்படிப் பார்க்கிறீர்கள்? ஸ்டெதாஸ்கோப் இல்லாமலே டயக்னோஸிஸ் செய்து விடுவீர்கள் போல் இருக்கிறதே.....'' என்று சிரித்தாள் கல்பனா.

''ஆமாம்...... இந்த நோயாளி ராத்திரியிலிருந்து பட்டினி என்பதைக் கண்வளையங்கள் சொல்லுகின்றனவே !''

''வேலையிலே இறங்கி விட்டால் அவளுக்குப் பசி தாகம் தெரியாது...''

''என்ன செய்வது, பவானி? டாக்டர் குமார் பதினேழாம் நம்பர் பேஷண்டைக்கூட இருந்து கவனிக்கும்படி சொன்னார்...... இரவெல்லாம் தூக்கமில்லை போ..... இன்னும் அரை மணி நேரத்தில் வந்து விடுவார் மனிதர்..... நான் தயாராக வேண்டுமே?'' என்று கல்பனா எழுந்து சென்ற வேகத்தில் அவள் தலையிலே சூடியிருந்த இரண்டு ரோஜாக்கள் உதிர்ந்து விழுந்தன. பவானியும் எழுந்தாள்.

''எங்கே கிளம்புகிறாய், பவானி? முப்பது வருடக் கதையைக் கேட்டாய்.... நான் நூறு வருஷக் கதையைச் சொல்லி முடித்தேன். நிகழ்கின்ற கதை உன் கண்ணிலே தட்டுப்படவில்லை. பார்த்தாயா?''

''நீ எதைச் சொல்கிறாய்?''

''கல்பனா விஷயத்தைத்தான்.... நாலு வருஷங்கள் எத்தனை மதுரமாக வாழ்ந்தாள்? மனைவியில்லாது ஓரிடத்துக்குப் போய்ப் பார்த்திருக்கிறோமா?''

-'அதுதான் ஒரே அடியாக விட்டு விட்டுப் போய்ச் சேர்ந்தானே பாவி!''

''அவள் அமைத்துக் கொண்டுள்ள பாதையை-ஒரு நிமிஷம் நினைத்துப்பாரேன்!''

''அவளுக்கென்ன வந்தது? முழு நேரத்தையும் சேவையிலே கழித்து ஆறுதல் அடைகிறாள்..... உனக்கு அதுகூட இல்லையே !'' என்று உதட்டைப் பிதுக்கினாள் பவானி.

''இங்கேதான் எல்லாரும் தவறு செய்கிறீர்கள்.... 'பெண்கள் உயிரை மாய்த்தோ, உடலைக் கருக்கியோ வாழ முடியாத யுகசந்தி இது. தண்ணீருக்குள்ளேயே இருந்துகொண்டு அதைக் கண்டுபெறியும் விரிந்த தாமரை இலையைப் போல மனதை விரித்து; நெருப்பருகேயிருந்தும் தீண்டப்படாத பஞ்சு போலவும்; காந்தத்தருகேயிருந்தும் ஈர்க்கப்படாத இரும்பு போலவும் நெஞ்சை வலுப்படுத்தி ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வளைய வருவது எத்தனை பெரிய போராட்டத் துறவு நிலை!' என்று என்றைக்காவது நினைத்துப் பார்த்ததுண்டா? சரி... சரி என் அப்படிப் பிரமித்து நிற்கிறாய்? இந்தச் சங்கரி அசடு. நாளெல்லாம் உழைத்துவிட்டு 'தறுக்'கென்று எதையாவது பேசுவாள் என்று நினைக்கிறாயா? போதும் எழுந்திரு.... வேலை தலைக்கு மேல் கிடக்கிறது. கதை கேட்க வந்து விட்டாள் சோம்பேறி.''

இந்நேரம் வரையில் அவள் உதிர்த்த முத்துக்களை நெஞ்சுக்குள் தேக்கியபடியே எழுந்தாள் பவானி.

சங்கமம்

கிரிஜா

அட்டைப் படக் கதை

தெள்ளத் தெளிய ஓடிக் கொண்டிருந்த அந்தத் தாம்பத்திய வாழ்விலே சலனம்! சிறு குழப்பமாக இருந்த அது இன்று பெரும் மூட்டமாகவே கவிந்து இல்லத்தின் ஒளியை விழுங்கிப் பெரும் இருளாகக் கவிந்து கொண்டு விட்டது.

''சே! இதற்கு ஒரு முடிவு ஏற்பட வழியே கிடையாதா?'' என்று அலுத்துக் கொண்டான் ஆண் மகனான அவன்.

''அம்பிகே, பராசக்தி! என் பொறுமைக்கும் எல்லை கிடையாதா? இது என்ன சோதனை தாயே! இருள் நீங்க மார்க்கமே இல்லையா?'' என்று சலித்துக் கொண்டாள் பெண் மகளான அவள்.

அவன் மனம் வைத்தாலும் இருள் அகன்று விடும்; அவள் மனம் இளகினாலும் ஒளி திரும்பி விடும். ஆனால் அந்தப் பொல்லாத மனம்..... அது இருவரையுமே ஆட்டித் தன் கைப் பாவையாக்கிக்கொண்டு வேடிக்கை காட்டியது. அதனால் அவனும், அவளும் பழைய இனிய ஒளித் திருப்பங்களைப் புரட்டிப் பார்த்து ஆறுதல் கொள்ள முயன்றனர்.

துள்ளித் திரிந்த உள்ளம் ஒரு நிலைக்கு வந்த போது, அவளது உடல் அழகும் பூர்த்தியாகி மலர்ந்து குலுங்கியது. கடமையில் கண்ணுள்ள அவள் தகப்பனார், அவள் சற்றும் எதிர்பாராத வகையில் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டார்!

''அம்மா குழந்தை! இன்று நம் வீட்டுக்குப் புது விருந்தாளி வரப் போகிறார்! அவரை வரவேற்கத் தயாராக இரு, அம்மா!'' என்று தந்தை சொன்னபோது அதை அவள் பெரிதாக நினைக்கவில்லை. ''அடி குழந்தை! தலைசுற்றல் வந்து விட்டதே! விருந்தாளி வேறு வருகிறாரே; நீ தனியாக.....'' என்று தாயார் ஆற்றாமைப்பட்டபோதும் அவள் சளைக்கவில்லை. ''நீ ஓய்வு எடுத்துக் கொள். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி அம்மாவை அனுப்பி விட்டாள்.

வந்து நுழைந்த விருந்தாளியைப் பார்த்த போதுதான் அவளுக்குத் 'திக்'கென்று பயம் தோன்றியது. உடல் 'குப்'பென்று வியர்க்க, உள்ளம் 'ஜில்'லென்று குளிர்ந்து எழும்பியது போல் உணர்ந்தாள். உள்ளத்துள் ஒளிந்து விளையாடி வந்த ஒரு முகமலர் மெல்ல மேலே வந்து அவளைத் திணற வைத்தது. களையான முகம்; கம்பீரப் பார்வை மிளிரும் கடலனைய கண்கள்; பரந்த நெற்றியில் சுருண்டு விளையாடும் குழல்; உள்ளத்தை நந்தவனமாக்கும் ஒளிப் புன்னகை....... என்ன விந்தை! உள்ளத்தில் ஒளிந்து விளையாடும் கற்பனை முகம், உருப்பெற்று விட்டதோ......? திகைத்து நின்றாள் அவள்.

''என்னம்மா, பாரதி!'' என்று நாசூக்காக எச்சரித்த தந்தை, ''இவள் என் ஒரே பெண் பாரதி'' என்று வந்தவருக்கு அறிமுகம் செய்யத் தொடங்கியபிறகே அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு சுறுசுறுப்புப் பெற்றாள்.

''சமையல் எப்படி சார்?''—அவள் அப்பா தான் அவரைச் சீண்டினார்.



அவர் நிதானமாகச் சொன்னார்: ''முகஸ்துதிக்காகச் சொல்ல வில்லை, சார்; என் தாயாரின் கைச் சாப்பாட்டுக்குப் பிறகு இன்றுதான் நல்ல சாப்பாட்டைச் சுவைக்கிறேன்....''

''எல்லாம் என் பெண் பாரதியின் தயாரிப்புத்தான். கல்லூரிப் படிப்பிலும் கைச் சமையலிலும்; வீட்டு வேலையிலும் சரி, அவள் முதல் மார்க்கே வாங்கி விடுகிறாள்!'' என்று அவள் அப்பா சொன்னதும் கையில் எடுத்த பிடியை வாயில் போட மறந்து, வியப்புடன் அவளைப் பார்க்க.... அந்த மதிமுகம்; அகன்று விரிந்த விழிகள்..!

அன்று இரவு அவன் கண் தூங்க மறுத்து விட்டது. இனிய நினைவில் ஆழ்ந்த மனத்துக்குத் தூக்கம் ஒரு பொருட்டாகப் படவில்லை.

காலையில் அவள் முகத்தைப் பார்த்த தந்தை, ''என்னம்மா, பாரதி! முகம் வாடியிருக்கிறது. இரவு தூக்கம் இல்லையா, அம்மா?'' என்று கேட்டதும் அவள் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அவளுக்கே அந்த வெட்கம் புதுமையாக இருந்தது.

தந்தை அவளை அருகில் அமர்த்திக்கொண்டு கேட்டார்: ''குழந்தை! நேற்று நம் வீட்டுக்கு வந்தாரே, ஒரு புது விருந்தாளி, அவரை நிரந்தர விருந்தாளி ஆக்கிக் கொண்டுவிட உன் சம்மதம் தேவை அம்மா'' என்றார்.

வியப்பால் விழிவிரியத் தந்தையை ஏறிட்டு நோக்கினாள். புன்னகையுடன் தந்தை தொடர்ந்தார்: '' 'ஜாதகப் பித்துள்ள அப்பாவா இப்படிக் கேட்பது!' என்று வியக்கிறாயா அம்மா? ஜாதகம் பார்த்துத் தெளிந்த பிறகுதான் அந்தப் பையனை நம் வீட்டுக்கே அழைத்து வந்தேன். 'பெண் பார்க்க' என்றால் நீ பிகு செய்து மறுப்பாய்; அதற்கு இடம் வைக்காமல் இப்படி ஏற்பாடு செய்து விட்டேன். உன் சம்மதம் தெரிந்து பிறகு சம்பிரதாயப்படி பையனின் பெற்றோரைக் கண்டு பேசி அழைத்து வர வேண்டும். இப்பொழுது சொல்லம்மா, உன் சம்மதத்தை?'' என்று அவர் கேட்டதும், அவள் உடல் பஞ்சினும் இலேசாகிப் பூரிக்க, முகம் மலர்ந்தது.

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து அவர்தம் கரம் பற்றியதும், தொடர்ந்து புதுக் குடி புகுந்ததும் அவள் வாழ்வில் என்றும் மறக்க முடியாத ஒன்று.

அவன் அன்பில் திளைத்த அவள் உரிமையுடன் கேட்டாள்: ''வேலைக்குப் போகும் ஆவல் எனக்கு உண்டு. இருவர் சம்பளமும் சேர்ந்தால்...... என்றுமே குடித்தனம் சொர்க்கமாக இருக்கும் இல்லையா?''

சிறிது மௌனத்துக்குப் பிறகு அவன் கேட்டான்: ''ஏன், பாரதி! உன் தந்தை உனக்கு அருமையாகத் தேடித் தந்துள்ள வேலை பிடிக்க வில்லையா?''

அதிக வியப்புடன், ''தந்தை தேடித் தந்த வேலையா?'' என்று அவள் கேட்டதும், கனிவோடு அவளை நோக்கிய அவன், ''என்னையும், என்னையொட்டி உன்னையும், நம் இருவரையும் ஒட்டி, 'இல்லறம்' என்னும் வீட்டையும் கட்டிக் காக்கும் பொறுப்புள்ள வேலை சாமானிய வேலையா?'' என்று அவன் கேட்டதும் அவள் திகைத்து நின்றாள்.

அன்று அவன் கம்பெனியில் சம்பளம் போடும் தினம். அதை அவள் அவனிடம் சொன்னதும், ''உங்கள் வேலைக்கு ஊதியம் கிடைக்கும் நன்னாள்......! என் வேலைக்கு?'' என்றவள் மெல்ல அவனை நோக்கினாள். புன்னகை கொண்ட அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் சென்று விட்டான்.

அன்று மாலை வீடு திரும்பியவன், அவள் கையில் சம்பளப் பணத்தைக் கொடுத்தபின், ''என் வேலைக்கு இந்தப் பணம் மட்டுமே ஊதியம்; இதோ உன் வேலைக்கு இந்தப் பணத்துடன், என்னையும் சேர்த்தல்லவா பெறுகிறாய்?'' என்று அவன் கேட்டதும் அவள் அசந்து விட்டாள்.

'வேலைக்குப் போவது தனக்கு இஷ்டமில்லாத ஒன்று என்பதை எவ்வளவு அழகாகவும், நாசூக்காகவும் சொல்லி விட்டார்!' என்று மனத்துக்குள் வியந்தவள், அவனிடம் தன் ஆவலைப் பல முறை வற்புறுத்தியது குறித்துக் குன்றினாள். அதன் பிறகு அவன் மனம் அறிந்து நடக்கப் பெரிதும் முயன்றாள். அவன் அதிருப்திக்கு ஆளாகாமல் இருக்கப் பெரிதும் முயன்றவள், தன் அதிருப்திக்கு 'அவனும்' ஆளாக முடியும் என்று சிறிதும் எண்ணவில்லை.

அன்று கணவனது அறையை ஒழுங்கு படுத்த முயன்றவள், பாதி புகைக்கப்பட்டுக் கிடந்த துண்டுகளைக் கண்டு வெகுண்டாள். அடுத்தபடி 'டிரா'வில் கிடந்த அந்தச் சீட்டுக் கட்டைக் கண்டதும் அவள் கோபம் உச்சத்தை அடைந்து விட்டது.

அவன் நுழைந்ததும் அவள், ''இதோ! பாருங்கள்! சீட்டாடுவது, சிகரெட் பிடிப்பது முதலிய கெட்ட பழக்கங்கள் எனக்குக் கட்டோடு பிடிக்காது'' என்றாள்.

''ஓகோ! அப்படியா!'' என்றான் அவன் அழுத்தமாக.

அவள் விடவில்லை. ''இந்தப் பழக்கங்களை நீங்கள் நிறுத்தி விடத்தான் வேண்டும்!'' என்றாள் குரலில் கண்டிப்புத் தொனிக்க.

''நிறுத்தா விட்டால்...?'' அவன் இடைமறி விட்டான்.

''நிறுத்தாவிட்டால்...... கோர்ட்டுவரை போய் விடுவாயாக்கும்?'' கிண்டல், கோபம் இரண்டும் இழை பின்னக் கேட்டான் அவன். உள்ளத்தில் அம்பு தைத்தாற் போல் துடிதுடித்து நின்றாள் அவள். உள்ளம் நைய, உடல் பதறக் கீழே வந்து விட்டாள். 'படித்தவள் என்று பரிகசிக்கிறாரா?.... இல்லை, பண்பற்றவள் என்று காட்டிக்காட்டுகிறாரா?' குமுறிக் குமுறிக் குமைந்தது அவள் உள்ளம்.

அவன் குளிப்பதற்காக வெந்நீரை விளாவிக்கொண்டிருந்தாள் அவள். அவ்வளவு சீக்கிரம் அவன் குளியலறைக்கு வந்து விடுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. முகத்தைத் தாழ்த்திக் கொண்டு, வெளியேற முயன்றவள் திகைத்து, நிமிர்ந்தாள்



வழியை மறைத்து நின்றவன் முகத்திலே குறும்புப் புன்னகை.

"அடேயப்பா! விளையாட்டாகக் கேட்டதற்கு இத்தனை கோபமா? என், 'பாரு'வுக்குப் பிடிக்காது என்று தெரிந்தபின் அது எதுவாக இருந்தாலும் விட்டுத் தலைமுழுகி விடமாட்டேனா? அதோடு அந்தத் துண்டுகள் நண்பன் கோபாலனுடைய கைங்கரியத்தால் வந்தவை! உம்....! இப்போ கொஞ்சமாவது சிரித்தால்தான் வழி கிடைக்கும்; மடியாக வெளியேறவும் முடியும்." அவன் விழிகள், சுருண்டு புரளும் மயிர்ச் சுருள், விரிந்து மலர்ந்த உதடுகள், எல்லாவற்றிலுமே குறும்பு துள்ளி விளையாடியது.

அவள் மலைத்து விட்டாள். அவளது உள்ளம் நழுவி அவனது பாதத்தை அணைத்துக் கொண்டதுபோல் ஓர் ஆறுதல். உடல் பஞ்சாக, முகத்திலே பசுமை விரிய மெள்ளச் சிரித்தாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவள் மனத்துள் சதா வணங்கும் தெய்வம் அவனாகி விட்டான். சதா ஜெபிக்கும் திருநாமம் அவன் நாமமாகி விட்டது. அந்த இனிய சம்பவத்தை எண்ணி எண்ணிப் பூரிப்பாள்.

தன்னை மறந்து புன்னகை கொண்டவள் சட்டென நினைவுக்கு வந்தவளாய்ப் பெருமூச்சு விட்டாள். 'அந்த நாளும் வந்திடாதோ' என்று ஏங்கித் தவித்தாள்.

தன்னை மறந்து புன்னகை கொண்ட அவனும் திடுக்கிட்டான். "அந்தப் பொன்னான நாட்கள் இனி திரும்பியே வராதா?" உள்ளத்தை ஊடுருவிக் கொண்டு வந்தது ஒரு பெருமூச்சு. மீண்டும் சிந்தனை பின்னோக்கியது.

அன்று இனிய திட்டங்களுடன் சீக்கிரமே வீடு திரும்பியவன், வீட்டினுள் எழுந்த பேச்சரவம் கேட்டு வெளியிலேயே நின்றான். பெண்களின் குரல்; வம்பு, கேலி; ஆண் மகனைப் பற்றிய அபிப்பிராயம்;— கொல்லென்ற சிரிப்பு.

குதூகலம் மறையக் கோபமாக உள்ளே நுழைந்தான் அவன். பெண்கள் கலைந்து வெளியேற, கையில் காப்பியும், கலகலத்த மூச்சுமாக அவன் அருகில் வந்தாள் அவள்.

கழுவிக் கொண்டு வந்த முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவன், "இதோ, பார் பாரதி! இந்த வம்புப் பேச்சும், கொம்மாளச் சிரிப்பும் எனக்கு எப்பொழுதுமே பிடிக்காது" என்றான் குரலில் கோபம் தெறிக்க.

வியப்பால் விழி விரிய அவனைப் பார்த்தவள், "உம்; அப்படியா?" என்றாள் அலட்சியமாக. அவளது இந்த அலட்சியம் அவனது கோபத்தை விசிறி விட்டது. ஆத்திரமாக, "இன்றோடு இதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும்; தெரிந்ததா?" அதிகாரம் குமிழியிடப் பொரிந்தான்.

"முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் ?" கேட்டது அவள்தானா? அவனுக்கு வியப்போடு, வெறுப்பும் எழுந்து குமுறியது. அவளை உறுத்து விழித்தான் எரித்து விடுவது போல.



"போலீசார் உன்னைக் கைது செய்த போது உன் கையில் இருந்தது பிராந்தி புட்டியா, பீர் புட்டியா?"
"அதென்னமோ? எனக்கு ஒரு விதமான மயக்கம் அப்போ!"

"...... வைக்காவிட்டால் கோர்ட்டுவரை போய் விடுவீர்களாக்கும்?" கிண்டலும், கேலியும் இழை பின்னி எக்காளமிட்டது அவள் குரலில்.

உச்சத்தை எட்டி நின்ற கோபத்தைச் சமாளிக்க உதட்டைக் கடித்துக் கொண்டவன், "ஆமாம்; அப்படித்தான் வைத்துக் கொள்" என்று சொன்னவன், "நக்" என்று மேஜை மீது டபராவை வைத்து விட்டு, "விர்" என்று மாடிக்குப் போய் விட்டான்.

"படித்த முட்டாள்....! கையாலாகாதவன் என்று எண்ணி விட்டாளா? படித்த தைரியமா.....? இல்லை.... அளவுக்கும் மீறிய அகம்பாவமா......?" மனம் கொதிக்கக் கை துடிக்க அயர்ந்து உட்கார்ந்தான். ஏதோ ஒன்றை இழந்துவிட்ட அயர்வு அழுத்த சிறைப்பட்டாற்போல்மனம் வலிக்கப் புழுங்கினான். வாழ்வே அஸ்தமித்து விட்ட மாதிரி மனத்தில் பெரும் கசப்பு எழுந்தது.

மன இருளுக்குமுன், அறையின் இருள் அவனுக்கு உறைக்கவில்லை. கைகளில்புதைத்த முகத்தைத் தூக்கவும் தெம்பின்றி இருந்தான்.

மேஜை மீது விளக்குப் பளிச்சென்று எரியவே, திடுக்கிட்டு நிமிர்ந்தான். பின்புறமிருந்து வந்த வளைக்கரம் அவன் தோள் மீது நெளிந்து தவழ்ந்தது.

"அம்மாடி, விளையாட்டுக்குக் கேட்டதற்கு இத்தனை கோபமா? 'என் தெய்வத்துக்குப் பிடிக்காது' என்று தெரிந்தபின் அது எதுவாக இருந்தாலும் விட்டுவிட முற்றுப்புள்ளி வைத்துவிட மாட்டேனா? இதற்காக இப்படிப் புழுங்கலாமா? அதோடு, வம்பு பேசியது நாடக டிக்கெட் விற்க வந்த பள்ளிப் பெண்கள். அந்தக் கன்னிப் பெண்களுக்கு இந்தக் காளையர்களின் உயர்வு எப்படித் தெரியும்?"

யார் இவர்கள்?

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களின் உதவி கொண்டு, அவை யார் யாரைப் பற்றியன என்று கூறமுடிகிறதா பாருங்கள்!

அரசியல்

1. பிரபல ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் சர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களை அந்த நாளில் தேர்தலில் முறியடித்த பிரபல காங்கிரஸ்காரர் இவர். திரு காமராஜரின் அரசியல் குருநாதரும்கூட.

2. நமது சென்னை மாகாணத்தின் முதல் மந்திரியாகப் பணியாற்றிய இவர், ஒரிஸ்ஸா மாகாணத்தின் கவர்னராக இருந்திருக்கிறார்.

3. ராஜாஜியினால் 'எனது பெரிய சகோதரர்' என்று ஆங்கிலத்திலே நகைச்சுவையுடன் குறிப்பிடப்பட்ட இவர் (சுதந்திரத்துக்கு முன்பு) சில காலம் நம்முடைய மாகாணத்தின் கவர்னராய்ப் பதவி வகித்தார். இந்துவல்ல!

4. கோவைப் பிரமுகரான இவர் நமது சுதந்திர இந்திய சர்க்காரிலும் நிதிஅமைச்சராய்ச் சேவை செய்திருக்கிறார்.

5. தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திலே பெரும் பங்கு கொண்ட உண்மைக் காங்கிரஸ்வாதி. ராஜாஜியின் அன்புக்குப் பாத்திரமானவர். மதுரைக்கும் இவருக்கும் தொடர்பு உண்டு.

6. பழைய மிதவாதிகளில் ஒருவர். இவர் பெயரில் இரு உயர்நிலைப் பள்ளிகள் நடந்து வருகின்றன. ஒன்று திருக்காட்டுப்பள்ளியில், மற்றொன்று சென்னை மயிலாப்பூரில். —சரவணன்

(விடை 74ம் பக்கம் பார்க்கவும்)

குரலில் குழைவு துள்ள, குறும்பு விழியில் விளையாட அவளைத் தன் அருகில் வந்த அந்த மதிமுகத்தைக் கண்டு திகைத்தான். அவன் உள்ளம் விரைந்து அவளை அணைந்து நின்றது. பனிச்செடியு, அந்தக் குளியல் அறைச் சம்பவம் அவன் நினைவுக்கு வரவே, சட்டென முகம் மலரச் சிரித்தான் அவன்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அவன் உள்ளத்தில் சதா ஏந்திப் போற்றும் பெண் மலர் அவளாகி விட்டாள். சதா மனத்துள் வாழ்த்தும் பெயர் அவள் பெயராகி விட்டது.

உள்ளம் ஒன்றுபட்ட பிறகு, இல்லம் ஒளி பெறுவதில் விந்தை என்ன? அவள் நினைப்பதை அவன் செயலாக்குவான்; அவன் நினைப்பதை அவள் செயலாக்குவாள். தேனருவியாக ஓடிய இல்வாழ்விலே, மாங்கனியாகப் பிறந்தது பிள்ளைக் கனியமுது. அவன் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

"....உங்கள் ஆசைப்படி ராஜாவுக்கு ஒரு தங்கையே பிறக்கட்டும். அப்படியின்றித் தம்பி பிறந்தாலும் நம் ஆசைக்கு முற்றுப் புள்ளிதான்" என்று அவள் மனம் விட்டுச் சொன்னதும் அவனுக்கு வியப்பாக இருந்தது. காரணம் அவன் எண்ணமும் அதுதான்.

'அன்பு கொண்ட இரு உள்ளங்களின் ஒன்றுபட்ட லட்சியத்தை இறைவனும் அங்கீகரித்தே விடுகிறரோ.....?' என்று அவன் வியந்து போனான். அவன் மைந்தன் ராஜாவுக்குத் தங்கைதான் பிறந்தாள். அவள் முகம் மலர, அவளைப் பார்த்தான். அவள் அகம் குளிர்வதையும் அவன் கண்டு பெரிதும் மகிழ்ந்தான்.

குழந்தைகளின் வளர்ச்சியிலும் அவன் அக்கறை அவள் செயலில் பிரதிபலிக்கும். அவர்களின் உடல் வளர்ச்சிக்காக உழைப்பதிலோ, மன வளர்ச்சிக்காகச் செய்யும் தியாகத்திலோ அவளை மிஞ்சியே நின்று மனம் பூரிக்கச் செய்வாள் அவள்.

'தந்தையின் குரலில் தாயின் பரிவையும், தாயின் அணைப்பில் தந்தையின் ஆதரவையும் ஒன்றுபோல் கண்டு வளர வேண்டும் குழந்தைகள், 'நீ அம்மா செல்லமா? அப்பா செல்லமா?' என்று வந்தவர்கள் குழந்தைகளிடத்தில் கேள்வி போட்டுப் பதில் பெற்றுச் சிரிக்கும்படி வித்தியாசம் காட்டி வளர்க்கக் கூடாது......' என்ற அவனது இலட்சிய எண்ணங்களை அவள் செயலாக்கி நின்றபோது எப்படி வியந்திருக்கிறான்; எவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறான்?

" ...... அவன் உள்ளத்தைக் கண்களில் கண்டு காரியம் செய்கிறளா, இந்தப் பெண்! இல்லை, அவன் விருப்பமே அவள் மனமாகி விட்டதா?... இப்படி இல்லம் நுழைந்தவர்கள் வியந்து பாராட்டுவதைக் கண்டு அவன் பெருமை கொண்டு பூரித்திருக்கிறான். 'உன் சௌபாக்கியம் யாருக்கடா கிடைக்கும்! அவன் போக்கை அனுசரித்துப் போகனும் என்ற கஷ்டம் உனக்கில்லை. உன்னில் பாதி அவளும், அவளில் பாதி நீயும் என்று இணைந்து உமையொரு பாகனைப் போல் இருக்கிறீர்கள்' என்று நண்பன் அவர்களது தாம்பத்யத்தைப் புகழ்ந்து போகும்போது அவன் இதயம் விம்மப் பெருமைப்பட்டிருக்கிறான். 'நமக்கு இணையில்லை என்று இறுமாப்புக் கொண்டிருக்கிறான். அந்த இறுமாப்பே இன்று இருளாக மாறி நிற்கிறதா? இந்த இருள் பிரிய வழியே கிடையாதா?"

ஏங்கித் தவித்தவன் ஒரு நீண்ட பெருமூச்சுடன் வைத்த போதனை எடுத்து வரியை ஓட்ட முயன்றான். மனவலியை மறக்க அவன் கண்ட மருந்து அது.

"இந்த இருள் பிரிய வழியே கிடையாதா?" என்று ஏங்கினான் அவனும். நீண்ட பெருமூச்சுடன் மீண்டும் நினைவுச் சுழலிலே மனத்தை அலைய விட்டான். ஆபீஸில் புதிதாக வந்து சேர்ந்த அந்த ராதுவின் சிநேகம் கிடைத்த பிறகுதான் அவர்களது இன்பத் தாம்பத்ய வாழ்விலே ஒரு புதுத் திருப்பம் — புது அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

இருமலை நிறுத்த

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சாப்பிடுங்கள் சிவப்பு லேபில்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ளீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியையூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக்குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது


வார்னர் இந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்

JWT. WH. 2394 (R)

பள்ளியில் சுறுசுறுப்பு என்றும் முக்கியம்

வெள்ளை உடைகளுக்கு டினோபால் தருவது

துல்லிய வெண்மை துலங்கும் மேன்மை



அள்ளி அணைத்திட ஆடிவரும் பிள்ளைக் கனியமுதைக் கண்டு அகமகிழ்கிறாள் அன்னை. பள்ளிப் படிப்பில் துடியான இந்த வண்ணச் சிறுவன் என்றும் அணிவது மிகமிக வெண்மையான உடைகளே—எல்லாம் டினோபால் சலவை !



துணிகளைக் கடைசியாக நீரில் அலசுவதற்கு முன் சிறிதளவு டினோபால் சேர்த்தால் போதும் — வெள்ளை ஆடைகள், ஷர்ட்டுகள், கிராசர்கள், புடவைகள், ஃப்ராக்குகள், படுக்கை விரிப்புகள் முதலியன எல்லாம் மிக மிக வெண்மையாக விளங்கும். இத்தனைக்கும் செலவும் மிக மிக சொற்பமே — ஒரு துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவே

உங்கள் உடைகள் இணையற்ற வெண்மையுடன் விளங்க, இன்றே டினோபால் வாங்குங்கள்—கவர்ச்சியாக இருக்க விரும்புவர்கள் எப்போதும் வாங்குவது டினோபால். டினோபால் ஒரு நவீன சலவை சாதனம்—எவ்விதமான துணிகளுக்கும் அபாயமின்றி உபயோகிக்கலாம்.

டினோபால் என்ற பெயர் ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பால், ஸ்விட்ஜர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், தபால் பெட்டி 965
பம்பாய்-1 பி. ஆர்.

Shilpi SGT. 49A TAM

குறிப்பிட்ட ஒரு நடிகையைப் பற்றியே பிரமாதமாகப் புகழும் நண்பனது புகழ்ச்சிக்கு மௌன அவன் அடிமையாவதைக் கண்டு அவள் சற்றே திடுக்கிட்டாள். அந்தப் பிரபல நடிகை நடித்த படத்துக்கு நண்பர்கள் அடிக்கடி போய் வரத் தலைப்பட்டார்கள்; அவனையும் கூட அழைத்துச் செல்லலுண்டு. படம் பார்க்கும்போது நடிகையின் நடிப்பைப் புகழத் தொடங்குபவன், மெள்ள நாளாக ஆக அவள் அழகையும் வர்ணிக்கத் தொடங்கியபோதும் அவளுக்கு ஆத்திரம் வந்தது. ஆனாலும் அவள் அடக்கிக் கொண்டாள்.

அந்த அழகியின் படத்தையே அவன் வீட்டுக்குக் கொண்டு வந்து மாட்டியபோது தான் அவள் ஆத்திரம் எல்லை மீறி, மனம் வெகுண்டாள். அவனும் அதை அவனே உணர்ந்து தன் தவறுக்காக வருந்தும்படி செய்து தான் மாற்ற முடியும் என்பதையும் நன்கு உணர்ந்தாள். ஆகையால் வெகுண்ட மனத்தை வெகுவாக அடக்கிக் கொண்டு முயற்சியில் இறங்கினாள்.

குறிப்பிட்ட ஒரு நடிகரின் படத்துக்கு அவள் அடிக்கடி போகத் தொடங்கினாள். அவனையும் வற்புறுத்தி அழைத்துச் சென்றாள். படம் ஓடும்போது நடிகரின் நடிப்பைப் பிரமாதமாகப் புகழ்ந்தவள், கடைக்கண்ணால் அவன் முக மாறுதலையும் கண்டு களிக்கக் கொண்டாள்.

அன்று அந்தப் படத்தை அவன் பார்வை படும் இடத்தில் மாட்டியவள் அவன் வரவுக்காகக் காத்திருந்தாள்.

காப்பி, டிபனை அவன் முன் வைத்தவள், ''இந்தப் படத்தில் அவர் கொடுத்துள்ள 'போஸ்' மிக நேர்த்தியாக இல்லை?'' ஆனந்தம் பொங்கக் கேட்டவள் கடைக் கண்ணால் அவனையும் பார்த்தாள்.

முகம் சிவக்க, உதடு துடிக்க, காப்பி டம்ளரை, 'நக்'கென்று வைத்தவன் அவளை எரித்துவிடுவது போலப் பார்த்தபடி, ''நேர்த்தியாக இருந்தால் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொள். இங்கு அது அவசியமில்லை'' என்றான் வெடுக்கென்று.

''அப்படியா?'' என்றவள், நடிகையின் படத்தைச் சுட்டிக் காட்டி, ''அதுவும் இங்கு அவசியமில்லைதான். அதையும் எடுத்து, உங்கள் பெட்டியில் வைத்துப் பூட்டிவிடட்டுமா?'' என்று கேட்டாள் அமைதியாக.

கணகாலம் அதிர்ந்து நின்றவன், வெடுக்கெனத் திமிர்ந்து, ''அந்தச் சிரமம் உனக்கு வேண்டாம்'' என்றபடி படத்தைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு மாடிக்கு வேகமாகப் போய் விட்டான்.

அயர்ந்துவிட்ட அவளுக்கு உணர்வு மீளச் சிறிது நேரம் பிடித்தது..... விஷயம் புரிந்ததும் கணத்தில் மனம் மாறி விரியும் விழிகளில் விஷமம் துள்ள சிரிக்கும் கணவனைக் காணத் துடித்து நின்றவளுக்கு இந்த அவன் செய்கை எல்லையற்ற ஏமாற்றத்தைக் கொடுத்தது... தொடர்ந்து அவள் மனத்தில் பெரும் கசப்பும், வெறுப்பும் நிறைந்தன. இதன் பிறகே அந்தப் பயங்கரமான இருட் திரையே அவர்கள் முன் விரிந்து விட்டது.

'அப்பப்பா!' விரிந்து வளரும் குழந்தைச் செல்வங்களின் முன் அந்த இருட் திரையை மறைக்க எவ்வளவு பிரயாசை! ஒன்றி இழையாத மனத்தை மூடி, ஒட்டி நிற்க வேண்டி வந்தது; அன்பு நுழையாத கணவனைத் தாழ்ந்தபடி கடமையைச் செய்யத்தான் வேண்டியிருந்தது. இந்த நடிப்பில் மட்டும் ஒன்று பட்டு உழைக்க அவனும் மறுக்கவில்லை. இது அவளுக்குச் சற்று ஆறுதல் கொடுத்தது.

சொர்க்கமாகக் குளிர்ந்திருந்த வீடு இதன் பிறகே நரகமாகச் சுட்டது. வீட்டுக்குள்ளாகவே கிடந்த அவளுக்கே அந்தச் சூடு அதிகம் உறைத்தது. அத்துடன் அவன் வீட்டில் தங்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கவே, மனம் வெந்து குமைந்தாள்! 'என்னைப் புழுங்க வைத்துவிட்டு, இவர் நாளெல்லாம் நண்பர்களுடன் வெகு குஷியாகச் சுற்றுகிறாரா? இதற்கு ஒரு நீதி, நியாயம் கிடையாதா?' என்று நொந்தாள். ஆனாலும் அவன் அகாலத்தில் வந்தாலும் தூங்காமல், சாப்பிடாமல், காத்திருப்பதை அவள் தன் பாக்கியமாகவே இன்னும் கருதினாள். தானே போட்டுக் கொண்டு வயிறு நிறையச் சாப்பிட அவளுக்குத் தெரியாது என்ற அங்கலாய்ப்பு அந்தப் பெண் மனத்தைத் தத்தளிக்க வைக்கும்போது எந்தப் பெருந் துரோகமும் முன்னால் நிற்க முடியாதுதான்.

இனியும் இப்படியே நீடித்தால் தாங்கவே முடியாது என்ற நிலை ஏற்பட்டபோதுதான் அவளுக்குப் பெரும் சலிப்பு ஏற்பட்டது. அன்று அவன் வழக்கமாக வரும் நேரமும் கடந்துவிட்டபோது சலிப்பு உச்சத்தை எட்டி விடவே சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு, அவள் சாப்பிடாமலே படுத்துக்கொண்டு விட்டாள்; அவன் வந்து கதவைக் கால் மணி நேரம் தட்டிய பிறகே கதவைத் திறந்தவள் ''சாப்பாடு மேஜையில் இருக்கிறது'' என்றபடி மீண்டும் படுத்து விட்டாள்.

மறுநாள் பாத்திரங்களைக் காலை எடுத்தவள் திடுக்கிட்டாள். இரவு வைத்த சாப்பாட்டை அவன் சாப்பிடவே இல்லை. அவள் மனம் துடித்தது. வேலையே ஓடவில்லை.

அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பியவன் சற்றே நின்று ''மேஜை மேல் சம்பளம் இருக்கிறது: ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன். வர நேரமாகும்'' என்று அவளைப் பாராமலே சொல்லிவிட்டுப் போய்விட்டான். அவளுக்கு 'ஹோ'வென்று ஒரு குரல் மனம் விட்டு அழலாமா என்று வந்தது. ஒவ்வொரு மாதமும் சம்பளப் பணத்தை அவளிடம் கொடுக்கு முன் எத்தனை கேலியும் கிண்டலும் செய்து அவளைச் சீண்டி இன்பம் கொடுப்பான்? நெஞ்சை வாட்டும் துன்பச் சுமையுடன் கணக்கு நோட்டை எடுத்துக் கொடுக்க வேண்டிய கணக்குகளைக் குறிக்கத் தொடங்கினாள்.

முக்கியமான ரசீது ஒன்றைக் காணாமல் தேடிப் புறுத்தவள் அறையில் உள்ள அந்தக் குப்பைக் கூடையைக் கிளறிப் பார்க்கத் தொடங்கினாள். அடியிலிருந்து மேலாக வந்த காகிதத் துண்டுகளைக் கண்டதும் அப்படியே திகைத்தபடி நின்றுவிட்டாள்.

யார் இவர்கள்? 70ம் பக்க விடை:

1. எஸ். சத்தியமூர்த்தி
2. பி. எஸ். குமாரசாமி ராஜா
3. ஸர் மகம்மது உஸ்மான்
4. ஸர் ஆர்.கே. ஷண்முகம் செட்டியார்
5. மதுரை ஏ. வைத்தியநாதய்யர்
6. ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்

இன்ப வாழ்வின் இருள் கவ்விய காரணமாக நின்ற அந்த இரு படங்களுமே சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்தன. "அப்படியானால்... அவர்... அவர்....?" இன்பமும் துன்பமும் இழை பின்னத் திணறித் தவித்தாள் அவள்.

"போஸ்ட்" என்ற குரல் கேட்ட பிறகே அவள் தன் எண்ணங்களை உதறிக் கொண்டு எழுந்தாள். மஞ்சளைச் சுமந்து வந்த அந்தக் கடிதம் அவளைப் பரபரப்படையச் செய்தது. இரண்டு தினங்கள் முன்னதாகவே வந்திருக்க வேண்டிய கடிதம் அது. கணவனது கடைசித் தங்கையின் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டதை அறிவிக்கும் அந்தக் கடிதத்தில் அவசரத் தேவைக்கு இருநூறு ரூபாய் தானேயே அனுப்பும்படி இருந்தது.

பரபரப்புடன் மேஜையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணியவள் திகைத்தாள். மாதச் சம்பளப் பணத்தை விட இரு மடங்கு அதிகப் பணம் இருந்தது அதில். "ஏது இவ்வளவு பணம்?" என்று திகைத்தவள் திகைப்பு நீங்கு முன் பரபரப்புடன் செயல்படத் தொடங்கினாள்.

கணவன் பார்வைக்கு அந்தக் கடிதத்தை அனுப்பி, அன்றே தந்தி மணியார்டர் செய்தாகவேண்டும். ஆளை அனுப்புவதா, போன் செய்வதா என்று அவள் குழம்பிக் கொண்டு நிற்கும்போதுதான் வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அதிலிருந்தும் இறங்கி வீட்டுக்குள் வந்தவரைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது. கணவன் ஆபீஸில் இருக்கும் முக்கியமான மேலதிகாரி அவர்.

"அம்மா பாரதி! உன் கணவனுக்கு இன்று பிரமோஷன் கொடுத்துப் பாராட்டினார்கள். அதைச் சொல்லவே இப்படி நுழைந்தேன். பல தினங்களாகக் கிடந்துபோன வேலைகளை இந்த ஒரு மாதத்தில் செய்து முடித்துவிட்டான். காலையிலிருந்து இரவு பத்து மணி வரை ஒரு கப் காப்பிகூடச் சாப்பிடாமல் முழு மூச்சுடன் அவன் முயலாவிடில் வேலையும் முடிந்திராது. எங்கள் மானமும் பிழைத்திராது" என்று அவர் சொன்னதும் 'குப்'பென்று அவளுக்கு வியர்த்தது.

அவர் மீண்டும் "ஏனம்மா உங்களுக்குள் ஏதாவது தகராறு? அவன் குடியும் கொம்மாளமும் இருந்த இடம் தெரியவில்லையே! கையில் டிபன் கொண்டு வருவதும் இல்லை, காண்டீனில் சாப்பிடுவதும் இல்லை. என்னம்மா விஷயம்?" என்று அவர் கேட்டதும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

எப்படியோ சமாளித்துக் கொண்டு விஷயத்தை மூடி மழுப்பினாள். அவர் புறப்பட்டபோது, கடிதத்தையும் தந்தி மணியார்டர் செய்யப் பணத்தையும் கொடுத்து அனுப்பினாள்.

'....அவர் ஊரைச் சுற்றவில்லை. வயிற்றுக்குக்கூடச் சாப்பிடாமல் அதிகப்படியாக வேலை பார்த்துத் தம் துன்பத்தை மறக்க முயன்றிருக்கிறார்' — இந்த எண்ணம் அவள் நெஞ்சைப் பிழிந்தது.

சாப்பிடும்போது அவன் கேட்டான், "அப்பா இருநூறு ரூபாய்தானே கேட்டிருக்கிறார். ஐந்நூறாக அனுப்பச் சொல்லிவிட்டாயே, குழந்தைகளுக்கும் நமக்கும் துணிமணிகள் எடுத்துக் கொள்ள வேண்டாமா?" என்று.

"வேலைக்காரியை நிறுத்திவிட்டு நான், 'ஓவர் டைம்' பார்த்த பணமும், இருவரும் பட்டினி கிடந்ததால் ஏற்பட்ட மிச்சப் பணமும் இருக்கிறது. சமாளித்துக் கொள்ளலாம்" என்று அவன் சொன்னபோது துக்கத்தைச் சமாளிக்க முடியாமல் திணறினாள்.

'பொட்'டென்று கையில் விழுந்த கண்ணீர் முத்து அவன் கையைச் சுடவே அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் தலை கவிழ்ந்திருந்தது.

அவன் தன் வேலைகளை முடித்துக்கொண்டு படுக்க வந்தபோது அவள் சாய்மானத்தில் கண்ணை மூடியபடி படுத்திருந்தாள். அவனது மென்கரம் அவளது பாதத்தில் பட்டபோது கண்ணிமைகளைப் பிரித்தவள் காலடியில் அமர்ந்திருக்கும் அவனைக் கனிவோடு நோக்கினாள்.

"அடுத்த வாரம் முதலே லீவுக்கு எழுதி விடுங்கள். கல்யாணத்துக்கு ஒருவாரம் முன்னதாகவே போக வேண்டும்" என்றாள் அவள்.

"நாளை முதலே லீவுதான். ஒரு வாரம் ஓய்வு எடுத்துப் புறப்படுவோம்" என்றவன் மெல்ல, "ராதிகாவில் நாளை முதல் 'சங்கமம்'. அதில் அவர்கள் இருவரும் சேர்ந்து நடித்திருக்கிறார்கள்" என்றான் கண்களில் மின்னல் பளிச்சிட.

அவளது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது. தன் பெண்மையே மாசுபட்டு விட்டதுபோல் மனம் குன்றத் தலை கவிழ்ந்தவள், "என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள் துக்கத்தால் ஏற்பட்ட கமறலுடன்.

சாய்மானத்திலிருந்தும் எழுந்தவன் குனிந்து இரு கைகளாலும் அவள் மதிவதனத்தை நிமிர்த்தியபடியே, "பாரு! தவறு செய்தவன் நானே; அதை உணர்த்த முற்பட்டது தவறேயல்ல; மன்னிப்புப் பெறவேண்டியவன் நானே; என்னை மனப்பூர்வமாக மன்னிப்பாயா?" என்று சொல்லும் போதே குரல் கம்மியது. கண்களில் நீர் திரண்டது.

அவனது கைமலரில் நிமிர்ந்த முகமலரின் இரு விழிகளிலும் திரண்ட கண்ணீர் கன்னக் கதுப்புக்களில் உதிர்ந்து தன் போக்கில் வழி வகுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. அதே சமயம் திரண்டு நின்ற அவன் கண்ணீரும் அவள் கன்னத்தில் உதிர்ந்து அவளது கண்ணீருடன் சங்கமம் ஆகி ஓடியது.


கடைசிச் செய்தி
Production
ஹெச்எம்டி கடியாரத் தொழிற்சாலையின் ஒப்பற்ற சாதனை
பெங்களூர், ஏப்ரல் 6. கடந்த ஆண்டு ஹெச்எம்டி கடியாரத் தொழிற்சாலை (ரூ. 1.8 கோடி பெறுமானமுள்ள) 195,048 கடியாரங்களைத் தயாரித்து உற்பத்தியின் எல்லையை எட்டியுள்ளனர். சரி நுட்பமான மணிகாட்டும் திறனும் உறுதி வாய்ந்த வேலைப்பாடும் இணைந்த அக்கடியாரங்களின் விலை ரூ.100/-க்கும் குறைவே. ஒவ்வொரு மாடலும் 17 ஜுவல்கள், முழு லீவர், உடையாத மெயின் ஸ்பிரிங், காந்தம் எதிர்க்கும் தன்மை ஆகியவற்றை உடையது.
ஆடவருக்கு
ஜனதா ஜூபிலி மற்றும் ஜனதா.
பெண்மணிகளுக்கு:
சுஜாதா—
HMT ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் லிட்.
இந்தியா முழுவதிலுமுள்ள ஹெச்எம்டி விற்பனை நிலையம் எங்கும் கிடைக்கும்!
அல்லது தபால் மூலம் (10% விற்பனை வரியும், தவிர ரூ. 3.25 தபால் செலவும் சேர).
ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் ஃபாக்டரி ஜலஹள்ளி, பெங்களூர் - 31

சுதந்திரச் சுடரிணை நிரந்தரம் ஒளிர்ந்திடச் செய்வது எண்ணெய்


படை பதைக்கும் காட்டினிலோ, பனி மலைச் சாரலிலோ, பாலை மணற் பரப்பினிலோ, பாழும் சதுப்பு நிலத்தினிலோ—பாரத நாட்டின் எல்லையில் எங்கும் எழுந்த ஆபத்தை எதிர்த்து நிற்கும் பாதுகாப்பு முயற்சிகளுக்கு இன்றியமையாத உறவாக விளங்குவது எண்ணெய். டாங்கிகளையும் டிரக்குகளையும் நகரச் செய்வது எண்ணெய்; படைக்கலன்கள், தேவைப் பண்டங்கள் முதலியவற்றைக் கொண்டு போய்ச் சேர்ப்பதும், போக்குவரத்துப் பாதைகள் இயங்க உதவுவதும் எண்ணெய்.

பாதுகாப்புத் துறையோடு நெருங்கி ஒத்துழைக்கும் இண்டியனுயில், 'தாயின் மணிக் கொடி'யை நம் வீரர்கள் என்றும் தாங்கிப் பிடித்திட உதவி வருகிறது.

INDIANOIL

பொதுஜனதார வளமைக்கான
தேசியப் பொறுப்புறுதி.


இண்டியனுயில்
கார்ப்பொரேஷன் லிமிடெட்



மட சாம்பிராணி!

டி.கே.டி. துரைராசன்





மட சாம்பிராணி — இதுதான் நாங்கள் அவனை அழைக்கும் பெயர். அவனை என்றும் முத்துராமுவை. எங்களுடைய லாட்ஜிங்கில் எடுபிடி வேலை செய்பவன் அவன். எதை வைத்து அவனை அப்படி அழைக்கிறீர்கள் என்று கேட்கலாம். காரணம் எனக்குத் தெரியாது.

மூன்று மாதங்களுக்கு முன்பு—நான் இங்கே வந்த புதிது. ஒரு நாள். காலை வெகு நேரமாகியும் நான் உறங்கிக் கொண்டிருந்தேன். கதவுகளை உள்தாழ்ப்பாள் போட்டபடி. 'டம டம' என்று தொடர்ந்து கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுக் கண் விழித்துப் போய்த் திறந்தேன். ஒல்லியாக ஒட்டைச் சிவிங்கி மாதிரி இருந்த இவன் வலது கையில் துடைப்பத்தோடு நின்றிருந்தான். என்னைப் பார்த்ததும் பல்லெல்லாம் தெரியக் காட்டி, ''குட் மார்னிங் ஸார்!'' என்று துடைப்பம் பிடித்த கையை உயர்த்தினான். எனக்கு 'திக்'கென்று போய்விட்டது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த பக்கத்து அறை நண்பர் வேகமாக வந்து அவன் பிடரியில் ஒன்று போட்டார். தொடர்ந்து ''ஏண்டா மட சாம்பிராணி! இதுதான் நீ குட்மார்னிங் சொல்லும் லட்சணமா?'' என்று கேட்டார்.

''ஸாரி ஸார். மன்னிச்சிடுங்க ஸார்!'' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தபடியே அவன் மறுபடியும் துடைப்பம் இருந்த கையை உயரத் தூக்கியபோது எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அழகான 'முத்துராமு' என்ற பெயரில் இல்லாமல், 'மட சாம்பிராணி' என்ற பட்டப் பெயரோடு அறிமுகமான அவனை இன்னும் நான் அப்படித்தான் அழைக்கிறேன். தப்பித் தவறி, 'டேய் முத்துராமா!' என்று அழைத்துவிட்டால் யாரையோ அழைக்கிறார்கள் என்ற நினைப்பில் அவன் போய்க் கொண்டிருப்பான். 'மட சாம்பிராணி' என்ற வார்த்தை வந்தால்தான் திரும்புவான். அவனுடைய ரத்தத்தில் அந்தப் பட்டப் பெயர் அப்படி ஊறிப் போயிருந்தது.

ஒட்டைச் சிவிங்கி மாதிரி ஒல்லியாக இருப்பான் என்று சொன்னேனா? அப்படியே இருந்தாலும் முகத்தில்மட்டும் அலாதியான ஒரு களை இருக்கும். பெரிய கண்கள் யாரையும் கவர்ந்திழுத்துவிடும். அப்படிக் கவர்ந்துவிடுவதால்தான் எல்லோருக்கும் அவனிடத்தில் ஒரு தனி அன்பு. சில சமயங்களில் எடுபிடி ஆளாய் இருப்பான். இன்னும் சில சமயங்களில் நண்பனைப்

போல் உரிமையோடு பழகுவான். வேறு சில நேரங்களில் மனச் சுமைகளையெல்லாம் நூறுநூறு கிராமாகவும் கொஞ்சம் உயர்ந்த நிலையிலிருந்து ஆறுதலோ, புத்திமதியோ சொல்வான். இவ்வளவு இருந்தும் அவன் எங்களுக்கு மூத்தாரமு இல்லே; மட சாம்பிராணிதான்.

ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். நான் ஒரு கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். இவன் வந்தான். மாலையில் சாப்பிட்டுவிட்டு வைத்திருந்த காப்பி டம்ளரை எடுத்துக்கொண்டு, ''என்ன சார், படிக்கிறீர்களா?'' என்று கேட்டபடியே அருகிலிருந்த கட்டிலில் அமர்ந்தான். நான் புத்தகத்தை மூடினேன். சனியனை வைத்துக் கொண்டு சகுனம் பார்த்த மாதிரி இவனை வைத்துக் கொண்டு புத்தகம் படிக்கவாவது!

''என்ன சார் மூடிட்டீங்க. படிக்கிறதுக்கு நல்லா இல்லியா?'' என்று ஆரம்பித்தான் இவன். ஓய்ந்த நேரங்களில்தான் இவன் இம்மாதிரி உரையாடலில் ஈடுபடுவது வழக்கம். நான் ஒரு சிகரெட்டை எடுத்து வைத்துக் கொண்டு தீப்பெட்டியைத் தேடினேன். உடனே ''பீடி சிகரெட் சாப்பிடறதெல்லாம் தப்பு சார்'' என்று கூறியபடியே தன் ஜேபியிலிருந்து தீப்பெட்டியை எடுத்தான். கையோடு இரண்டு பீடிகளும் வந்தன.

அவனுடைய மட சாம்பிராணித்தனத்தை ரசித்தபடியே இருந்தேன் நான். ஒன்றும் பேசவில்லே. கொஞ்ச நேரம் கழித்து அவனுகவே பேச்சை ஆரம்பித்தான்.

''நீங்க ஏன் சார் இன்னும் கல்யாணம் பண்ணிக்காம இருக்கீங்க?''

''பொண்ணு கிடைக்கலேடா'' என்றேன் நான். அவன் நெற்றியை உயர்த்தி முகத்தைக் கோணலாக்கினன். பிறகு ''சார், நான் ஒன்று சொல்றேன். நீங்க கேலி செய்ய மாட்டீங்களே!'' என்று கெஞ்சலான தொனியில் கேட்டான்.

''என்னடா விஷயம்?''

''நீங்க கேலி பண்ணக் கூடாது'' என்றும் அவன் சத்தியம் வாங்காத குறையாய்.

''இல்லேடா, சொல்லு.''

''வேறொண்ணுமில்லே சார். நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'' என்று சொன்னபோது, வழக்கத்துக்கு முற்றிலும் விரோதமாக அவன் தலே தாழ்ந்து. குரலில் ஓர் அழுத்தம் விழுந்திருந்தது.

சிரிப்பாகச் சிரித்து, அவனைக் கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தாலும், அவனுக்குக் கொடுத்த உறுதிமொழியை நினைத்து ''எப்படா?'' என்றேன் கரிசனத்தோடு.

''அடுத்த வாரம் சார். வடபழனி முருகர் கோயில்லே'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் ''அட மட சாம்பிராணி!'' என்று கூவி விட்டேன் நான். இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணத்தை வைத்துக் கொண்டு இவன்பாட்டில் கல்லுளிமங்கனாக இருக்கிறானே என்று திகைத்துப் போன எனக்கு அவன் சொல்வது உண்மையா என்றே சந்தேகமாகி விட்டது. ஆனால் அவனே 'மட சாம்பிராணி' என்ற வார்த்தையைக் கேட்டதும் எப்போதும் இல்லாத கவலேயோடு ''ஏன் சார்? ஏன் சார் அப்படிச் சொல்றீங்க நீங்க?'' என்று பதறியவனுகக் கேட்டான்.

''ஏண்டா மட சாம்பிராணி; அடுத்த வாரம் கல்யாணம் என்கிறயே. இதென்ன விளையாட்டாடா?'' என்றேன் நான் எரிச்சலோடு. அவனுக்கு விளங்கவில்லே போலும்; ''என்ன சார் சொல்றீங்க?'' என்று குழம்பியவனுகக் கேட்டான்.

''கல்யாணம்கிறது எவ்வளவு பெரிய விஷயம்? அதை என்னமோ சினிமாவுக்குப் போறேன்னு சொல்ற மாதிரி சர்வ சாதாரணமாச் சொல்றியே?''

''பெரிய விஷயம்தான் சார். அதுனலென்ன? எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிச்சது. அந்தப் பொண்ணுக்கும் அவங்க வீட்டிலே உள்ளவங்களுக்கும் என்னைப் பிடிச்சது. அடுத்தது என்ன? கல்யாணந்தானே?'' என்றன் அவன் தர்க்கம் செய்கிற ரீதியில்.

எனக்கு வாய் அடைத்துப் போயிற்று: அவன் சொல்வதும் உண்மைதானே! திருமணத்துக்குத் தேவையானது என்ன? ஜோசியர்கள் சொல்கிற ஜாதகப் பொருத்தம் கிடக்கட்டும்; ஊரார் கவனிக்கின்ற சீர்வரிசைகள் இருக்கட்டும். அவையெல்லாம் மேலே பூசுகின்ற முலாம். அடிப்படைத் தேவைகள் என்ன? இரண்டு உள்ளங்கள். துணையாக இருக்கவும், அதே சமயத்தில் துணையைப் பெறவும் துடிக்கின்ற இரண்டு மனங்கள்: இங்கே அவை இருக்கின்றன என்னும் போது, கல்யாணம் ஒன்றும் பெரிய விஷயமில்லேதான்.

ஆனாலும் என்னுடைய தோல்வியை ஒப்புக் கொள்ளும் நேர்மை எனக்கு வரவில்லே; தொடர்ந்து ''அட மட சாம்பிராணி! நான் அதைச் சொல்லலேடா. ஒரு பொண்ணை வைத்துக் காப்பாற்றும் அளவுக்கு உனக்கு எங்கேடா வருமானம் வருது?'' என்று கேட்டேன்.

''ஓ! அதைச் சொல்றீங்களா?'' என்று அவன் மோவாயைத் தடவினன். பிறகு ''பரவாயில்லே சார். அந்தப் பொண்ணும் மாசத்துக்கு நாற்பது ஐம்பது சம்பாதிக்குது'' என்று கூறினன்: அப்போதுதான் எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லேயே என்ற நினைப்பு வந்தது. உடனே ''பொண்ணு யாருடா?'' என்று கேட்டேன்.

அவனுக்கு வெட்கமாக இருந்தது போலும்! மறுபடியும் ஒருமுறை தலையைக் குனிந்து கொண்டு சிரித்தபடி இருந்தான்.

''என்னடா சிரிக்கிறே?''

''ஒண்ணுமில்லே சார். அந்தப் பொண்ணை உங்களுக்குத் தெரியும்.''

தூக்கிவாரிப் போட்டது எனக்கு. காதும் காதும் ஒட்ட வைத்தாற் போல் இவன் கல்யாணம் செய்துகொள்ளப் போகும் பெண், எனக்கு முன் பின் தெரிந்திருப்பவளாவது? அப்படி எனக்குத் தெரிந்த பெண்ணைத்தான் இவன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறுனென்றால், ஒன்று இவன் அந்தஸ்தில் ஒருபடி உயர்ந்திருக்க வேண்டும்; அல்லது நாம் ஒரு படி தாழ்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் விநாடி நேரத்தில் கௌரவக் கணக்குப் போட்டுத் திகைத்துப் போனேன் நான். அந்தத் திகைப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருக்க, ''ஆமா





மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி

மந்தம். புளிப்பு, உப்புசம் மற்றும் பல் முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப வாடடர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Aiyars ATC-456 Tam

சார். நிச்சயமா உங்களுக்குத் தெரியும். நீங்க தினந்தோறும் அந்தப் பெண்ணைப் பார்க்கிறீங்க. போ நீங்க!'' என்றான் அவன்.

உடனேயே எனக்கு, தெரிந்த பெண்கள் நான் தினந்தோறும் பார்த்துப் போகின்ற பெண்கள் — அப்படி யார் இருக்கிறார்கள். அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களைத் தவிர?— பொன்னம்மாள் லீலாவுக்கு வரத் தொடங்கின. அவர்களில் யாராய் இருக்கும்? சே! இதெல்லாம் என்ன கண்ணாமூச்சி விளையாட்டு! யாரென்று கேட்டுவிட்டால் போகிறது.

''யாருடா அந்தப் பொண்ணு?'' என்று இனிய குரலில் கேட்டேன். அவன் ''ஓஹோ ஹோ'' என்று சத்தம் போட்டுச் சிரித்து விட்டான். அந்தச் சிரிப்போடு சிரிப்பாக ''பயப்படாதீங்க சார்!'' என்றான்.



'' ஊரிலிருந்து வரும் மாமாகிட்டே, காசு தா என்று கேட்காதே! அது அசிங்கம். தெரிஞ்சு தெரியாமக் கறக்கணும், தெரிஞ்சுதா?''

''மட சாம்பிராணி. இதிலே பயப்படறதுக்கு என்னடா இருக்கு? சொல்லுடா!''

''அதெல்லாம் இப்ப சொல்ல மாட்டேன் சார். நாளைக்கு இந்த நேரத்துக்கு போட்டோ கொண்டாந்து காண்பிக்கிறேன். அதுவரைக்கும் சஸ்பென்ஸ்...'' என்று கூறிவிட்டு, கொக்கு ஓடுவதுபோல் ஓடிவிட்டான்.

அன்று முழுவதும் அலுவலகத்தில் எனக்கு வேலையே ஓடவில்லை. பார்த்துப் போகிற பெண்கள் அனைவரையும் ஒரு மாதிரியாக நினைத்தபடியே பொழுதைக் கழித்தேன். மாலையில் அறைக்குத் திரும்பி வந்து, சாப்பிட்டுவிட்டு, எப்போது அவன் வருவான் என்று காத்திருந்தேன்.

ஒரு வழியாக அவன் வந்தான் — விஷமச் சிரிப்போடு. என்னுடைய ஆவலையும் பரபரப்பையும் வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டு ''வாடா மட சாம்பிராணி. முகத்திலே புது மாப்பிள்ளை ஜோர் வந்திருச்சே'' என்று வரவேற்றேன். ஆனால் அவனோ பரபரப்போடு ஜேபியில் கைவிட்டு ஒரு கவரை எடுத்தான். எடுத்தவன், ''என்னுடைய வருங்கால மனைவியைப் பாருங்க சார்!'' என்று அந்தக் கவரை என்னிடம் கொடுக்காமல் கையிலேயே வைத்திருந்தான்.

எனக்குப் பற்றி எரிந்துகொண்டு வந்தது. ''கொடுடா இப்படி, மட சாம்பிராணி! பெரிய ஆல்பிரட் ஹிட்ச்காக் காட்டம்' என்று கூறியபடி அவனிடமிருந்து அந்தக் கவரைப் பறித்து உள்ளே இருந்த போட்டோவை எடுத்துப் பார்த்தேன். பார்த்தவன் ஒரு விநாடி செயலற்றுப் போனேன்.

இவளா? இந்தப் பெண்ணா? இந்த நொண்டியா? எனக்கும் என்னோடு வேலை செய்யும் மற்ற நண்பர்களுக்கும் லாட்ஜிங்கில் இருந்து மத்தியானச் சாப்பாடு எடுத்து வரும் காமாட்சியையா இவன் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறான்? டிபன்காரியர்கள் நிரப்பிய கூடையைச் சுமந்துகொண்டு இடது காலை அழுத்த ஊன்றி, வலது காலை இழுத்து இழுத்து வைத்து, வெய்யிலில் வியர்வை சொட்ட நடந்து வரும் பரிதாபத்தைப் பார்த்து, 'ஆண்டவன் இவளை இப்படிப் படைத்து — இவள் வாழ்க்கையை இப்படி வருத்திவிட்டானே' என்று ஒரு கணம் மனத்தில் பொங்கும் கழிவிரக்கத்தால் சிரித்த முகம் காட்டி, ''என்ன காமு? இன்னைக்கு என்ன சாப்பாடு?'' என்று நாங்கள் தினம் தவறாமல் கேட்கக்கூடிய ஒரு வார்த்தை பேசும் இந்தப் பெண்ணையா இவன் மணம் செய்து கொள்ளப் போகிறான்?

நான் வைத்த கண் வாங்காமல் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது ''இந்தப் பெண்ணைத்தான் சார் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'' என்ற அவனுடைய குரல் என் செவிகளில் விழுந்தது. உடனே நான் என் பார்வையை அகற்றி, அவனைப் பார்த்தேன். பார்த்தபடியே புகைப்படத்தை நீட்டினேன். ''என்ன சார்? ஒன்னுமே பேசாமே நின்னுட்டீங்க?'' என்றான்.

''ஒன்னுமில்லே... எல்லா வகையிலும் எனக்குத் திருப்திதான்.... ஆனால்...?''

''நொண்டிப் பொண்ணுன்னு பார்க்கிறீங்களா?''

''நோ...நோ...அதில்லே... நான் சொல்ல வந்தது...'' என்று நான் மென்று விழுங்குவதற்கு முன், ''இல்லே சார்! நீங்க அதைத்தான் சொல்ல வந்தீங்க. எனக்குத் தெரியும். இருந்தாலும் அந்தப் பெண்ணை நான் ஏன் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு அதுக்குக் காரணம் எங்க அம்மாவும் ஒரு நொண்டி சார்'' என்றான் அவன்.

''அப்படியா?'' என்றேன் இளைய குரலில்.

''ஆமாம், சார். நொண்டின்னு தெரிஞ்சும் எங்க அப்பா ஏதோ கொஞ்சம் பணம் தர்றாங்கன்னு கல்யாணம் பண்ணிக்கிட்டாராம். நாளாக நாளாக நொண்டிங்கிற காரணத்துக்காக — அந்த ஒரே ஒரு காரணத்துக்காக எங்க அம்மாவைத் திட்டுறது, அடிக்கிறது என்னு இருந்தாராம். பிறகு வேறே ஒரு பொண்ணோடே எங்கேயோ ஓடிவிட்டார், எங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு. அதுக்குப் பரிகாரமா நான் ஒரு நொண்டியைக் கட்டிக்கப் போறேன். ஏன்? ஒரு ஆம்பிள்ளையினாலே ஒரு நொண்டிப் பொண்ணோட வாழ்க்கை நாசமாச்சு. ஆனா அவனோட மகனாலே இன்னொரு நொண்டிப் பொண்ணுக்கு வாழ்வு கிடைச்சதுன்னு இருக்கட்டும்'' என்று அவன் உணர்ச்சி வசப்பட்டு, கண்களில் நீர் மல்கப் பேசியபோது, அவன் எனக்கு மட சாம்பிராணியாகத் தெரியவில்லை. மனமும், குணமும் நிறைந்த உண்மையான சாம்பிராணியாக, மங்களமாகக் காட்சியளித்தான்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.



REGISTERED No. M. [illegible]

Registered as a Newspaper in Ceylon